நாவல் பாக்கம்

ஸ்ரீ அய்யா தேவநாத தாதாசார்ய ஸ்வாமி



சதாபிஷேக மலர்

25.7.1976.

With best

compliments

from

Mafatlal Group



ஸ்ரீநிவாஸப்பெருமாள்
நாவல்பாக்கம்



ஸ்ரீ பத்மாவதி தாயார்
(நாவல்பாக்கம்)

ஸ்ரீ:

ஸமர்ப்பணம்

अध्यासीन तुरङ्ग वक्त्र विलसज्जिह्वाग्रसिंहासनात्
आचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहे ।
यस्याऽसौ भजते कदाचि दजहद्भूमास्वयं भूमिकां
मग्नानां भविनां भवार्णव समुत्ताराय नारायणः ॥

''தத்வ, ஹித, புருஷார்த்தங்களைத் தகவாலறிவித்து நம் மனத்திருந்த அஜ்ஞான மென்னும் இருளை மாற்றிய வாசிரியனுக்கொரு கைம்மாற்றை மாயனும் அறிகில்லான்'' என்று ஸாதித்தஸ்வாமி தேசிகன் ''அவ்வாசிரியனைப் போற்றியுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்கு புகழ்சாற்றி வளர்ப்பதுமே சிஷ்யனது கடமை'' யென்றருளிப் போந்தார்.

எனவே நற் குடியிற்றோன்றி ஸதாசாரங்களை யனுஷ்டித்து ஆத்மகுண நிறைவோடு ஸாங்கமாக வேத மோதி ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் வேதாந்த சாஸ்த்ரத்தையும் கசடற அதிகரித்து நடமாடும் தெய்வம் போல் விளங்கும் ஆசார்யனை திருமலை சதுர் வேத சதக்ரது ராமானுஜ ஸித்தாந்த பாஸ்கர, தேசிக தர்சன துரந்தர, மஹா வித்வான் நாவல் பாக்கம் அய்யா ஸ்ரீ தேவநாத தாதயார்ய மஹா தேசிகனது சதாபிஷேகத்தை வெகு விமரிசையாகக் கொண்டாட வேண்டியது தம் கடமை யென்றுணர்ந்த சிஷ்யர்களும், பக்தர்களும் ஸ்ரீ ஸ்வாமியின் அனுமதியை வேண்ட, ஸ்ரீ ஸ்வாமி தம் திரு நக்ஷத்திரத்திற்காக எவ்வித ஆடம்பரக் கொண்டாட்டங்களும் கூடாதென்று நியமித்தாயிற்று.

உத்ஸாஹமிக்க தடஸ்தர்கள் ஸ்ரீஸ்வாமியை மேலும் வேண்டி நிற்க ஸ்ரீ ஸ்வாமி ''ஸத்கார்யம் செய்ய உங்களுக்கு அபிஸந்தி இருந்தால் நாவல் பாக்கத்தில் திருக்கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ பத்மாவதீஸமேத ஸ்ரீநிவாஸப் பெருமாளுக்கு ஸஹஸ்ர கலசத்திரு மஞ்சனமும அதற்கு அங்கமாகக் கோவிலில் வேதபாராயணங்களும் செய்யலாம்'' என்று க்ருபையுடன் நியமித்தாயிற்று. ஸஹஸ்ர கலசத் திருமஞ்சனம், வேதபாராயணம், வித்வத் ஸதஸ், ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்தக்ரந்தங்களை அச்சிடல் போன்ற கார்யங்களை இனிது நிறை வேற்ற ஸமிதியொன்றை அமைத்துச் செயல்படத் தொடங்கினர் பக்தர்கள்.

இவற்றை நிறைவேற்றுவதற்கான பொருளைப் பெறுவதற்கு ''சதாபிஷேக மலர்'' ஒன்றை வெளியிடலாம் என்று ஸமிதி முடிவு செய்தது.

இம்மலர் நல்லமுறையில் வெளிவருவதற்குப் பெரிதும் உதவிய ஸ்ரீ உ. வே. இளங்காடு G. கிருஷ்ணமாசாரியர் ஸ்ரீ உ. வே S D. ஸ்ரீநிவாஸாசாரியர் (பம்பாய்)

ஸ்ரீ உ. வே. நாவல்பாக்கம் சித்தியா ரங்கநாத தாதாசாரியார் (கல்கத்தா) ஸ்ரீ உ. வே. S. கோதண்டராமய்யங்கார் (டில்லி) ஸ்ரீ உ. வே. நாவல்பாக்கம் N. G. ராமானுஜதாதாசாரியார் ஸ்ரீ உ வே. இளங்காடு ஸாமி - ஸுந்தராசாரியார் ஆகியவர்களுக்கு க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இம் மலரில் வ்யாஸங்களை எழுதிய மஹான்களுக்கு அனந்த ப்ரணாமங்களை ஸமர்ப்பிக்கிறோம். இம்மலருக்குப் பண உதவி செய்த ஆஸ்திக தனிகர்களுக்கும் விளம்பரங்களையுதவிய நிறுவனங்களுக்கும் எம்நன்றி என்றைக்கும் உரியது.

இம் மலர் வெளியாவதற்குத் தூய படிவங்களை எழுதியும் பிழைகளைய உதவியும் ஊக்கத்துடன் பணியாற்றிய ஒரத்தி வேலாமூர் ரங்காசாரியார், கொத்திமங்கலம் பத்மநாபாசாரியார் நாவல்பாக்கம் தே. ஆ. யஜ்ஞவராஹ தாதாசாரியார் வீராபுரம் வேங்கட தீக்ஷிதர் கொத்திமங்கலம் கோபாலசக்ரவர்த்தி, நாவல்பாக்கம் N. V. வரதாசாரியார், N. V. ராமானுஜாசாரியர் ஆகியோர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஸஹஸ்ரகலசத் திருமஞ்சனத்திற்குக் கணிசமான பொருளைக் கொடுத்துதவியதற்காகவும் ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்த "வேதாந்த வைஜயந்தீ" என்னும் நூலின் முதல் பாகம் வெளி வருவதற்கான முழுப்பொருளையும் கொடுத்துதவியதற்காகவும் ஸ்ரீ உ. வே. இளங்காடு G. கிருஷ்ணமாசாரியருக்கு க்ருதஜ்ஞதையைத் தெரிவிக்கிறோம்.

இம் மலர் நன் முறையில் வெளி வருவதற்கு உதவிய சென்னை ரத்னம் ப்ரஸ் காரர்களுக்கும், குறைந்த செலவில் அழகிய "ப்ளாக்குகளைத்" தயாரித்தளித்த V. K. கமர்ஷியல் ப்ளாக் மேக்கர்ஸ் சென்னை-14. என்னும் நிறுவனத்திற்கும் எல்லா நன்மைகளையும் அருளுமாறு அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்துறையும் இறைவனை இறைஞ்சி இம் மலரைச் சதாபிஷேகம் கண்டருளும் நம் ஸ்வாமியின் திருவடித்தாமரைகளில் பக்தி பூர்வகமாக ஸமர்ப்பித்து மனநிறைவு கொள்கிறோம்.

சதாபிஷேக ஸமிதியார்



Navalpakkam Mahavidvan Sri U. Ve. Ayya Devanatha Thathacharya Swami Sathabhisheka

CELEBRATION COMMITTEE

Chairman :

Sri A. N. S. Raghavan, F.C.A.

Vice-Chairmen :

Sri S. D. Srinivasan, M.A.,
,, R. Raghunatha Patrachariar
,, G. K. Chari
,, R. Narayanan, M.A., B.L.,

Secretaries :

Sri K. S. Padmanabhan
,, N. K. Ramanuja Thathachariar

Treasurer :

Sri V. G. Rangachariar

Committee Members :

Sri N. Ranganatha Thathachariar
,, N. R. Kuppusami Iyengar, B.A., B.L.,
,, K. S. Raghavan
,, N. S. Ramanuja Thathachariar
,, M. G. Seshadri
,, S. V. Rajan
,, N. G. Ramanuja Thathachariar
,, Dr. Kannan, M.Sc., Ph.D.,

கரூர் வைஸ்யா பாங்க் வழங்கும்

ஆதி சங்கரர் தீர்த்த யாத்திரை டிபாசிட் திட்டம்.



अयोध्या मधुरा माया काशि कांचि अवन्तिका ।
पुरी द्वारवती चैव सप्तैते मोक्ष दायकाः ॥

ரூ. 5,000 டிபாஸிட் செய்தால் 12 ஆண்டுகள் கழித்து ரூ. 10,000 திரும்பப்பெறலாம். அத்துடன்வேண்டிய வசதிகளுடன் கீழ்க்கண்ட புனிதத்தலங்கட்கு யாத்திரை செய்ய பாங்க் ஏற்பாடு செய்யும்.

மதுரா • ஹரித்வார் • ரிஷிகேஷ் • வாரணசி • அலகாபாத் •
கயா • விஜயவாடா • பத்ராசலம் • திருப்பதி •

டில்லி, ஆக்ரா போன்ற இடங்களைப் பார்க்க வாய்ப்பு உண்டு.

முழு விவரங்களுக்கு எமது தமிழக, ஆந்திரா, கர்னுடக மாநிலங்களிலுள்ள கிளைகளை அணுகவும்.

தங்கள் சேவையில்

கரூர் வைஸ்யா பாங்க் லிட்.

பதிவு அலுவலகம்:
கரூர்-639001

P. G. சரண்யன்,
சேர்மன்

CHARI

Manufacturers of

QUALITY NILGIRI TEAS

The Kil Kotagiri Tea & Coffee Estates Co., Ltd.

6/117, Race Course Road,
COIMBATORE-641018.
(TAMIL NADU)

Phone: 30351-53

Telex: SHREE CB - 370

Gram: KAYKAY

Phone: 431088

VASU CHEMICAL INDUSTRIES

Manufacturers and Suppliers of wax Crayons,
Sodium Hyppochlorite Bleaching Solution
and Alumina Hydrate.

Plot No. 26
Guindy Industrial Estate (North)
Ekkaduthangal, MADRAS-97.

With best compliments from :

Madura South India Corporation
Private Limited.,

YARN & CLOTH DEPT.

45, MOORE STREET,
MADRAS-600001.

Distributors :

MADURA COATS YARN
&
MADURA FABRICS.

Telephone : 23329 Telegram : "MUSIC"

Elite Engineering Enterprises

77/1, INDRA BISWAS ROAD,

CALCUTTA-37. Phone : 55-7096

Manufacturers of :

Jute Mill, Paper Mill, Air Conditioning & other Indust ial Machine Spare parts.

The Bengal Paper Mill Co., Ltd.

Regd. Office :

14, Netaji Subhas Road, Calcutta-1.

Mill:

RANIGANJ, WEST BENGAL.

Maufacturers & Exporters of :

FINE QUALITY

"TIGER" BRAND PAPER

For

Strength & Durability

CHETTINAD CEMENT

Manufacturers;

CHETTINAD CEMENT CORPORATION LTD.,

6, ARMENIAN STREET, MADRAS-600 001.

Grams: "BESTCEMENT" Phone: 21106

Factory:

Kumararajah Muthiah Nagar,
PULIYUR (KARUR) TRICHY DISTRICT.

Grams: "CEMENT" Phone: 144

The Nungambakkam Saswatha Dhana Rakshaka Nidhi Ltd.,

N. S. D. R. NIDHI BUILDING

7, Rama Naicken Street, MADRAS-34.

Estd. 1883. Phone: 85681

RECURRING DEPOSITS

Liberal interest is given on each unit of Recurring Deposit subscribed at Re. 1/- per month as below :

Month	Interest Rs.	Month	Interest Rs.
12	0—50	72	28—00
36	5—40	84	37—00
60	15—70	120	84—20

ADDITIONAL INTEREST (BONUS) allowed on paid-up Recurring Deposits at credit on the 31st December every year.

FIXED DEPOSITS

Month(s)	(%)	Year(s)	(%)
1	6%	1	9%
3	6½%	2	9½%
6	7%	3	10%

For 5 years & above 10½%. ½% more for Rs. 10,000/- & above. Above Rs. 25,000- 12% for not less than ONE YEAR. INTEREST PAYABLE MONTHLY. Existing Deposits are also allowed interest at enhanced rates whenever rates are enhanced for fresh deposits

SAVINGS DEPOSITS

Interest allowed at 6% per annuam on daily balances.
Further particulars can be had at the Office fo THE NIDHI.

ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA
ASOKA

Chewers' Favourite

ASOKA

SCENTED BETELNUT POWDER

LOOSE POWDER AVAILABLE IN 100 gms ALUMINIUM FOIL POUCHES

MANUFACTURERS

M/S M.K. KRISHNA CHETTY :

POST BOX:3702 : : COIMBATORE-641018

Phone: 22006 Grams: ASOKA

With the best compliments from:

CHETTINAD CORPORATION PRIVATE LIMITED

Regd. Office. 18/17, GREENWAYS ROAD,

MADRAS - 600028.

INDUSTRIAL PERFUMES LIMITED

(A TATA - ROURE DOPONT ENTERPRISE)

Leading Manufacturers
of
PERFUMERY COMPOUNDS
AROMATIC CHEMICALS
for

SOAPS
AGARBATTI
SNUFF
COSMETICS
CHEWING TOBACCO
PANMASALA

etc.

OFFICE & FACTORY

HAY BUNDER ROAD, : TANK ROAD, P.O.,
BOMBAY - 400 033,
Phone: 370161.

You are cordially invited to make use of the
PERSONALISED SERVICE
FOR
TRAVEL BY
AIR - SEA - RAIL
THROUGHOUT THE WORLD

Bharat Travel Service (P) Ltd.,

314/215, Linghi Chetty Street,
MADRAS-600 001.

Telephone; 23996 (PBX 3 lines) & 24567 Gram: EXCURSION

Branch:

3/2, St. Mark's Road, BANGALORE-1.

Telephone: 53830 & 54255 Grams: EXCURSION

PAPERFECTION!

J K Paper: a story of dynamism, progress and growth.

Boards

- Straw Board
- Grey Board
- Duplex Board
- Pulp Board (Surface sized)
- Art Board
- Chromo Board

Papers

- White Printing
- Coloured Printing
- Maplitho Printing (Surface sized)
- Offset Printing
- Art Paper
- Chromo Paper
- Manifold
- Duplicating
- Cream Wove
- Coloured Wove
- Bank/Bond
- Airmail
- Account Book S/c
- Typewriting
- Commercial Acid-Free Tissue
- Carbonising Base Tissue
- Foil Lining Tissue
- Fire Works Fuse Tissue
- White Poster
- Coloured Poster
- Dyeline Base Paper

J K PAPER
STRAW PRODUCTS LTD.

ASP/SP-3/75

Wolf

Portable Electric Tools



Marketed by:

RALLIS INDIA LTD.,

BOMBAY / DELHI / CALCUTTA / MADRAS

With best compliments from

The B.N.K. Press Private Ltd.,

"Chandamama Buildings"

VADAPALANI, MADRAS-600 026.

Phone : 423423

With best compliments from

Kel Components Ltd.

(MADRAS)

(Subsidary of Murphy India Ltd)

Suppliers of

ELECTRO-MECHNICAL COMPONENTS

FOR

RADIOS/TV/STEREOS

Kel Components Ltd.

4842/24, Daryaganj

DELHI-110006.

'GANGES' FOR QUALITY JUTE GOOD

Manufacturers of :

- CANVAS
- TARPAULING
- SPECIAL & ORDINARY HESSIAN INCLUDING FINE
- CARPET BACKING
- ALL SACKING
- TWINE

The Ganges Manufacturing Company Limited.

Head Office :

7, Council House Street,
CALCUTTA-1.
Phone : 23-6181
Gram : GANGJUTMIL
Telex : 7293 JAIKAYCAL.

Mills :

BANSBERIA :
Dist. HOOGHLY
Phone : Tribeni 441 & 442

With Respects from:

Ultraments & Pigments Limited
BOMBAY

Manufacturers of:

"OOB" Blue
&
"RAMYA" Detergents.

चोदयित्री सूनृतानां चेतन्ती सुमतीनां । यज्ञन्दधे सरस्वती ।
पावीरवी कन्या चित्रायुस्सरस्वती वीरपत्नी धियन्धात् ।
ग्नाभिरच्छिद्रं शरणं सजोषादुराधर्षं गृणते शर्मयं सत् ॥

"सरस्वती सूक्तम्"

Murthy Tutorial Institute

LUZ, MADRAS-600 004.

CHANDAMAMA

A delightful story magazine
(issued in 12 languages)

Educates and enlightens the young
Over 7,00,000 families buy every month

●

VIJAYACHITRA (Telugu) : : VIJAYACHITRA (Kannada)

and

BOMMAI
(Tamil)

Premier Film Journals of the South

★

VANITHA (Telugu) & MANGAI (Tamil)

Fortnightlies exclusively to serve, educate and evaluate the deeds of today's housewife.

●

For Details:

DOLTON AGENCIES

'CHANDAMAMA BUILDINGS'

MADRAS - 600 026-

ஸ்ரீ பேரருளாளன்
(காஞ்சீபுரம்)

ஸ்ரீ:

சரணாகதிப்ரபாவம்

[மதுராந்தகம் ஸ்ரீ. உ. வே. வித்வான் தி. ஈ. வீரராகவாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]

“வாழியருளாளர் வாழியணியத்திகிரி
வாழியெதிராசன் வாசகத்தோர்—வாழி
சரணாகதியென்னும் சார்வுடன் மற்றொன்றை
அரணாகக் கொள்ளாதாரன்பு”

ஸ்ரீஹஸ்திகிரி மாஹாத்ம்யத்தின் முதல் பாசுரமானவிதில் ப்ரமாணமிது; ப்ரமேயமிது; ப்ரமாதா இன்னார் என்பதைத் தெளிவிக்கின்றார் தூப்புல்வள்ளல்.

‘प्रमाणं च प्रमेयं च प्रमातारश्च सात्विकाः’ என்று தொடங்கினார் ஸ்ரீமத் ச்ருதப்ரகாசிகையில் பட்டர். இவை மூன்றும் ஒன்றுக்கொன்று பிரியாதவை. இவற்றுள் ஒன்றில்லையேல் மற்றிரண்டுமில்லை.

வாழியருளாளர்—கருணைக்கடலாய் அதே திருநாமம் கொண்ட ஸ்ரீ தேவாதிராஜன் ப்ரமேயமிது.

सामान्यबुद्धिजनकाश्च सदादिशब्दा
स्तत्वान्तरभ्रमकृतश्च शिवादिवाचः ।
नारायणेत्वयि करीश वहन्त्यनन्यं
अन्वर्थवृत्तिपरिकल्पित मैककण्ठ्यम् ॥

என்று ப்ராமாணமனைத்துக்கும் பரமப்ரமேயம் பேரருளாளனே என்பதாக வரதராஜ பஞ்சாசத்திலே நிரூபித்தருளினார் தேசிகனே.

வாழியணியத்திகிரி—பேரருளாளனுக்கும் ப்ராப்யமானஇடம். இந்திரனுடைய வாஹனமான ஐராவதம் தனது தவப்பெருமையால் மலைரூபமாய்ப் பேரருளாளனை தரிசித்துக் கொண்டிருப்பதாகப் புராணவரலாறு. ப்ரமேயத்தை நமக்கெல்லாம் ப்ரமேயமாக்கியது அத்திகிரியன்றோ? ‘एष ईश इति’ என்று தொடங்கும் வரதராஜஸ்தவத்தில் ஆழ்வான் அனுஸந்தானத்தை நினைக்கவும். அதாவது வேதமானது இன்னார் பரமபுருஷனாகிய ஈசன் என்று பாக்யஹீநருக்குத் தெளிவிக்காது. ஹஸ்திகிரியில் மண்ணவரும் விண்ணவரும் விரும்பும்படி எழுந்தருளிய தேவராஜனைப் பரமபுருஷனாக நிர்ணயிக்க மாட்டாருளரோ என்று.

“அத்தனிடமாம் அத்திகிரிபத்தர் வினை தொத்தறவருக்கு மணி அத்திகிரியே” என்று தாமே அருளிச் செய்தார் தேசிகன். பேரருளாளனளவும் செல்ல வேண்டா. அவனிருக்கும் அத்திகிரியே பாபமனைத்தையும் போக்குமென்றாரிங்கு. அல்லது (வாழியணி அத்திகிரி) அத்-திகிரி என்று கொண்டு அவனுக்கு அணியாக விளங்கும் அந்தத்திருவாழி வாழி என்னவுமாம். அணி-அத்திகிரியே என்றாரிறேதாம்.

திக்கஜங்களால் பூஜிக்கப்பட்டவன் பேரருளாளன். அதனால் ‘அத்திகிரி என்று திருநாமம்’ என்று புராணப்ரஸித்தி.

இனி இரண்டாமடி — (வாழி எதிராசன் வாசகத்தோர்) ப்ரமாணமின்னாரென்றபடி. ‘निर्विष्टं यतिसार्वभौमवचसां आवृत्तिभिर्यौवनं’ என்றும் ‘शारीरकप्रवचनव्रतमाद्रियेथाः’ என்றும் பாஷ்யத்தை வாசித்துப் ப்ரவர்த்திப்பித்தல் என்றும் ஸ்ரீபாஷ்யகாரர் நியமனம் ப்ரமாணம் என்றபடி.

இதற்குமேல் பகுதிமுழுதும் சரணாகதியின் பெருமையைப் பற்றியது. சரணாகதியாகிய உபாயத்தைத் தவிர்த்து கர்மஜ்ஞானபக்தி களை உபாயமாகக் கொள்ளாதார் என்றபடி.

सत्कर्मनिरताः शुद्धाः सांख्ययोगविदस्तथा ।
नार्हन्ति चरणस्तस्य कलां कोटितमीमपि ॥

என்றுப்ரமாணம். तत् प्राप्तये च तत्पादाम्बुजद्वयं प्रपत्तेरन्यत्र मे कल्पकोटिसहस्रेणापि साधनमस्तीति मन्वानः' என்று எதிராசன் வாசகமானகத்யம். 'तस्य च वशीकरणं तच्छरणागतिरेव' என்று ஸ்ரீபாஷ்யம்.

ப்ரமேயம் இரண்டுவிதம். ஸித்தம், ஸாத்யம் என்று. ஸித்தப்ரமேயம் பேரருளாளன். ஸாத்யப்ரமேயம் சரணாகதி. இவற்றைத் தெரிவிக்கும் ச்ருதீதிஹாஸ பகவத்சாஸ்திரங்கள் முதலியனப்ரமாணம். பாதுகாஸஹஸ்ரத்திலும் இம்மூன்றையும் வகுத்தருளினார்

जयति यतिराजसूक्तिः जयति मुकुन्दस्य पादुकायुगली ।
तदुभयधनास्त्रिवेदी मवन्ध्ययन्तो जयन्ति भुवि सन्तः ॥

என்று முதல்பாதத்தில் ப்ரமாணம். இரண்டாம்பாதத்தில் ப்ரமேயம். மேல்பகுதி முழுதிலும் ப்ரமாதாக்கள் நிரூபிக்கப்பட்டிருப்பதை இங்கு அனுசந்திக்கவும். 'வாழிசரணாகதி என்னும் சார்வுடன் மற்றொன்றை அரணாகக் கொள்ளாதார்' எனவேண்டியிருக்க அவர்களுடைய அன்புக்கு வாழி என்றது சரணாகதிக்கு மஹாவிச்வாஸம் ஆவச்யக மென்பதற்காக. அன்பு—மஹாவிச்வாஸம் என்றபடி.

மஹாவிச்வாஸம் :

வைதிககர்மங்கள் எல்லாவற்றிலும் விச்வாஸம் அபேக்ஷிதமே. சரணாகதியிலோ மஹாவிச்வாஸம் வேண்டும். எனெனில் "ஒருக்காலே சரணாக அடைகின்றார்க்கும்" என்றபடி. சரணாகதியானது ஸாங்கமாக ஸக்ருத்கர்த்தவ்யம். க்ஷணகாலஸாத்யம். இதைக் கொண்டு ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் கிட்டாதபரம புருஷார்த்தத்தை இத்தேஹாவஸானத்திலேயே பெறுகிறான் சரணாகதன். இது ஸம்பாவிதமோ ? என்று ஆஸ்திகருக்கும் ஸந்தேஹம் வரக்கூடும். அது கூடாது. அகிஞ்சனனாய், அநந்யகதிகர்களான அதிகாரிகள் விஷயத்திலே பேரருளாளனான ஸ்ரீய:பதி இப்படியொருவிசேஷானுக்ரஹம் செய்கிறான் என்று சாஸ்திரங்கள் ஏகமுகங்களாகத் தெளிவிக்கின்றமையால் நம்போன்ற அசக்தாதிகாரிகளுக்கும் சரணாகதியொன்றாலே இப்பேறுபெறத்தட்டில்லை என்று மஹாவிச்வாஸம் வேண்டும். இது இல்லாதவன் சரணாகதிக்கு அதிகாரியுமன்று; சரணாகதிக்கு முக்யமான அங்கமுமவனுக்கில்லை.

மஹாவிச்வாஸத்திற்குக் காரணங்கள் ஐந்து. அவற்றை ஆசார்யகடாக்ஷத்தினால் தெளிந்தவனுக்கு மஹாவிச்வாஸம் நிச்சயமாய்க்கிட்டும். அவையாவன (1) மறுக்கவொண்ணாத புருஷகாரம். பிராட்டியானவள் அகலகில்லேனிறையுமென்று அணுகி இருப்பதால் நாம் அவனைக்கிட்டவொண்ணாத அபராதங்களை யெல்லாம் க்ஷமித்து விடுவனீச்வரன். அந்தப்புர பரிஜனவிஷயத்தில் அரசன் அவ்வனுக்ரஹம் செய்யக் காண்கிறோமன்றோ. (2) ஸ்ரீகாந்தனுக்கும் நமக்கும் ஒழிக்க ஒழியாத ஸம்பந்தம். எம்பெருமான் ப்ரபத்தியாகிய வ்யாஜத்தாலே ப்ரஸன்னனாய் உடையவன் உடைமையை ரக்ஷிக்குமாம்போல தாயதநம்போல நமக்கு ஸ்வத: ப்ராப்தமான மோக்ஷ புருஷார்த்தத்தைத் தரும். (3) நிருபாதிகமான காருண்யம். அல்பவ்யாஜத்தாலே சுஜனஸார்வ பௌமன் வசீக்ருதரானாப் போலே நமது இச்சரணாகதியாகிற சிறியவ்யாபாரத்தைப் பெரிதாகக் கொண்டு கிருதஜ்ஞனாய்ப் பலம் தரும். (4) ஸஹகாரியையபேக்ஷியாத பகவத்ஸங்

கல்பம் மற்று முள்ளபக்தியோகம் முதலிய வற்றுக்கு விளம்பித்துப் பலம் தருகிறுனே யாகிலும் புகலொன்றில்லாத சரணுகதன் விஷயத்தில் பரமோதாரனுன யெம்பெருமான் காகவிபீஷணுதிகளுக்கு அப்பொழுதே பலம் தந்தருளினுப்போல நாம் கோலின காலத் திலே பலம்தரும். (5) நாம் பெறும் ப்ரயோ ஜனமே தன்ப்ரயோஜனமாகக் கொண்ட வனீச்வரன். ஆச்ரிதனுக்குத்தான் செய்யும் ப்ரயோஜனத்தைத் தாம்பெறும் ப்ரயோஜன மாகக்கொண்டு ஸார்வபௌமன் தனது குமாரனேடொக்கக்கிளி முதலிய பக்ஷிகளுக் குப் பாலூட்டி உகக்கு மாபோல தரம்பாராது புருஷார்த்தம் தரும். இவ்வைந்தையும் ஸதா சார்யகடாக்ஷத்தாலே தெளிந்தவனுக்கல்லது மஹாவிச்வாஸம் பிறவாது. இம்மஹாவிச் வாஸத்தின் பெருமையை நினைத்தே வாழி... அன்பு என்று வாழ்த்தினுன் தேசிகன்.

பக்தியோகமானது ஐச்வர்யம், கைவல்யம் மோக்ஷம் ஆகிய ஸர்வபல ஸாதனமாகிருப் போல் ப்ரபத்தியும் ஸகலபல ஸாதனம். இதை;

तावदार्तिः तथावाञ्छा तावन्मोहः तथासुखं ।

यावन्न याति शरणं त्वामशेषाघनाशनं ॥

என்று மஹரிஷி வெளியிட்டார்.

'ஸ்ரீமத் ராமாயணம் தீர்க சரணுகதி:' என் ருர்கள் ஆசார்யர்கள். அதில் பாலகாண் டம் உத்தரகாண்டமளவாக சரணுகதி தர்மமே கோக்கப்பட்டுள்ளதைக் காணலாம். (1) சக்ரவர்த்தி யக்ஞத்தில் தேவர்கள் விஷ்ணுவை சரணுகதி செய்து பயன் பெற் ருர்கள். (2) அயோத்யா காண்டத்தில் பரதன் சரணுகதி "மரவடியைத் தம்பிக்கு வான்பணையும் வைத்துப் போய்வானேர் வாழ" என்றபடி ஸபலமானதைக் காண லாம். (3) த்ரிசங்கு சுநச்சேபர்கள் விச்வாமித்ரரைச் சரணுகதி செய்து பயன் பெற்ருர்கள். (4) காகாசுரன் சரணுகதி ஸபலமானதையும் அதேகாண்டத்தில் காண் கிரேும். இவ்விஷயம் சுந்தர காண்டத்திலே பிராட்டி சிறிய திருவடிக்குச் சொன்ன அடையாளங்களில் ஒன்று. அதே காண்டத் தில் ப்ரக்ஷிப்தஸர்க்கமாயு முள்ளது. (5) ஆரண்ய காண்டத்தில் மஹர்ஷிகள் சரணு கதி ஸாபல்யம் (6) கிஷ்கிந்தா காண்டத்தில் சுக்ரீவ த்ரிஜடை சரணுகதியின் ஸாபல்யம். (7) சுந்தர காண்டத்தில் த்ரிஜடை சரணு கதி (8) யுத்த காண்டத்தில் விபீஷண சரணுகதி (9) உத்தர காண்டத்தில் ராவ ணன் பாட்டன்மாரான ராக்ஷஸர்கள் ஓடிப் போகச் செய்தேயும் வதம் செய்யும்போது நாராயண தர்மமாகிய சரணுகதிஸம்ரக்ஷ ணமே தனக்கு முக்யமென்று ஸ்ரீவிஷ்ணு அவதாரஸ்தனுன தாமே வெளியிட்டு அருளி ஞர். மஹாபாரதத்தில் த்ரௌபதி சரணு கதி. இப்படி இதிஹாஸங்களிலும், பகவத் சாஸ்த்ரங்களிலும், ச்வேதாச்வதரம் முதலிய உபநிஷத்துக் களிலும் சரணுகதி வைபவம் ஸுஸ்பஷ்டமானது.

ப்ரபந்நஸந்தான கூடஸ்தரான ஆழ்வார் களனைவரும் சரணுகதி என்னும் சார்வுடன் மற்றென்றை அரணுகக்கொள்ளாதவர்களே. ஸ்ரீமந்நாதமுனி, ஸ்ரீமத்யாமுநமுநி, ஸ்ரீமத் ராமானுஜமுநிகளாகிய முநித்ரய ஸம்ப்ரதா யத்தில் கிடாம்பியாச்சான் வழியாக வந்த சரணுகதியைத் தேசிகன் ஸ்தாபித்தருளி இன் றளவும் அடியார்களான நாம் அனுஷ்டித்துப் புருஷார்த்தம் பெற்று வருகிறும்.

நிகமநம் :

சதாபிஷேகம் பெறும் ஸ்ரீ உ. வே. அய்யா ஸ்வாமி உதிதோதிதமான குலத்தில் அவ தரித்து ஹயக்ரீவகடாக்ஷம் பெற்ற ஸ்ரீமதண் ணயார்யமஹாதேசிகனுடைய ப்ரியப்ரசிஷ்ய பரம்பரையில் வேதாந்த ஸம்ப்ரதாயம் பெற்று ஆசார - ஆத்மகுண - உபாய - புருஷார்த்த விசேஷங்களாலே "தானே தனக்குவமன்" என்று நினைக்கும் வகையில், "அதீதம், அத்யாபிதம், ஆர்ஜிதம் யச:" என்றபடி பல சிஷ்யர்களுக்கு ஸாமாந்யவிசேஷ சாஸ்த்ரங் களைப்ரவசனம் பண்ணியும் "ஓதி ஓதிவைத் தாதியாய் வரும்" என்றபடி வேதபாரங்கத ராய்ப்பலருக்கும் ஓதிவைத்தும். "उपमान मशेषाणां साधूनां यस्सदाभवत्" என்றபடி வாழ்ந் திடுக.

अय्याश्रीदेवनाथार्यशताब्द्यामुत्तमोत्सवे ।

श्रीवीरराघवार्येण तस्मै व्यासस्समर्प्यते ॥

———

ஸ்ரீ

பக்தி

[ஸ்ரீ உப. வித்வான் திருக்கள்ளம் நரஸிம்ஹராகவாசார்ய ஸ்வாமி]

பரமபுருஷார்த்தமான மோக்ஷத்திற்கு ஸாதனங்கள் பக்திப்ரபத்திகள். இவற்றில் ஏதாவதொன்றைச் செய்தவனுக்குத்தான் மோக்ஷம் கிடைக்கும் என்பது ஸ்ரீராமானுஜஸித்தாந்தம்.

भक्त्यापरमयावापि प्रपत्यावा महामते ।

प्राप्योऽहं नान्यथा प्राप्यः.........

என்கிறபகவத்வசனம் இதற்கு மூலம். மற்றும் பல ப்ரமாணங்களும் இதை உறுதிப்படுத்துகின்றன.

மோக்ஷஸாதனமான பக்தியானது பரபக்தி என்றும் பக்தியோகம் என்றும், உபாயபக்தி என்றும் பேசப்படுகிறது 'तमेवविदित्वा अतिमृत्युमेति' 'तमेवंविद्वानमृतइह भवति' 'नान्यः पन्था अयनायविद्यते' முதலான உபநிஷத் வாக்யங்கள் ப்ரஹ்மஜ்ஞானமே மோக்ஷஸாதனம்; ப்ரஹ்மத்தைப் பெறுவதற்கு ஜ்ஞானத்தைத் தவிர வேறு உபாயம் கிடையாது'' என்கின்றன. ''ப்ரஹ்மப்ராப்தி ஸாதநமாக வேதாந்தங்களில் கூறப்பட்ட ஜ்ஞானமானது கேவலம் வாக்ய ஜன்யமான வாக்யார்த்தஜ்ஞானமன்று. தன்மூலமான உபாஸனாத்மக ஜ்ஞானமே என்பதை ''अतो वाक्यार्थज्ञानादन्यदेव ध्यानोपासनादि शब्दवाच्यं ज्ञानं वेदान्तवाक्ये विधित्सितम्'' என்கிற ஸ்ரீபாஷ்யஸூக்தியும்,

ज्ञानात् मोक्षोपदेशेहि तत्पूर्वोपासनादिना ।

उपासनादि रूपाद्वा ज्ञानात् मोक्षोविवक्षितः ॥

என்கிற ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரதிவ்ய ஸூக்தியும் தெளிவுபடுத்தியுள்ளன.

தியானமாவது ध्रुवास्मृतिः அதாவது தைலதாராவிச்சின்ன ஸ்ம்ருதிஸந்ததி: விஜாதீய ப்ரத்யயாந்தராஸம்வலித ஸ்ம்ருதிஸந்ததி: என்றபடி. எண்ணெயைப் பெருக்க விட்டால் இடைவெளியின்றி தாரையாக விழுவது போல விச்சித்தி ஏற்படாமல் அநவரதம் எம்பெருமானையே நினைப்பது; எம்பெருமானைப் பற்றிய நினைப்பின் தொடரில் மற்றொன்றின் நினைவு குறிக்கிடாமல் இருக்க வேண்டும். இந்த த்யானமானது தர்சனஸமானாகாரமாக ஆகவேண்டும். भवतिच संस्मृतेः भावनाप्रकर्षात् दर्शनरूपता दर्शनसमानाकारता. ஒரு வஸ்துவைக் கண்களால் பார்க்கும் போது அதைப் பார்க்கிறோம் என்கின்றனர். ஒருவஸ்துவையே அநவரதம் நினைத்து நினைத்து நினைவு முதிர்ந்தாலும் பார்க்கிறோம் என்று வ்யவஹரிக்கக் கூடிய நிலை ஏற்படும். 'वृक्षे वृक्षेच पश्यामि' என்கிற மாரீசவசனம் இதற்குப் ப்ரமாணம்.

தர்சனஸமானாகாரமாக ஆகும் தியானமானது அத்யர்தப்ரியமாகவும் இருக்க வேண்டும். இல்லாமல் செய்யப்பெறும் ச்ரவணாதிகள் பயனற்றவை. ஒருவஸ்து நமக்குப் பிடித்தமானதாக இருந்தால் அதைப் பற்றிய நினைவு, பேச்சு. அனைத்தும் நமக்குப் பிடித்தமானவையாக ஆகி விடுகின்றன. உலகில் அபிமதமான விஷயங்களில் இது கண்கூடு. பகவானிடத்தில் நமக்கு அளவு கடந்தப்ரீதி இருந்தால் அவனைப் பற்றிய ச்ரவண, மநந, த்யாநாதிகள் அனைத்தும் ப்ரியங்களாக ஆகிவிடும். ஆகவே மிகவும் அன்புடன் செய்யக் கூடிய த்யானமே (உபாஸனமே) மோக்ஷகாரணம் என்பது முடிவு.

அத்யந்த ப்ரீதியுடன் செய்யப் பெறும் த்யானமே பக்தி என்று பேசப்படுகிறது. 'प्रीति पूर्वं मनुघ्यानं भक्तिरित्यभिधीयते' என்கிற ப்ரமாணம் கவனிக்கத்தக்கது.

नाहं वेदैः नतपसा नदानेन नचेज्यया ।
शक्य एवं विधोद्रष्टुं दृष्टवानसि मांयथा ॥
भक्त्या त्वनन्यया शक्यः अहं एवं विधोर्जुन ।
ज्ञातुं द्रष्टुं च तत्त्वेन प्रवेष्टुं च परन्तप ॥
पुरुषः सपरः पार्थ भक्त्या लभ्यः स्त्वनन्यया ॥

முதலான கீதாவசனங்கள் பகவத்ஜ்ஞான தர்சனப்ராப்திகளுக்கு பக்தியே உபாயம். வேறு உபாயமில்லை என்கின்றன. உபநிடதங்களில் கூறப்படும் உபாஸனமும் த்யானமும், கீதையில் கூறப்பெறும் பக்தியும் ஒன்றேயாகையால் பக்தி சப்தவாச்யமான ப்ரீதிரூபாபன்ன த்யானத்தைக் காட்டிலும் வேறு உபாயமில்லை என்றதாயிற்று. 'उपासन पर्यायत्वात् भक्तिशब्दस्य' என்கிற ஸ்ரீபாஷ்ய திவ்யஸூக்தி கவனிக்கத்தக்கது. ஆகையால் உபநிஷத் வாக்கியங்களுக்கும் கீதா வசனங்களுக்கும் பரஸ்பரம் விரோதமில்லை.

பக்தியோகமாவது — "அநந்யநிஷ்டனாய், அநந்யாதீநனாய், அநந்ய சேஷபூதனான பகவானுடைய ஸ்வரூபாதிகளை விஷயமாக உடையதாய் நிரதிசயப்ரீதி ரூபமான த்யான விசேஷம். இதுதான் தைலதாரையைப்போல் நிரந்தரமான ஸ்ம்ருதிரூபமாய் ஸாக்ஷாத்காரதுல்யமான வைசத்யத்தையுடையதாய் பரமபதத்துக்கு ப்ரயாணம் பண்ணும் திவஸமளவுதியாக நாள்தோறுமனுஷ்டிக்க வளர்ந்து வருவதாய், அந்திம ப்ரத்யயாவதியான ஜ்ஞானஸந்ததி விசேஷம். இதற்கு வர்ணாச்ரம தர்மங்கள், ஜ்ஞானவிகாஸ ஹேதுவான ஸத்வ விவ்ருத்திக்குக் களையான ரஜஸ், தமஸ் முதலான குணங்களுக்கு மூலமான பாபங்களைக் கழித்துக் கொண்டு இதிகர்த்தவ்யதையாயிருக்கும்" என்கிற ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார உபாயவிபாகாதிகார திவ்யஸூக்திகள் கீழே கூறிய விஷயங்களை மிகத் தெளிவாக விவரிக்கின்றன.

ஸத்வம் வளர்ந்தால்தான் ஜ்ஞானம் நன்கு மலரும். ஸ்தவ குணத்தை வளரவிடாமல் தடுப்பவை ரஜோகுணமும் தமோகுணமுமாகும். இவற்றுக்கு மூலம் பாபங்கள். இந்தப் பாபங்களைக் கழிப்பவை வர்ணாச்ரம தர்மங்கள். இவ்விதத்தில் வர்ணாச்ரம தர்மங்கள் பக்திக்கு அங்கமாக ஆகின்றன. பக்தி யோகத்தைச் செய்பவனுக்கு ஜ்ஞானம், சக்தி, ஜாதி, காலவிளம்பத்தை சகித்தல் என்கிற நான்கும் வேண்டும். ஜாதியாவது த்ரைவர்ணிகத்வம். ப்ராஹ்மண, க்ஷத்ரிய வைச்யர்களுக்கே பக்தியோகத்தில் அதிகாரம் உண்டு. அபசூத்ராதி கரணமானது சூத்ராதிகளுக்கு பக்தியோகத்தில் அதிகாரமில்லை என்பதைத் தெளிவித்திருக்கிறது. பக்தியோகாரம்ப தேஹம் த்ரைவர்ணிகத்வம் வாய்ந்ததாக இருக்கவேண்டுமே தவிர பூர்த்தி பெறும் தேஹம் ஏதேனுமாக இருக்கலாம் என்பது தர்மவ்யாதாதி வ்ருத்தாந்தங்களைக் காட்டி நிஷ்கர்ஷிக்கப்பட்டுள்ளது.

பக்தியோகமானது ப்ராரப்தேதர பாபங்களையே. அதாவது ஸஞ்சிதங்களையே போக்கும். 'अनारब्धकार्ये एवतुपूर्वे तदवधेः' என்கிற ப்ரஹ்மஸூத்திரமும். 'उपायभक्तिः प्रारब्ध व्यतिरिक्ताघ नाशिनी' என்கிற வசனமும் இதில் ப்ரமாணங்கள். ஆகையால் பக்தனுக்கு ப்ராரப்த கர்மாவஸானத்தில்தான் மோக்ஷம். பக்தியோகத்தின் ஆரம்பதேஹத்திலேயும் ப்ராரப்தகர்மாவஸாநம்ஸம் பவிக்கலாம். பிறகுபல தேஹங்கள் ஏற்பட்டும் ஸம்பவவிக்கலாம். இப்பொழுதுதான் ஸம்பவிக்கும் என்பதை நாம் முன் கூட்டியே தெரிந்து கொள்ள இயலாது. ஆகையால் கால விளம்பத்தைப் பொறுத்துக்கொள்பவனே பக்திக்கு அதிகாரி

யாவான். பக்தியின் ஆரம்பத்தில் ஸஹித்துக்கொள்ளும் சக்தி இருந்து, அதை ஆரம்பித்து அனுஷ்டித்துக்கொண்டு வரும் போது மத்தியில் ஸஹநசக்தியின்றி அதே ஜன்மத்தில் மோக்ஷம் பெறக்கருதினுல் அவன் பகவானுடைய அவதார ரஹஸ்யத்தையும் சிந்தித்துக் கொண்டே வரவேண்டும். இவ்விதம் செய்தால் அதே ஜன்மத்தில் உபாய பூர்த்தி ஏற்பட்டு மோக்ஷம் பெறலாம். 'वीतराग भयक्रोधा:' என்கிற பகவத்கீதா சுலோகத்தின் விவரணமான தாத்பர்யசந்திரிகையில் 'विनिष्पन्न समाधिस्तु मुक्तिं तत्रैव जन्मनि' என்கிற ப்ரமாணவாக்யத்தை உதாஹரித்து இவ்வர்த்தம் நிஷ்கர்ஷிகப்பெற்றுள்ளது. மோக்ஷஸாதனமாக சாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டிருக்கும் பரபக்தியானது பரஜ்ஞான பரமபக்திகளை உண்டாக்கி இவனுக்குக் கடுகப்ராப்தியைக் கொடுக்கும்படி ஸர்வேச்வரனுக்கு த்வராதிசயத்தை உண்டாக்கி இவனை அவாவற்று வீடுபெறப்பண்ணும்.

நம்மைப் போன்றவர்கள் பகவானிடத்தில் செலுத்தும் ப்ரீதிக்கும் பக்தி என்று பெயர். மோக்ஷ ஸாதனமான பக்தியை பரபக்தி என்று குறிப்பிட்டிருப்பதிலிருந்தே 'அவர பக்தி' என்பதொன்றுண்டு என்று தேறுகிறது. 'महनीय विषये प्रीतिः भक्तिः' என்றபடி பெரியோர்களிடத்தில் அதாவது பகவத் பாகவதாசார்யர்களிடத்தில் நம் போன்றவர்கள் செய்யும் ப்ரீதிவிசேஷமே அவரபக்தி. இது ஸர்வேச்வரனைத் தெளிய வறிய வேணும் என்னும் அபிநிவேசத்துக்குக் காரணம். ஸத்துக்களுடைய அநவரதபரிசயம், புராணுதிச்ரவணம், சுக்ருதவிசேஷம் முதலியவற்ருல் இது ஸம்பவிக்கும். இந்த பக்தி உள்ளவனுக்கே சாஸ்த்ரார்த்தத்தில் தெளிவு பிறக்கும் என்பது 'शुद्धभावं गतो भक्त्या शास्त्रात् वेद्मि जनार्दनम्' என்கிற ஸஞ்சய வாக்யத்திஞல் ஸித்தம். 'येतु त्वदंघ्रिसरसीरुहभक्तिहीना: तेषाममीभिरपिनैव पदार्थबोध:' என்கிற கூரத்தாழ்வானுடைய திவ்யஸூக்தியும், பகவானுடைய திருவடித் தாமரைகளில் அசஞ்சலமான பக்தி இல்லாதவனுக்கு எத்தனை சாஸ்த்ரங்கள் படித்தாலும் .தெளிவானஞானம் பிறக்காது என்கிறது. 'यस्यदेवे पराभक्तिः यथादेवे तथागुरौ । तस्यैतेकथिताह्यर्थाः प्रकाशन्ते महात्मनः' என்கிற உபநிஷத் வாக்யமும் பகவானிடத்திலும் ஆசார்யனிடத்திலும் நீங்காத பக்தி உள்ள மஹாத்மாவுக்கே ஆசார்யன் ஸாதித்தவிஷயங்கள் ஆசார்யன் ஸாதிக்காத (சாஸ்த்ர விருத்தமல்லாத) விஷயங்கள் இவை அனைத்தும் ப்ரகாசிக்கும் என்கிறது.

என்னுடைய பக்தர்களிடத்தில் வாத்ஸல்யம், என் விஷயமான பூஜை முதலியவற்றை எவ்வித ஆடம்பரமின்றி செய்தல், என் சரித்திரத்தைக் கேட்பதில் அன்பு, ஸ்வரம், நேத்ரம், உடல் இவை விகாரமடைதல் (அதாவது ஸ்வரம் தழுதழுத்துப் போவது, கண்களில் நீர் பெருகுவது, உடம்பில் மயிர் கூச்செறிவது முதலியன) என்னையே எப்பொழுதும் நினைத்தல் என்னிடம் எவ்வித பலனையும் எதிர்பாராமல் இருத்தல் என்கிற எட்டு வகையான பக்தி மிலேச்சனிடமிருந்தாலும் அவன் என்னைப்போல் பூஜிக்கத்தக்கவன்' என்று பகவான் அருளிச் செய்துள்ளான். இங்கு பக்தியினுடைய காரணங்களிலும், கார்யங்களிலும் கூட பக்தி சப்தம் ப்ரயோகிக்கப் பெற்றிருக்கிறது. ச்ரவணம், கீர்த்தனம், அர்ச்சநம், வந்தனம், தாஸ்யம், ஸக்யம், ஆத்ம நிவேதனம் என்பவையும் பக்தி சப்தவாச்யங்களாகக் கூறப்பெற்றிருக்கின்றன.

பகவான் பகவத்கீதையில் 'समोऽहं सर्वभूतेषु' என்கிற ச்லோகத்தில் "எனக்கு ப்ராஹ்மணர்களைக் கண்டால் பிடிக்கும்; ப்ராஹ்மணரல்லாதாரைக் கண்டால் பிடிக்காது என்பதில்லை. வித்வானைக் கண்டால் பிடிக்கும்; அவித்வானைக் கண்டால் பிடிக்காது என்பதில்லை. ஆனல் என்னைக் கண்டால் யாருக்

குப் பிடிக்குமோ அவன் எவனாக இருந்தாலும் அவனைக்கண்டால் எனக்குப் பிடிக்கும்.'' என்றருளிச் செய்துள்ளான். இதனால் பகவான் ஒருவனை ஆதரிப்பதற்கு அவனுடைய ஜாதி முதலியவற்றிலுள்ள ஏற்றம் காரணமன்று; பக்தியே காரணம். ஜாதி முதலியவற்றால் எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும் 'பக்தி' என்கிற ஒரு அம்சம் அவனிடம் இல்லாமற் போனால் பகவான் அவனை ஆதரிக்கமாட்டான். ஒருவன் ஜாதி முதலியவற்றால் தாழ்ந்தவனாக இருந்தாலும் 'பக்தி' என்கிற ஓரம்சம் அவனிடமிருந்தால் அவனை பகவான் ஒருகாலும் கைவிடமாட்டான் என்பதாயிற்று.

நம்முடைய பொருளை பகவானுக்கு ஸமர்ப்பிக்கிறோம் என்ற எண்ணமின்றி பக்தியுடன், இலை, பூ, கனி, தண்ணீர் இவற்றில் எதை ஸமர்ப்பித்தாலும் கிடைக்காத பொருள் கிடைத்த மாதிரி நினைத்துக்கொண்டு அதிகமான ஆதரத்துடன் தலைவணங்கி அதை பகவான் ஏற்றுக்கொள்கிறான். நாம் கொடுக்கும் பொருள்களிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை பகவான் கணிசிப்பதில்லை. பக்தியிலிருக்கும் தாரதம்யத்தையே பார்க்கிறான். 'பத்ரம் புஷ்பம்' என்கிற ச்லோகமும், பாஷ்ய தாத்பர்ய சந்திரிகைகளும் இவ்விஷயத்தை மிகத்தெளிவுபடுத்துகின்றன.

''இங்ஙனம் மோக்ஷோபாயமாக விதித்த பக்தியோகம் பரபக்தி என்று பேசப்படுகிறது. இதனுடைய ஹேதுவாய் ஸாத்விக பரிசீலநாதிகளாலே வந்த பகவத்விஷயத்தில் ப்ரீதி விசேஷம் ஸர்வேச்வரனைத் தெளியவறிய வேணும் என்னும் அபிநிவேசத்துக்குக் காரணமாய் பக்தி என்று பெயர் பெற்றிருக்கும்'' என்கிற ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார உபாய விபாகாதிகார திவ்ய ஸூக்தியானது பரபக்தி, ப்ரேம பக்திகளின் ஸ்வரூபத்தையும் கார்யத்தையும் மிகத்தெளிவாக விளக்கியிருக்கிறது.

ஸ்வாமி தேசிகனுக்கு நிகரான ஆசார்யன் இல்லை என்பது ஸுப்ரஸித்தம். அந்த ஆசார்ய ச்ரேஷ்டனை விபவத்தில் ஸேவிக்கும் பாக்யம் நமக்கு இல்லாமற் போய்விட்டதே என்று நாம் வருந்த வேண்டிய ஆவச்யகதையே இல்லை. நாவல்பாக்கம் என்கிற ஸ்ரீக்ராமத்துக்குச் சென்றோமானால் அந்த தேசிகனை இப்பொழுது கண்களால் ஸேவித்து க்ருதார்த்தர்களாகலாம். மஹாவித்வான் ஐயா தேவநாததாதாசார்ய ஸ்வாமியை அறியாதார் யாருமில்லை. ஸ்ரீதேசிகனைப்பற்றி நாம் கேள்விப்படுவனவற்றையெல்லாம் இந்த ஸ்வாமியிடம் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். இந்த மஹான் சகல சாஸ்த்ர பாரங்கதர். வர்ணாச்ரம தர்மங்களை யதாகாலம் அனுஷ்டிப்பவர். விரக்தாக்ரேஸரர். ரயில், பஸ், கார் முதலானவற்றில் ஏறுவதில்லை என்ற நியமத்தைப் பல வருஷங்களுக்கு முன்பே ஏற்படுத்திக்கொண்டு ஸ்ரீக்ராமத்தை விட்டுப்பதசலனம் செய்யாத உத்தமர். இஞ்சிமேடு ஸ்ரீமதழகியசிங்கரின் பரிபூர்ண க்ருபைக்குப் பாத்திரமானவர். ஸ்ரீமதழகியசிங்கருக்கு இந்த மஹானுபாவரிடம் மிகுந்த பக்ஷபாதம் உண்டு என்பது யாவரும் அறிந்த உண்மை. இந்த மஹானுக்கு சதாபிஷேக மஹோத்ஸவம் சிறப்பாக நடைபெற விருக்கிறது. இந்த தேசிகோத்தமர் பல்லாண்டு பல்லாண்டு திருமேனி பாங்குடன் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாயத்தை மேன்மேலும் வளரச் செய்யும்படி அனுக்ரஹிக்கவேணுமென்று அநவரதம் எம்பெருமானைப் ப்ரார்த்திக்கிறேன்.

'பக்தி' என்ற விஷயத்தைப் பற்றி தாஸனை எழுதுமாறு நியமித்த கமிட்டியாருக்கு அடியேனுடைய பரிபூர்ணமான க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

—✱—

ஸ்ரீ:

ஆசார்யசிஷ்யக்ரமம்

[ஸ்ரீ. உ. வே. வித்வான் வில்லிவலம் நாராயணுசாரியர் ஸ்வாமி, வாராணஸி]

विद्यां ह्यन्तरोकस्तमस इहकुलं भेत्तुमव्याकुलो यः
शिष्यान् शिक्षाधिकग्राह्यनवधिषणान् ग्राहयामास नित्यम् ।
वेदान्तान्तश्च वेदादिममखिलकलां सङ्कलय्य प्रदश्य
श्रीमान् श्रीदेवनाथो गुरुरिह भुवने वर्धतां वर्धतां सः ॥ १ ॥

विद्यास्वयंवरपतीन् सुमतीन्द्रवन्द्यान्
सश्रद्धबद्धनिगमाध्वसु नित्यनिष्ठान् ॥
अत्यर्थमात्मगुणराशिसुकोशभूतान्
श्रीदेवनायकगुरून् वरये विनीतः ॥ २ ॥

शताभिषेकसमयं समया विलेखः
सप्रश्रयं हि समया विनिवेद्यतेऽद्य ॥
जम्बग्रहारभवपण्डितमण्डलाग्र
हारायमाणसुरनाथसमाख्यसूरेः ॥ ३ ॥

நல்லோர்கள் எல்லோரும் நெடு நாளாகவே செவிமடுத்த ஊர் நாவல்பாக்கம் என்பது. படித்த மேதாவிகள் மலிந்த ஊர். அவ்வக்ரஹாரத்தில் பிறந்த பண்டிதமண்டலிக்கே ஓர் அக்ர (உயர்ந்த) ஹாரமணி போல் இப்பொழுது, ஸ்ரீமதுபயவே - தேவநாதாசாரியஸ்வாமி திகழ்கிருர். அன்னுருடைய சதாபிஷேக மஹோத்ஸவ ஸமயத்தை ஒட்டி, வணங்கி, ஒடுங்கி அடியேன் இக்கட்டுரையை அவர் திருவடிகளில் ஸமர்ப்பிக்கிறேன். வெளியிருள் வெயில் வந்தவாறேபோகும். மாந்தரின் மன இருள் அவ்வாறல்ல. வித்யையாலேயே போக்கவேண்டும். ஆகையால் இங்கு இந்த ஸ்வாமி, வித்யை என்னும் விளக்கேற்றி, வித்யார்த்திகளின் மன இருளை, சுருள் சுருளாக வெளியேற்றினுர். ஸ்வாமியிடம் பயிலும் சிஷ்யர்கள் சொல்லிக் கொடுத்த ஒன்றை யொட்டியே ஒன்பது மடங்கு சொல்லாதவைகளையும் ஊஹித்தறியும் திறமைசாலிகள். வைதிகச் சிறுவர்களுக்கு முதல் வகுப்பில் வேதமோதுதல் ஆரம்பமாகும் கடைசியில் பட்டப்படிப்பு தான் வேதாந்தபாடம். அத்தனையும் அவர்களுக்கு இந்த ஸ்வாமியின் திருமாளிகைத் திண்ணையிலேயே நடந்து முடிகிறது, வேறு திண்ணை தேடவேண்டாதபடி. அப்படிப்பட்ட இந்த ஸ்வாமி, இன்று போலவே என்றும் எழுந்தருளி இருக்கவேண்டும்.

வித்யாதேவி வலுவிலே வந்துஸ்வயம் வரத்தில் கைபிடித்த கணவன் இவர். சிறந்த மேதாவிகளும் சிரம் தாழ்ந்து வணங்க நிற்பவர். காலம் கடந்து நிற்கும் கடும் வைதிக நெறியில் தானே ஏற்படுத்திக்கொண்ட சில நியமங்களாலே நித்தமொழுகி வருபவர். நற்குணங்களும் நல்லபண்புகளும் நிறைந்து நிற்கும் நிதியாவாரிவர். இவரை அடி பணிந்து வேண்டிக் கொண்டு இக்கட்டுரையைத் துவங்குகிறேன்.

"ஆசார்ய சிஷ்யபாவம்" என்று தான் நானிதற்குத் தலைப்புக் கொடுத்திருக்க வேண்டும். தமிழ்த தலைப்பாயிற்றே? சிஷ்ய பாவம்", "சிஷ்யபுண்யம்" என்ற வாறெல்லாம் சிலர் படித்து நினைத்து விடக்கூடும் என்றஞ்சியே அதைவிட்டு — "ஆசார்ய சிஷ்யக்ரமம்" என்றெழுதினேன். ஆசாரியனும் சிஷ்யனும் தம்முள் பரிமாறும் முறை என்ன என்பது பற்றித்தான் கூற வந்துள்ளேன்.

அவ்விருவருக்கும் உள்ள உறவுமுறையில் செய்ய முடியாத கட்டுப்படியாகாத எந்த விஷயத்தையும் நான் இங்குச் சொல்ல வர வில்லை. பெரியோர்களும் சொல்லி இருக்க வில்லை. ஏனெனில் அவர்கள், தம்முடைய வாழ்நாளில் அடியிலே சிஷ்யர்களாக இருந்தே ஆசார்யபதமேறினவர்கள். ஆகையாலே தாம் அவ்விரு நிலைகளிலும் அனுபவித்த முறைகளையே எழுதிவைத்தார் கள். கணவன் மனைவி உறவு முறை எப்படி இருக்க வேண்டும் ? என்று ஒருவர் விளக் கினால், அதில் சிலர் ஐயம் கொள்ள அவகா சம் உண்டு. இவ்விதம் விளக்குபவர், கண வன் இனத்தைச் சேர்ந்த ஆணுகவோ மனைவி இனத்தைச் சேர்ந்த பெண்ணுகவோ இருக் கலாம். அவரவர் தம்தம் இனப்பற்றினால் இல்லாததையும், பொல்லாததையும் கூட மிகைப் படுத்திக் கூறிவிடலாம். முன்னாளில் மனைவியாக இருந்து பிறகு கணவன் ஸ்தா னத்தை எட்டினான் என்பது இல்லையே ? இங்கு சிஷ்யனே ஆசார்யனாகிறான். ஆசார் யன் என்பது தனி இனமில்லை. ஆகையால் அவசியம் செய்ய வேண்டிய செய்யக் கூடிய முறைகளையே பெரியோர்கள் இருவருக்கும் வகுத்துத் தந்துள்ளார்கள்.

ஆனால் முதலில் இங்கொன்று கூறிவிட வேண்டும். ''வித்யையை வித்யைக்காக வென்றே அப்யாஸம் செய்கிறோம். பணத் தைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்வோம். அவ்வித்யா தேவி நம்மை அடைவது ஆசார்ய கடாக்ஷாதீனம்'' என்று கருது வோரிடையே தான் நாம் மேலே சொல்லப் போவது பொருந்தும். இவ்விதமல்லாது ''பணத்துக்காகப் படிக்கிறோம். இப்போதே பணம் கிடைத்தால் படிப்பை விடவும் நான் தயார்.'' என்கிறவர்களும் உண்டு. மாணாக் கரிடையே ''பணத்துக்காகவே பாடம் நடத் துகிறோம். பிள்ளைகள் நன்கு படித்தாலென்ன படிக்காவிட்டாலென்ன ? என்ற மனப்பான் மையுடையவர்களும் உண்டு. உபாத்தியாயர் களில் இவ்விதமான இந்த இருசாராரி டையே எந்தவிதமான சிறந்த முறை உறவும் இருக்க முடியாது.

ஓர் உபநிஷத்தில் பிதா பிள்ளையைப் பார்த்துச் சொல்லுகிறார். ''குழந்தாய் ! நமது குலத்தில் வேதாதி சாஸ்த்ரங்கள் ஓதாது ஒருவனும் ''ப்ரம்ஹபந்து''வாக வாழ்ந்ததில்லை. நீ உடனே குருகுலம் சென்று வேதமோதுவாயாக'' என்கிறார். இங்கு ''ப்ரம்ஹபந்து'' என்று உபநிஷத்து கூறிய பதத்தையே ப்ரயோகித்துள்ளேன் அப்பதம் மிகவும் அர்த்த புஷ்டியுள்ளது. அக்கா லத்தில் படிக்காதவனும் கூட தன்னை உயர்ந் தவன் என்று காட்டிக்கொள்ள வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் தன்னிடம் படிப்பில்லா மையாலே படித்த ஒருவருக்கு நான் பந்து என்றுதான் தனனைச் சுற்றி வளைத்து நிரூ பித்துக் கொள்வானும் ஆகையாலே இந் நிலை சங்கடமானது. அவமானகரமானது, இவ்வித நிலைகழிய, நமது குடும்ப கௌரவ வத்தைக் காப்பாற்றக் குருகுலம் செல் என் கிறார் தகப்பனார். இதிலிருந்து குலத்தை ஒட்டிய படிப்பும், குலத்தொழிலும், பணம் பண்ணவேண்டும் என்ற கருத்தில்லாது கடமை என்ற கருத்தால் ஸர்வேச்வரனுக்கு உகப்பு என்ற உவகையில் நடந்து வந்தது தெரிகிறது. இப்போது முதல் வருணத்தவர் செருப்புத் தைப்பதிலும் கைதேர்ந்து செருப்புக் கடை நடத்துகிறார். அந்நியர் ஆலயங் களிலும் நுழைந்து அர்ச்சனை செய்ய அவாவு கிறார். ஆக இம்மாதிரியான நிலையில் படிப்பு நடந்து வருமிடங்களில நான் சொல்லப் போகும் நல்ல அம்சங்களைக் காண முடி யாது. ஆயினும் பாலைவனங்களினூடே சோலைத்திட்டும் காணப்படுவது போல் சிற் சில இடங்களில் இக்குருகுல முறை நடந்தே வருகிறது என்று கருதி மேலே நான் சில வற்றை எழுதுகிறேன்.

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸத்சிஷ்ய லக்ஷணத்திற்கும் ஸதாசார்ய லக்ஷணத்திற்கும் தாமே ஒரு தனி இலக்காக இருந்தமையால் இரு புறமும் நன்கு கவனித்து இருவருக்கும் இலக்கணம் வகுத்து இரு கண்கள் எனப் போற்றத் தக்க இரு ச்லோகங்களை அருளியுள்ளார் என்பதனைவருக்கும் தெரியும். "ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே" என்று துவங்கும் ச்லோகம் ஆசார்ய லக்ஷணம் கூறும். ஓராணுெழியாய் வந்த நல்ல ஸம்ப்ரதாயப் பயிற்சி முக்கியம். தற்காலத்தில் ஆசிரியர் பயிற்சி போல அலைபாயாத திட சித்தம் தேவை. அதற்காகப் புண்ணியம் செய்து கொடுத்து வைத்திருக்கவேண்டும். வேதாந்த மறிந்து வேதாந்த விழுப்பொருளாம் எம்பெருமானிடத்து மனம் படிந்திருத்தல் வேண்டும். ஸத்துவ குணம் தலை தூக்கி நின்றால்தான் அது கிடைக்கும். ஸத்துவ குணமுடையவரிவர் என நாமறிய ஸத்தியமே பேசுவர். வெறும் வரட்டு வாய் வேதாந்தம் போதாது. இருமுப் பொழுதும் (ஐந்து காலங்கள்) தொழுது ஏத்த வேண்டும். தன் பெருமை பேசாமையும் பிறர் பெருமை பொறுத்தலும் வேண்டும். இதெல்லாம் கிடைக்க இந்திரியங்கள் பட்டிபுகாது தடுக்கப்படுவது அவசியம். சிஷ்யனிடம் ஒழிக்க ஒழியாத நீண்ட உறவு நடக்க வேண்டும். அது கைக் கூடுவது கருணையாலே. கருணை ஒருபுறம் நடவாநிற்கச் செய்தே சிஷ்யனுடைய குற்றங்களில் கண்டிப்பும் தேவை. அது தன்னுடையவும், சிஷ்யனுடையவும் நன்மையைக் கருதிவரும். இப்படிப்பட்ட ஆசார்யனைத்தான் முன்னுக்கு வர நினைக்கும் சிஷ்யன் முன்னிடவேண்டும் என்கிறார். இங்கு "ஸ்வப்ரஹிதபரமஸத்குரும்" என்றும் கவனம் செய்யலாமாயிருக்க "தேசிகம்" என்று ப்ரயோகித்தது லோக ப்ரஸித்தியையொட்டி "ஸ்ரீமத் வேதாந்த தேசிகனையே ஆச்ரயிக்கவேண்டும்" என்று பணிப்பதுபோலும் அமைந்துள்ளது.

இனி "ஸத்₃பு₃த்₃தி₄: ஸாது₄ஸேவீ" என்றாரம்பிக்கும் சிஷ்ய லக்ஷணம் கேளுங்கள். சிஷ்யன் முதலில் மேதாவியாக இருக்கவேண்டும். மேதாவி என்றால் குதர்க்கங்கள் பேசும் கெட்டவர் ஸஹவாஸத்தில் போய் முடியக் கூடாது. ஏனெனில் அப்போது ஒழுக்கம் கெடும். ஆகையால் கல்வியை நோக்கு பவனாக இருக்கவேண்டும். கிடைத்த போது எல்லாம் படித்திட ஆசாரியனுக்கு அருகிலேயே இருந்து கூச்சமின்றி எப்போது அவர் அழைப்பாரோ என்று காத்திருந்து பணிவிடைகள் புரியவேண்டும். அமைதியுடையனாய் அஸூயை இன்றி அவர் பாதம் பணிந்து, அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் நன்றியுடன் இருப்பவனைத் தேர்ந்து எடுத்துத் தன் மனத்திலுள்ள வித்யா ரஹஸ்யங்களை எல்லாம் அவனுக்கு ஆசாரியன் போதிக்க வேண்டும் என்கிறார் ஸ்வாமி தேசிகன்.

இவ்விரண்டு ச்லோகங்களும் சொல்லும் பொருட்களை ஆராய்ந்தால் ஆசார்ய சிஷ்ய லக்ஷணம் இவ்விதம் என்று கூறுவதோடு மட்டுமல்லாமல் அவரிருவரிடையே நிலவும் உறவு முறை பற்றியும் கூறியதாகவே முடியாது. சுருங்கச் சொன்னால் ஆசாரியன் தன் சிஷ்யனைத் தன் மகனைப் போல-ஏன்? மகனை விடவும் கீழ்ப்படிய விட்டுடைத்த உரியவன் என்றும், சிஷ்யன் தன்னைக் குருகுலத்தில் வதியும் ஓர் ப்ராணி போல், ஏன்? ப்ராணியை விடவும் தாழவிட்டு நடந்து காட்டிப் பணிவிடை புரியக் கடவன் என்று தேறுகிறது. உபநிஷத்துக்களிலும் புராணங்களிலும், நசிகேதஸ்ஸு, ஏகலவ்யன் போன்ற உதாஹரணங்களை இவ்விஷயத்தில் நிறையக்காணலாம். இங்கு நான் கதை சொல்ல வரவில்லை. எருக்கம் பாலை உண்டும், கழனி மடைகளில் உருண்டும் சிஷ்யர்கள் ஆசாரிய சுச்ரூஷை செய்தார்கள். சொந்த பிள்ளைக்குச் சொல்லாத சுளுக்குகளை சிஷ்யர்களுக்குச் சொல்லி பிள்ளைகளை விரோதித்துக் கொண்டவர்களும் உண்டு.

இங்கு ஸ்ரீஸ்வாமி தேசிகன்— "ஒருவன் தன்னுடைய குருவை ப்ரகாசிப்பதும், ப்ரகாசியாமல் ஒழிவதும் அவனுடைய குரு பக்தி தாரத்ம்யத்தாலே தான்." என்று அருளுகிருர். ஆம்! இது உலகில் கண்ட உண்மையே! ஆனல் இதைப் போன்ற வேறெரு உண்மையும் உண்டு. அதாவது—"ஒரு குருகுலத்தில் படித்தவரிடையே ஒருவன் நல்ல கல்விமாளுய் விளங்குவதும் மற்றவன் அப்படி அல்லாதிருப்பதும் அவர்களுடைய குருபக்தி தாரதம்யத்தாலே தான்" என்றும் நாம் கொள்ள வேண்டும். இதையும் நாமின்றுலகில் காண்கிருேம்.

இது இப்படி இருக்கும் போது ஒரு கவி இதற்கு மாருகக் கூறுகிருன். "वितरति गुरु: प्राज्ञे विद्यां यथैवतथाजडे" குருகுலத்தில் படிப்போரிடையே ஆசாரியன் ஒன்று போலவே நடந்து கொள்கிருன். புத்திசாலியாக உள்ளவனுக்கு உபதேசிப்பது போலவே மந்த புத்தி உள்ளவனுக்கும் உபதேசிக்கிருன். न च खलु तयोर्ज्ञाने करोति.

"ஆசாரியன் ஸமமாகவே உபதேசிக்கிருன். அவ்வளவேயல்லாது புத்திசாலிக்கு அதிகம் அறிவூட்டுகிருன். மந்தனுக்கு மட்டுபட்டே ஊட்டுகிருன் என்பதில்லே. பின்னே ஏன் அவர்களிடையே இவ்வளவு அறிவில் ஏற்றச்சுருக்கங்கள்? என்ருல் இது அவரவர் புத்தி தாரதம்யத்தாலே உண்டாகிறது. சூரியன் ஒளியை ஒளிக்காமலே ஒன்று போலவே எங்கும் வீசுகிருன். ஆனல் கண்ணுடி சூரிய ஒளியில் தக தக வென ஒலிக்கிறது. மண் சுவர் சும்மென்று கிடக்கிறது. இந்த வித்யாஸம் அதனதன் தன்மையை ஒட்டி வருகிறது என்று கவி தன் கூற்றுக்கு உதாஹரணம் காட்டுகிருன், இதைப் பார்த்தால் நமக்கும் ஒரு ஸந்தேஹம் ஏற்படக்கூடும். அதாவது ஒன்ருகவே பயின்ற இருவரிடையே அறிவில் ஏற்றச்சுருக்கங்களுக்கு குருபக்தி தாரதம்யம் காரணமல்ல. பின்னே? அவரவர் புத்தி தாரதம்யமே. ஆகையால் குருபக்தி எதற்கு? என்று கேட்கத்தோன்றும். அது அவ்வாறன்று. குருபக்தியின் மிகுதியாலே குருவினுடைய பூர்ணகடாக்ஷம் வித்யையின் வளர்ச்சிக்கு மிகவும் தேவை. அதிருப்பவனுக்கு அறிவு அதிகம். அதில்லாதவனுக்குக் குறைவுதான். ஆனல் இதன் செயல் முறையைக்கண்வட்டத்தில் காணமுடியாது. கண்வட்டத்தில் நாம் காண்பது இருவரிடையேயும் ஆசாரியன் ஒரேமாதிரிதான் உபதேசிக்கிருன் என்பதுவே. அதனுலே ஆசார்யனுக்கு ஒரு வஞ்சனையும் ஓரிடத்தில் பக்ஷபாதமும் உண்டோ என்று நினைக்கலாகாது என்பதற்காகவே கவி உதாஹரணத்துடன் அவ்வாறு கூறினன் எனக்கொள்ளவேண்டும். புண்ணியம் என்ற முறையில் நாம் காணுதவாறு ஆசாரிய பக்தி நமக்குத்தரும் நன்மைகளை நாரணனும் காணகில்லான். இப்பதத்தால் என்னை நான் இங்கே கூறிக்கொள்ளவில்லே. ஆகையால் ஆசார்ய சிஷ்ய க்ரமம் என்பது அகில உலக நன்மைக்கும் அஸ்திவாரமாகும் என்பதை அடியேனும் இந்த ஸ்வாமி ஸன்னிதியில் சில சாஸ்திரார்த்தங்களை சிஷ்ய வ்ருத்தி பண்ணிக் கேட்டதன் பயனுகக் கண்டு இக்கட்டுரையிலிட்டேன்.

விசிஷ்டாத்வைத தர்சனமும் நம்மாசாரியனும்

(ஸ்ரீ. உ. ப. வித்வான் என். எஸ். ராமாநுஜதாதாசாரியர், திருப்பதி)

ஸ்ரீமந் நாதமுனிகளால் ப்ரவர்த்திக்கப் பட்டதும் யாமுன முனிகளால் வளர்க்கப்பட்டதும் எம்பெருமானாரால் நன்ருகக் காக்கப் பட்டதுமான நம்முடைய தர்சனம் 'ஸ்ரீ ராமானுஜ தர்சனம்' என்றும் 'விசிஷ்டாத்வைத தர்சனம்' என்றும் வழங்கப்பட்டு வருகின்றது. இந்த தர்சனத்திற்கு ராமானுஜ தர்சனம் என்னும் பெயர் முற்காலத்திலேயே வழங்கப் பட்டுவந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. உபதேச ரத்தினமாலையில் மணவாளமாமுனிகளின்.

> "எம்பெருமானார் தரிசனமென்றேயிதற்கு
> நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார்—
> அம்புவியோர்
> இந்தத்தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த
> அந்தச் செயலறிகைக்கா"

என்னும் பாசுரம் இதற்குச் சான்று. கலியுகாதியில் அவதரித்த நம்மாழ்வாரது காலத்திற்கு முன்னமே அநாதியாக விளங்கிவரும் இந்தத் தரிசனத்தை 'ஸ்ரீராமானுஜ தர்சனம்' என வழங்கி வருவானேன்? இந்தத் தர்சனம் ஸ்ரீராமானுஜரால் புதியதாக நிருபிக்கப் பட்டதா என்ன? என்று சிலர் சங்கிப்பதுண்டு. அந்தச் சங்கைக்குப் பரிகாரம் இப்பாசுரத்தால் சொல்லப்படுகிறது. ஸ்ரீராமானுஜ தர்சனம் எனறு வழங்கி வரும்படி ஸ்ரீரங்கநாதன் நியமித்தருளினன். அப்படி அவா் நியமித்ததற்குக் காரணம் இந்த தர்சனத்தை ஸ்ரீராமானுஜர் பல படிகளால் வளர்த்தருளினுர் என்பதுதான், என்று இப் பாசுரத்தின் கருத்து. 'த்ராதம் ஸம்யக் யதீந்த்ரை:' என்னும் தேசிக ஸூக்தியைக் கணிசித்தே இப்பாசுரம் தோன்றியது.

ஸ்ரீமாதவாசாரியரால் 'ஸர்வதர்சன ஸங்க்ரஹம்' என்று ஒரு நூல் இயற்றப் பட்டுள்ளது. அவர் ஸ்ரீவேதாந்த தேசிகரின் சமகாலத்தவர். அந்நூலில் ஆஸ்திகதர்சனங்களின் ஸாரப்பொருள்களும்நாஸ்திகதர்சனங்களின் ஸாரப் பொருள்களும் கூறப்பட்டுள்ளன. ஸ்ரீராமானுஜ தர்சனம் என்கிற பெயராலேயே நம்முடைய தர்சனம் அங்கே வழங்கப்பட்டுள்ளது, ஆகவே 'ஸ்ரீ ராமானுஜதர்சனம்' என்கிற பெயராலேயே முற்காலத்தில் நம் தர்சனம் வழங்கப்பட்டு வந்ததாக அறியப் படுகிறது. ஆனுல் தற்காலத்தில் 'விசிஷ்டாத்வைத தர்சனம்' என்றும் வழங்கப்படுகிறது. இதற்கு ஆதாரம் யாது? அப்படி வழங்கக் காரணம் என்ன? என்று சங்கை ஏற்படுகின்றது.

வேதார்த்த ஸங்க்ரஹத்தில் எம்பெருமானர் 'உங்களுடைய ஸித்தாந்தம் என்ன? பேதமா? அபேதமா? பேதாபேதமா? என்று கேட்டுக் கொண்டு எல்லாம் எங்களுக்கு சம்மதமே என்று அருளிச்செய்கிறுர். அங்கு வ்யாக்யானத்தில் ச்ருதப்ரகாசிகாபட்டர் 'எங்களுக்கு பேதமே சித்தாந்தம்' என்று முடிக்கிறுர். ஆகவே ராமானுஜ சித்தாந்தம் பேதம் என்பது தெளிவு. பேரருளாளனுடன் வார்த்தையாடின திருக்கச்சி நம்பிகளின் ஆறு வார்த்தைகளுள் 'பேதமே தர்சனம்' என்பதும் ஒரு வார்த்தை. அந்த ஸம்ப்ரதாயத்தை அனுசரித்தாலும் நம் தர்சனத்தை 'பேததர்சனம்' என வழங்குதலே சாலப் பொருந்தும் எனவும் தோன்றுகின்றது. ஸ்வாமி தேசிகனுலோ அதற்கு முற்பட்ட ஆசார்யர்களாலோ இயற்றப்பட்ட நூல்களுள் 'விசிஷ்டாத்வைததர்சனம்' என இத் தர்சனம் வழங்கிவந்ததற்கு ஆதாரம் கிடைக்கவில்லை.

ஆனுல் சோளசிம்மபுரத்தில் எழுந்தருளியிருந்த சண்டமாருதம் தொட்டையாசார்

ஸ்வாமியின் சிஷ்யரான ஸ்ரீநிவாஸதாஸரால் இயற்றப்பட்ட 'யதீந்த்ர மததீபிகை' என்னும் க்ரந்தத்தில் கடைசியில் 'இது விசிஷ்டாத் வைதவாதிநாம் ஸித்தாந்த:'(இது விசிஷ்டாத் வைதிகளின் ஸித்தாந்தம்) எனக் காணப்படு கின்றது. ஆகவே அவர் இந்த தர்சனத் திற்கு விசிஷ்டாத்வைத தர்சனம் எனப் பெயர் வைத்தார் என்று ஊகிக்க இட மிருக் கிறது. இதற்குக் காரணத்தை ஆராய் வோம். ஸ்ரீ ராமானுஜருக்கு முன்பு ஸ்ரீ சங்கரா சார்யருடைய அத்வைதஸித்தாந்தம் உலகில் பரவியிருந்தது. எம்பெருமானர் அந்த மதத் தைக் கண்டித்து பேததர்சனத்தை ஸ்தாபித் தார். அபேதச்ருதிகளுக்கு விசிஷ்டாத்வைத பரமாகப் பொருள் கூறினர். பிறகு ஆநந்த தீர்த்தர் அவதரித்து த்வைதமதத்தை ஸ்தா பித்தார். அதற்குப் பிறகு நம் தர்சனத்தை பேததர்சனம் என்று வழங்குவதில் ச்ரமம் ஏற்பட்டது. அப்படி வழங்கினல் ஆநந்த தீர்த்தரின் சித்தாந்தத்தைக் காட்டிலும் நம் தர்சனத்திற்கு வாசியில்லை என சந்தேகம் வரக்கூடும். அதை நீக்குவதற்காகப் பிற் காலத்தவர்கள் விசிஷ்டாத்வைதம் என வழங்கத்தொடங்கினர். வேதச்ருதிகளுக்கு இருவரும் ஒரே மாதிரியான அபிப்ராயத் தைக்கொண்டாலும் அபேதச்ருதிகளுக்குப் பொருள் கூறுவதில் இருவருக்கும் நெடு வாசியுண்டு. அந்த வாசியைக் காட்டுவதற் காகவே நம் தர்சனத்தை 'வசிஷ்டாத்வைத தர்சனம்' என வழங்கத் தொடங்கினர் என்று தோன்றுகின்றது.

இனி விசிஷ்டாத்வைதம் என்கிற சொல் லின் பொருளை விவரிப்போம். ப்ரபஞ்சத்திற் கும் எம்பெருமானுக்கும் அபேதத்தைச் சொல்லக்கூடிய வேதவாக்கியங்கள் பல உள. அவை 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' முதலிய வாக்கியங்கள். ஜீவாத்மாவுக்கும் எம்பெருமானுக்கும் அபேதத்தை கூறும் வேத வாக்கியங்கள் பல உள. அவை 'தத்த்வமஸி' முதலிய வாக்கியங்கள். ஜடமான ப்ரபஞ் சத்திற்கும் சேதனமான ப்ரஹ்மத்திற்கும் அபேதம் பொருந்தாது. எனவே 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' என்கிற வாக்யத்திலுள்ள ஸர்வம் என்கிற சப்தத்திற்கு ஸர்வவிசிஷ் டம், அதாவது ஸர்வத்தையும் உடையது என்கிற பொருளைக் கூறி ப்ரஹ்மம் ஸர்வப்ர பஞ்சத்தையும் உடலாக உடையது என்று வாக்கியத்தின் பொருளைக் கூறினர் நம் இரா மானுசர். இந்தப் பொருள் மற்ற வேதாந்தி களால் கூறப்படாமையால் இந்த தரிசனத் திற்கு விசிஷ்டாத்வைதம் எனப் பெயர் வழங் கலாயிற்று என்பர் பெரியோர். 'தத்த்வமஸி' என்கிறவிடத்திலும் தத் என்கிற சொல்லுக்கு ஸர்வஜ்ஞுன எம்பெருமான் என்று பொருள். த்வம் என்கிற சொல்லுக்கு அஜ்ஞு ஞன ஜீவாத்மா என்று பொருள். இரு வருக்கும் அபேதம் பொருந்தாது. ஆகவே த்வம் என்கிற சொல்லுக்கு அஜ்ஞுன ஜீவாத்மாவை சரீரமாக உடையவன் எனப் பொருள்கூறி அபேதத்தை நிலை நாட்டினர். எனவே இத்தரிசனம் விசிஷ்டாத்வைததர்ச னம் என வழங்கலாயிற்று. இது ஒரு நிர்வா ஹம். வேறு சில நிர்வாஹங்களும் உள. அவை களைக் காட்டிலும் மேற்கூறிய நிர்வாஹமே சிறந்தது. ஆக ப்ரபஞ்சவாசகமான சப்தத் திற்கு ப்ரபஞ்சவிசிஷ்டம் என்று பொருள். அதற்கும் ப்ரஹ்மத்திற்கும் அபேதம் உள்ள படியால் 'ஸர்வம் ப்ரஹ்ம' முதலிய வாக்கி யங்களுக்கு விசிஷ்டாத்வைதம் பொருள் என்று தேறியது.

ஆநந்ததீர்த்தருடைய மதத்தை அனுசரிப் பவர்கள் ஸர்வம் என்னும் சொல்லிற்கு எல்லாம் என்கிற பொருளையே வைத்துக் கொண்டு ப்ரஹ்ம என்கிற சொல்லுக்கு ப்ரஹ்மாதீனம் என்று பொருள்கூறி 'ஸர்வம் ப்ரம்ஹ' என்கிற வாக்கியத்திற்கு ப்ரபஞ்ச மெல்லாம் எம்பெருமானுக்கு ஆதீனமானது என்று பொருள் கூறுகின்றனர். ப்ரஹ்ம என்

கிற சொல்லிற்கு ப்ரஹ்மாதீனம் என்னும் பொருள் இலக்கணையினுலேயே கிடைக்கும். ஆகையால் ஆநந்ததீர்த்தருடைய நிர்வாஹம் ஔபசாரிகம் ஆகும்.

ஸர்வம் என்கிற சொல்லுக்கு ஸர்வத்தையும் சரீரமாக உடையவன் என்கிற பொருள் சப்தசக்தியினுலேயே கிடைக்கும். உலகில் சரீரத்தைக் குறிப்பிடும் சொற்களுக்கு சரீரத்தை உடைய ஆத்மா என்னும் பொருள் ஏற்படுவதைக் காண்கிறோம். 'கோபாலன் அறிகின்றுன்' என்கிற வாக்யத்தில் உள்ள கோபாலன் என்னும் சொல்லுக்கு அப்பெயரைக்கொண்ட சரீரத்தை உடைய ஆத்மா என்று பொருள் கூறினுல்தான் அறிகின்றுன் என்னும் சொல்லுடன் அதற்கு அன்வயம் சரியாக அமையும். இவ்வாறு அநேக உதாஹரணங்களைக்காட்டி பரபஞ்சம் எல்லாம் எம்பெருமானுடைய நிர்வாஹம். இலக்கணையின்றியே முக்கியமாகவே அமைகின்றது. இதுவே இந்த தரிசனத்திற்கும் ஏற்றம். 'உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கு பரந்துளன்' என்று நம்மாழ்வாரால் சுருக்கமாகக் கூறப்பட்டதை ஸ்ரீமந்நாதமுனிகள் வழியாகக் கேட்டு அநேக ச்ருதிஸ்ம்ருதி புராணயுக்திகளைக் காட்டி நிரூபித்துக் காட்டினுர் எம்பெருமானுர்.

இவ்வாறு பெருமை பொருந்திய இத்தர்சனத்தை சிஷ்யாசார்ய பரம்பரையாக நம்மாசிரியர்கள் காப்பாற்றி வருகின்றனர். அவ்வாசிரியர்களுள் இப்பொழுது நாவல்பாக்கத்தில் எழுந்தருளியிருக்கும் அடியேன் ஆசார்யரான ஸ்ரீ. உ. வே. அய்யாஸ்வாமிக்குத் தனிச்சிறப்பு உண்டு. பஞ்சகால ப்ரக்ரியையினுல் எம்பெருமானை ஆராதிப்பது சிறந்த தர்மம் என்று ஸ்ரீபாஷ்யகாரரால் நிஷ்கர்ஷிக்கப்பட்ட தர்மத்தை பால்யம் முதற்கொண்டு இன்றுவரை நழுவாமல் அனுஷ்டித்து வரும் இவ்வாசிரியரைப் பெற்றது அடியேனுடைய சிறந்த பாக்ய விசேஷமே. 'இதைச் செய்ய வேண்டும்' 'அதைச் செய்யவேண்டும்'என்று உபதேசம் பண்ணுவது எளிது. ஆனுல் அதை நடைமுறையில் குறையில்லாமல் கொண்டு வருவது மிக மிக சிரமம். ஒரு ஸந்த்யா வந்தனத்தைக்கூட காலத்தில் சரியாக அனுஷ்டிக்க முடியாமல் இருக்கும் இக் கலியுகச்சூழ்நிலையில் ஆஜன்மசுத்தராய் எம்பெருமானுர் நியமித்த கைங்கரியங்களை வழுவாமல் நடத்திவரும் மஹான் இவ்வாசிரியர். பொருளுக்கும், புகழுக்கும் ஆசைப்படாதவர். தம்மை நெருங்கிய அந்தேவாஸிகளுக்கு ப்ரீதி பூர்வமாக உபதேசம் செய்து அவர்களையும் தம்மைப்போல் வித்வான்களாகவும், அனுஷ்டான பரர்களாகவும் ஆக்கக்கூடிய ஆற்றல் படைத்தவர்.

'ஆத்மஸாம்யாவஹத்வாத்' என்பது இவ்வாசிரியரிடம் சாலப் பொருந்தும். இவ்வாசிரியருடைய அனுக்ரஹத்தால் ஜ்ஞானத்தைப் பெற்று உலகம் போற்ற நிற்கும் வித்வான்கள் பலர் உளர். ஸ்வாமியின் ஜ்ஞானம் அனுஷ்டானம் ஒரு புறம் இருக்க ஸ்வாமியின அர்ச்சையில் ஈடுபாடு அதிவிலக்ஷணம். ஸ்வாமியின் தேஜஸ்ஸின் பலத்தினுல் நாவல் பாக்கத்தில் திருக்கோயிலில் அநேக திருப்பணிகள் நடந்துள்ளன. இதற்கு முன்பு எழுந்தருளியிருந்த பெரியோர்களின் திருவுள்ளத்தில் நடமாடிக் கொண்டிருந்த திருத்தேர் நிர்மாணம், திருக்கோபுர நிர்மாணம் முதலிய கைங்கர்யங்கள் இந்த ஸ்வாமியினுல் நிறைவேற்றப்பட்டன. 'ப்ரஹ்மவித இவ ஸௌம்யதே முகம் பவதி' என்று உபநிஷத்தில் கூறியபடி ஸ்வாமியின் திருமேனியிலுள்ள தேஜஸ் உள்ளே இருக்கும் ப்ரஹ்ம ஜ்ஞானத்தையும் ஆசாரபரதையையும் வெளிக்காட்டுகின்றது. இப்படிப்பட்ட மஹானின் காலத்தே தோன்றி அவரை ஸேவிக்கப் பெற்ற நாம் பாக்கியசாலிகளே. சதாபிஷேக மஹோத்ஸவத்தைக் காண்பவர்கள் பரம பாக்கியசாலிகள்.

இந்த ஸ்வாமி இன்னுமொரு நூறுண்டு எழுந்தருளியிருந்து சிஷ்யவர்க்கங்களை உஜ்ஜீவிப்பிக்கும்படி அருள்புரிய அலர்மேல் மங்கையுறைமார்பனை ஸ்ரீநிவாஸப் பெருமாளை ப்ரார்த்தித்து நிற்கின்றேன்.

தூப்புல் வேதாந்ததேசிகன்

தேசிக தர்சனம்

[ஸ்ரீ. உ. வே. கொத்திமங்கலம் வித்வான் வரதாசாரியர், மைசூர்.]

ஒவ்வொரு மதத்திலும் ஸித்தாந்தபாகம் ஸம்ப்ரதாயபாகம் என இரு பிரிவுகள் உள்ளன. தத்வ நிரூபணம் செய்யும் பாகம் ஸித்தாந்த பாகம். இலக்ஷ்யத்தையடையும் வழி முறைகளைச் சொல்லும் பாகம் ஸம்ப்ரதாய பாகம். ஸித்தாந்த பாகத்தை 'தர்சனம்' என்றும் கூறுவர்.

நம் மதத்தில் ஸித்தாந்த பாகத்தை விசிஷ்டாத்வைதஸித்தாந்தம் அல்லது விசிஷ்டாத்வைத தர்சனம் என்றும், ஸம்ப்ரதாய பாகத்தை ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் என்றும் கூறுவர். அந்தந்த ஸித்தாந்தத்தை உலகில் யார் பூரணமாக நிலை நாட்டுகின்றனரோ அவரவர் பெயரில் அந்தந்த தர்சனத்தையழைப்பதும் வழக்கமுண்டு. அதிலும் ப்ரம்ஹஸூத்ரங்களுக்கு 'பாஷ்ய' மெனப்படும் விரிவுரையை வழங்கியவரே அந்த ஸித்தாந்தத்தை ஸ்தாபித்தவர் எனக் கூறுவதும் வழக்கிலுள்ளது. இதன்படி இந்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு 'ராமானுஜதர்சனம்' என்ற மற்றொரு பெயரும் வழக்கிலுள்ளது.

நாதமுனியும் யாமுனமுனியும்

ஸ்ரீராமானுஜருக்கு முன் இருந்த ஸ்ரீநாத முனிகளின் பௌத்ரரான ஸ்ரீயாமுனமுனி என்கிற ஆளவந்தார் தாமே ப்ரம்ஹ ஸூத்ரங்களுக்கு 'பாஷ்யம்' எழுத எண்ணியிருந்தாரென்றும் ஆனால் இந்தகாரியம் பின்வரும் ராமானுஜர் மூலமே ஆக வேண்டு மென்கிற பகவத் ஸங்கல்பத்தை யறிந்து அவர் இம் மஹா கார்யத்தை நிறை வேற்றும் பொறுப்பை ஸ்ரீராமானுஜருக்கே விட்டு விட்டார் என்றும் சரித்திரம் கூறுகிறது. ஸ்ரீதேசிகனும்.

नाथोपज्ञं प्रवृत्तं बहुभिरूपचितं यामुनेयप्रबन्धैः त्रातं सम्यग्यतीन्द्रैः " என்று மும் முனிவர்களுக்குமே இந்தஸித்தாந்த ஸ்தாபன பெருமையை யளித்த விஷயம் நோக்கத்தக்கது. ஆனால் உலகில் ராமானுஜரின் பேரிலேயே இந்த ஸித்தாந்தம் பிரஸித்தமாகி யிருப்பதற்கு பகவத் ஸங்கல்பமே பிரதான காரண மெனத் தோன்றுகிறது. ஸ்ரீராமானுஜரைக் கொண்டு ப்ரம்ஹஸூத்ரங்களுக்கு பாஷ்யத்தை எழுத வைத்து அவருக்குத்தன் மூர்த்தியை ஸரஸ்வதி தேவிமூலம் அனுக்ரஹித்த ஸ்ரீஹயக்ரீவனின் ஸங்கல்பம் இதற்கெல்லாம் மூல காரணமாகும். ஹயக்ரீவன் விஜ்ஞான மூர்த்தி. அத்யாத்ம விஜ்ஞானம் என்கிற ஆத்ம விஜ்ஞானம் ராமானுஜர் மூலம் வெளி வந்த அளவு வேறு யாராலும் வெளி வர வில்லை என்பதையே இது குறிக்கிறது. ஜ்ஞானம் பூரணமானால் விஜ்ஞானமாகிறது.

ஸ்ரீதேசிகனும் ஸ்ரீராமானுஜனும்

यमेवैष वृणुते तेनलभ्यः (பகவான் யாரைவிரும்புகிருனே அவர்களுககு அவன் காட்சிக்கெளியன்) என்று கடோபநிஷத் கூறுவது போல் தானகவே ஹயக்ரீவன் தேடிவந்த மற்றொரு ஆசாரியனே நம் தேசிகன். ஸ்ரீதேசிகனுக்கு அவரது ஆசாரியன் உபதேசிதது கருடமந்த்ரமே. ஆனால் கருடன் என்கிற பெரிய திருவடி தேசிகனுக்கு ப்ரத்யக்ஷமாக ஹயக்ரீவமந்த்ரத்தை உபதேசித்து அதை ஜபிக்கும்படி நியமித்தருளினர். ஒரு தேவதை மற்றொரு தேவதையின் மந்த்ரத்தை உபதேசிப்பது என்பது ஸாதாரண விஷய மன்று. மனுஷ்யர்களான ஆசார்யர் மூலம் உபதேசிக்கபபட்ட மந்தரங்களே அத்புத ஸாதனைகளைப் புரியும் போது தேவதையால்

உபதேசிக்கப்பட்ட மந்த்ரம் எவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்கு மென்பதைச் சொல்லி யறிய வேண்டாம். சுருங்கக் கூறின் ஸ்ரீதேசிகனிடம் பொலிந்த அளவு ஹயக்ரீவ பகவான் வேறு யாரிடமும் பொலியவில்லை. இங்ஙனம் ஸ்ரீராமானுஜனைத் தேடிவந்த ஹயக்ரீவன் மறுபடி தேவையை யுணர்ந்து ஸ்ரீதேசிகனிடம் பூரணமாக ஆவிர்பவித்தார் என்பது ஸ்ரீராமானுஜனுக்கும் ஸ்ரீதேசிகனுக்கும் உள்ள உறவை உறுதிப்படுத்துவதாகிறது.

ஹயக்ரீவனும் தேசிகனும்

இங்ஙனம் ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவன் தாமாகவே வரித்துக்கொண்டு ஸ்ரீதேசிகனை அடைவதற்குக் காரணமென்ன? இதை உணரவேண்டுமானால் சுமார் 1600 வருஷத்திய நம்நாட்டின் சரித்திரத்தை நாம் ஆராயவேண்டும். சுமார் 1500 வருஷங்களுக்குமுன் அதாவது கி. பி. (A.D.) ஐந்தாவது நூற்றாண்டிலிருந்து நம் ஸநாதன தர்மத்துக்குப் பௌத்த பண்டிதர்களால் பெருத்த எதிர்ப்பு தோன்றத்தொடங்கியது. ஏறக்குறைய கி. பி. ஏழாவது நூற்றாண்டில் தோன்றிய குமாரிலபட்டரிலிருந்து (A. D.) கி. பி. பத்தாம் நூற்றாண்டில் தோன்றிய உதயணாசாரியர் வரை வாழ்ந்த அனேக மஹான்கள் பௌத்தரை அனேக விதங்களில் வென்று மீண்டும் நம் ஸநாதந வைதிக தர்மத்தை நிலை நாட்டப் பெரும்பாடுபட்டனர். இந்த வரிசையிலேயே ஆதிசங்கரரும் வருகிறார். இங்ஙனம் மஹான்கள் பல விதமாக முயன்றும் பௌத்தம், ஜைனம் (சமணம் சாக்கியம்) என்னும் புறச்சமயங்கள் 10 ஆம் நூற்றாண்டு வரை பூரணமாக அழிய வில்லையென்பதற்கு 10 ஆம் நூற்றாண்டில் தோன்றிய 'தத்வஸங்க்ரஹம்' என்கிற பௌத்த நூலே சான்று. இராமானுஜர் காலத்திற்குப் பிறகே புறச்சமயத்தைச் சேர்ந்தவர்களின் நூலொன்றும் வெளிவரவில்லை யென்பது குறிப்பிடத்தக்கது. எனவே வைதிக மத ஸ்தாபனம் ஸ்ரீராமானுஜராலேயே பூரணமாக்கப்பட்டதென்பது தெளிவு.

பௌத்தரும் ப்ரச்சன்ன பௌத்தரும்

இங்ஙனம் ஸ்பஷ்டமான பௌத்தர் காலம் முடிவடைந்து நம் வைதிகமதம் ஸ்ரீராமானுஜர் காலத்தில் பூரணமாகத்தழைத் தோங்கிய போதிலும் ஸ்ரீ ராமானுஜர் .பரமபதிப்பதற்காகவே காத்திருந்தது போல் மறுபடியும் பௌத்தரின அட்டஹாஸம் முளைவிடத் தொடங்கியது. மேலும் ஸ்ரீ ராமானுஜருக்கு முந்தைய காலத்திலிருந்த பௌத்தரைக் காட்டிலும் இவர்கள் மாரீச பௌத்தராகி நம் தர்மத்திற்கு மிகவும் கேடு விளைவித்தனர். ஒரு நாட்டிற்குப் புறத்தேயுள்ள பகையைக் காட்டிலும் உள் நாட்டுப் பகையே மிகவும் கேடு விளைவிக்கக் கூடியது. அதைப் போல் வைதிகர் வேஷத்தில் பௌததர் தோன்றத் தொடங்கியதை 𑌖𑌣𑍍𑌡𑌨 𑌖𑌣𑍍𑌡 𑌖𑌾𑌦𑍍𑌯 என்ற நூலைப் படித்தவர் உணர்வர்.

பௌத்தரும் ப்ரச்சன்ன பௌத்தரும்

குமாரிலபட்டர் முதலான மஹான்களால் பௌத்தமதம் ஒடுக்கப்பட்டபோது நம் மதத்தின் பெருமையை உணர்ந்தும் வாதங்களில் தோல்வியுற்றும் பண்டிதர் பலர் மீண்டும் வைதிகமதத்தைத் தழுவினர். இங்ஙனம் அவர்கள் மாறினாலும் பழைய வாசனை தொடர்வது ஸஹஜமல்லவா? ஆகையால் இராமானுஜருக்கு முற்பட்ட பல வேதாந்திகளின் நூலகளில் பழைய பௌத்தமத வாடை வீசுவதைத் தெளிவாகக் காணலாம்.

அத்வைதமும் பாஸ்கரரும்

ஸ்ரீராமானுஜருக்கு முன் தோன்றிய 'பாஸ்கரர்' என்கிற வேதாந்தி எழுதிய பாஸ்கர பாஷ்யம் என்ற நூலில் மேற்கண்ட உண்மையை வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம். அக் காலத்திய அத்வைத வேதாந்திகளை இவர் "வைதிக வேஷத்திலுள்ள

பௌத்தர்கள்'' என அழைத்தார். ஸ்ரீதேசிகனும் சத தூஷணியில் 'பௌத்தனுக விருக்கும் நீ ஏன் வைதிகப் போர்வையைப் போர்த்துள்ளாய்' என்று இவர்களைப் பரிஹஸிக்கிருர். இங்ஙனம் புல்லுருவிபோல் நம் மதத்தை நாடிவந்த பௌத்தர்களாலும், உண்மையில் மதம் மாறிய போதிலும் பழைய பௌத்த வாஸனை நீங்காத வேதாந்திகளாலும் முற்காலத்தைக் காட்டிலும் நம் மதத்திற்குப் பயங்கர அபாயம் எழுந்தது.

ஸநாதனமும் பௌத்தமும்

ஸனாதன தர்ம மென்கிற வைதிக தர்மத்திற்கும் பௌத்ததர்மத்திற்கும் மோதலுக்குக் காரணமான மூல விஷயம் ஈச்வரவாதம் தான். 'இவ்வுலகம் ஈச்வரனிட மிருந்து தோன்றி அவனிடத்தில் நிலைத்து அவனிடமே ஒடுங்குகிறது'' सन्मूलाः सौम्येमाः प्रजाः सदायतनाः सत्प्रतिष्ठाः என்கிறது வைதிகதர்மம். ஈச்வர தத்வத்தை எதிர்ப்பதே பௌத்த மதத்தின் முக்கிய நோக்காகும். வைதிக தர்சன மென்று பெயர் பெற்ற மீமாம்ஸகமதமும் ஈச்வரனை ஏற்கவில்லை யல்லவா? என்று கேட்கலாம். அது ஈச்வரனை எதிர்க்க வில்லை. ஈச்வரனைப் பற்றிப் பேசவில்லை என்பதுதான் உண்மை. இதை வேருெரு ஸமயம் விளக்கலாம். ஈச்வர வாதம் நிலைத்தால் வைதிகத்தின் மற்ற எல்லாக் கொள்கைகளும் தானுக வந்துவிடும் என்றறிந்து இதை எதிர்ப்பதே தங்கள் முதல் கடமை என்று பௌத்தர்கள் எண்ணினர் போலும்.

பௌத்தமும் இடைக்கால அத்வைதமும்

இடைக்கால அத்வைதமும் இதையே வேறு பெயரில் நிலைநாட்டுகிறது. ''ஈச்வரன் என்கிற ஒருண்மையான பொருளே கிடையாது. உலகத்திற்குப் படைப்பு, அழிவு (ஸ்ருஷ்டி, லயம்) எதுவும் கிடையாது. எல்லாம் பொய். பொய்யான உலகைப்படைப்பதும் காப்பதும் எங்ஙனம்? இதுவே இடைக்கால அத்வைதத்தின் ஸாரம். பௌத்தமும் இதையே வலியுறுத்துகிறது. ஆகவேதான் பாஸ்கரர் என்ற வேதாந்தி இவர்களைப் பௌத்தர்கள் என்றே அழைத்தார். ஈச்வர தத்வத்தைத் தழுவியே நம் ஸநாதனதர்மம் தழைத்தாக வேண்டும். அவனுக்கும் நமக்கும் உள்ள உறவை நன்கு அறிந்து அவனிடம் பக்தி செலுத்திப் பலவிதமாகத் துதித்துப் பூசித்துக் கொண்டாடி மகிழ்ந்தால் தான் ஜீவன் கரையேற வியலும். பௌத்த சமயத்திலும் இடைக்கால அத்வைதத்திலும் இவை யொன்றுக்கும் இடமே இல்லை. இதைக் காட்டிலும் நம் தர்மத்திற்கு வேறு என்ன அனர்த்தம் வேண்டும்.

ஸ்ரீராமானுஜரும் அவர் தர்சனமும்

இத்தகைய கொடிய சூழ்நிலையில்தான் ஸ்ரீராமானுஜர் பகவானது திருவாணையை யேற்றுத் தன் சொந்த அனுபவம், நடைமுறை முதலியவற்ருல் பக்தியின் பெருமையையும் பகவானது அனந்த கல்யாண குணங்கள், அனந்தருபங்கள், வைபவங்கள் ஆகியவற்றையும் உலகில் நிலைநாட்டினுர். அவர் சுமார் 120 ஆண்டுகள் வாழ்ந்தபடியால் அவரது கொள்கைகள் உலகில் நன்கு நிலைபெற்று 'உலகம் பொய்' என்ற வாதமும் நிரீச்வர வாதமும் வேரொடு அழிந்தன.

ஹர்ஷனும் அத்வைதமும்

ஆனுல் கி. பி. 13ஆ வது நூற்றுண்டில் தோன்றிய ஸ்ரீஹர்ஷன என்கிற ஒரு மூர்க்க பண்டிதன் खण्डन खण्ड खाद्य என்கிற தன் விதண்டாவாத நூலில் வைதிக வேஷத்திலேயே பௌத்தனுக இருந்துகொண்டு ஈச்வர தத்வத்தையும் அதைத் தழுவிய ஆஸ்திக மதக்கொள்கைகளையும் தகர்த்தெறிய முற்பட்டான். இந்நூலில் ஸ்ரீஹர்ஷன் அக்கால அத்வைதிகளையும் பௌததர்களையும் ஒன்ருக்கியுள்ளதையும் காணலாம். இதனுல்

பழைய கள்ளையே புதிய பாத்திரத்தில் கொடுத்தது போல் வைதிக மதப் போர்வையிலேயே பௌத்த மதத்தைப் பரப்ப முயன்றமை தெளிவு. நம் தேசிகன் அவதரித்து இவர்களை யொழித்திராவிடில் குமாரிலர், ஆதிசங்கரர் முதலானோர் பட்ட கஷ்டங்களெல்லாம் வீணாகியிருக்கும்.

வித்யாரண்யரும் ஸ்ரீஹர்ஷனும்

ஸ்ரீதேசிகனது ஸமகாலத்தவரான வித்யாரண்யர் என்கிற அத்வைதியே ஸ்ரீஹர்ஷனைப் புறமதத்தவனென்றும் அவனது நூலை ஏற்கத்தகாத புற நூலென்றும் கூறியுள்ள உண்மையை அவரது "சங்கர விஜயம்" என்ற நூலில் காணலாம். இக் காலத்திய அத்வைதிகள் இதற்குத் தலைகீழாக ஸ்ரீஹர்ஷனையும் அவனது நூலையும் தங்களுடையதாகப் பாவிப்பதைப் பார்க்கும்போது அக்காலத்தில் வித்யாரண்யர் அங்ஙனம் கூறுவதற்கு ஸ்ரீதேசிகனே முக்ய காரணமென்பது தெளிவு. ஸ்ரீஹர்ஷனின் உண்மைவடிவத்தையும் அவன் வைதிக போர்வையிலுள்ள நாத்திகன் என்பதையும் ஸ்ரீதேசிகன் நிலைநிறுத்தியதைக் கண்ணாரக் கண்ட வித்யாரண்யர் அவனையும் அவனது நூலையும் கைவிட்டுள்ளது நியாயமேயாம்.

ஸ்ரீஹர்ஷனும் தேசிகனும்

ஸ்ரீஹர்ஷன் தன் பாண்டித்யத்திற்கு 'சிந்தாமணி' என்கிற பௌத்த தந்தரத்தைச் சேர்ந்த மந்த்ரமே காரணம் என்று தன் நூலில் ஸ்பஷ்டமாகக் கூறியுள்ளான். இத்தகைய மந்த்ர ஸித்தியின் பயனாக அவனை அக்காலத்தில் நேருக்கு நேராக யாராலும் எதிர்க்க இயலவில்லை என்று தெரிகிறது. இத்தகைய மகாபண்டிதனின் வழித்தோன்றல்களால் நம் தர்மத்திற்குக் குலைவு வராமலிருக்கவே ஸ்ரீஹயக்ரீவன் தானாக நம் தேசிகன் மூலம் ஆவிர்பவித்தான். ஸ்ரீஹர்ஷனை நேருக்கு நேராகவே ஏன் ஒடுக்கியிருக்கக்கூடாது என்று கேள்வி எழக்கூடும். மந்த்ர ஸித்தி பெற்றவருக்குத் தெய்வம் ஏதோ ஒரு விதத்தில் வரம் கொடுப்பது இயல்பு. ஆகவே அத்தகையவரை நேரில் முறியடிக்காமல் மறைமுகமாக முறியடிப்பதுதான் தெய்வச் செயல்கள் எல்லாவற்றிலும் கண்டுகொள்ள வேண்டிய ஸூக்ஷ்மமாகும்.

ஸ்ரீதேசிகனது யதிராஜஸப்ததி

மந்த்ரஸித்தியின் கர்வத்தில் ஸநாதன தர்மத்தை அசைப்பகைவராக இருந்து அழிக்கத் துணிந்து தட்டிக்கேட்பாரற்றுத் தலைவிரித்தாடும் கும்பலை அடக்க "பிசாசுகளுக்கு அவற்றின் மொழியிலேயே விடையிறுக்க வேண்டும்" என்கிற பழமொழியின்படி ஒருவர் வீறுகொண்டெழுதல் அவசியம். ஆகவே தான் ஸ்ரீதேசிகனும் பகவதாஜ்ஞையைச்சிரமேற்கொண்டு

> यतीश्वर सरस्वतीसुरभिताशयानां सतां
> वहामि चरणाम्बुजं प्रणतिशालिनामौलिना ।
> तदन्यमत दुर्मद ज्वलितचेतसांवादिनां
> शिरस्सु निहितं मयापदमदक्षिणं लक्ष्यताम् ॥

என்று கர்ஜித்தார். இச்சுலோகத்தின் முற்பகுதியில் நம் வேதம் அதிலுள்ள ஈச்வரதத்வம் அதன் உருவம் குணம் முதலிய வற்றை ஏற்பவரைக் குறித்தார். பிற்பகுதி இதற்கு எதிரான நாத்திகரைக் குறிக்கிறது.

ஸ்ரீதேசிகனும் ஸஹதேவனும்

மஹாபாரதத்தில் ராஜஸூய யாகத்தில் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு முதல் தாம்பூலம் கொடுப்பதை எதிர்த்த சிசுபாலன் விஷயத்தில் ஸஹதேவனும் இங்ஙனமே கூறியுள்ளது நோக்கத்தக்கது.

ஸ்ரீக்ருஷ்ணனின் பூஜையை எதிர்ப்பவர் யாராக இருந்தாலும் அவர் தலை மேல் காலை வைப்பேன் என்று ஸஹதேவன் கூறும்போது வானத்திலிருந்து மழை பொழிந்ததாக மஹாபாரதம் கூறுகிறது.

மேற் கூறிய ஸஹதேவனது சுலோகங்கள் எந்தச் சூழ் நிலையில் வெளிவந்தனவோ அதே சூழ் நிலையில் ஸ்ரீதேசிகன் திருவாக்கிலிருந்தும் यतीश्वर सरस्वती என்கிற சுலோகமும் வெளி வந்துள்ளதென்பதை அக்காலத்திய நூல்கள், சரித்திரங்கள் ஆகியவற்றை ஆராய்ந்தவர் நன்குணர்வர்.

ஸ்ரீ ஆதிசங்கரரும் ஸ்ரீதேசிகனும்

பல வகைத் தோத்திரங்களால் பகவானது கல்யாண குணங்கள் உருவங்கள் ஆகியவற்றைப் போற்றிய ஆதிசங்கரரும் ஸ்ரீதேசிகனது यतीश्वर सरस्वती சுலோகத்தைக் கேட்டு மனம் பூரித்திருப்பாரே யொழிய சீறியிருக்கமாட்டா ரென்பது திண்ணம். ஏனெனில் ஆதி சங்கரரின் ஸித்தாந்தமும் பின்னர் வந்த அத்வைதிகளின் ஸித்தாந்தமும் வெவ்வேறானவை என்பதை நடுநிலையிலுள்ள பண்டிதர் ஏற்பர். இக்கொள்கை நாளுக்கு நாள் பலமாக வெளியாகிக் கொண்டிருப்பதை விவேகிகள் உலகம் கூர்ந்து கவனித்து வருகிறது. ஸ்ரீதேசிகனும் இத்தகைய— இடையில் வந்த வைதிகப் போர்வையிலிருந்த பௌத்தர்களை எண்ணியே இச் சுலோகத்தைக் கோஷித்தார்.

ஆக தேசிகதர்சனம் வைதிகதர்சனம் ஸநாதனதர்சனம் ராமானுஜ தர்சனம் ஆகியவை எல்லாம் ஒரே பொருளையுடையவை. நாதமுனி யாமுனமுனிகளின் தர்சனம் ராமானுஜ தர்சன மானதைப் போல் ராமானுஜதர்சனம் தேசிகதர்சனமாவதற்கு எவ்விதத் தடையுமில்லை. அதுமட்டு மின்றி ஸ்ரீஹயக்ரீவன் ஸங்கல்பித்தகாரியம் ஸ்ரீராமானுஜர் மூலம் நிறைவேறியதால் இந்த தர்சனத்திற்கு ராமானுஜ தர்சனம் என்று பெயர் ஏற்பட்டது எவ்வளவு பொருத்தமோ அவ்வாறே ஸ்ரீஹயக்ரீவனது ஸங்கல்பம் ஸ்ரீதேசிகனாலேயே நிலை நாட்டப் பட்ட மையால் தேசிகதர்சன மென்று ராமானுஜதர்சனத்தை அழைப்பது சாலவும் பொருந்தும்.

ஸ்ரீதேசிகன் அவதரித்து இந்த பசுத்தோல் போர்த்திய புலிகளை யழித்திராவிடில் வைதிக தர்மம் இன்று நாம் காணும் அளவுக்காவது கிடைத்திருக்குமா? என்பது ஐயம்தான்.

எனவே வைதிக தர்சனமே தேசிக தர்சனமாகும் என்பது நடு நிலையில் நின்று உணர்க.

निर्विष्टं यति सार्वभौम वचसामावृत्तिभिर्यौवनं

என்ற ஸ்ரீதேசிகனது ஸ்ரீஸூக்திக்கேற்ப வாழ்க்கை நடத்துபவர் அரிதான இக் காலத்தில் ஸ்ரீநாவல்பாக்கத்தில் ஸ்ரீ உ.வே வித்வான் அக்னிஹோத்ரம் நாராயணாசாரியர் ஸ்வாமி ஸ்ரீ உ.வே. வித்வான் தேவநாதாசாரியர் ஸ்வாமி ஆகிய இருவரும் பரமை காந்திகளாய் ஸ்ரீதேசிக ஸ்ரீஸூக்திக்கேற்றபடி வாழ்ந்து காட்டி வருகின்றனர்.

தற்போது சதாபிஷேகம் கண்டருளும் ஸ்ரீதேவநாதாசாரியர் ஸ்வாமியின் ஜ்ஞாநானுஷ்டானங்களை அனைவரும் அறிவர்.

இந்தஸ்வாமி பல்லாண்டு பல்லாண்டு எழுந்தருளி உலகுக்கு வழிகாட்ட வேண்டுமென்று ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீ நிவாஸபரப்ரஹ்மணே நம:

ஸத்ஸம்ப்ரதாயம்

[அபிநவதேசிக உத்தமூர், ஸ்ரீ. உப. வே. தி. ந. ச. வீரராகவாசாரியார் ஸ்வாமி]

வேதத்தில் நம்பிக்கையற்றவர்களும், பெரும்பாலும் நாஸ்திகவாதத்தை விரும்பாமல் தேஹம் வேறு, ஆத்மா வேறு என்றும், அதர்மங்களைச் செய்தால் அவற்றின் பலனை மறுபிறவியில் அனுபவிக்க வேண்டுமென்றும் முடிவு கொண்டனர். மிகவும் நவீனரான ஹூணதுருஷ்கர்களின் கொள்கையும் இதே. பழைய பௌத்த ஜைநாதிகள் அநுதியாகக் கர்மபரவாஹத்தை யங்கீகரித்திருப்பது நிர்விவாதம். இவர்களெல்லாம் ஸமஸாரவாதை விலக விரகு என்ன வென்று விசாரிக்க இழிந்து முதலில் ஸம்ஸாரகாரணமென்ன என்பதைத் தெளிந்த பிறகே அதை நிச்சயிக்க முடியுமென்று ஜகத்காரணவிசாரம் செய்பவராயினர். ப்ரத்யக்ஷத்திற்குப் புறம்பானதால் தர்க்கமே ப்ரமாணமாகுமென்னுமிவர்களின் மனத்திற் பல பக்ஷங்கள் படுமென்பதை ச்வேதாச்வதரோபநிஷத்துக் குறித்தது, 'கால: ஸ்வபாவோ' 'நியதிர் யத்ருச்சா' பூதாநியோநி: 'புருஷ:' என்றவாறு வேதத்தில் சிரத்தையுள்ள குத்ருஷ்டிகளும் உண்மையான பொருள் விளங்காமையால் இப்பக்ஷங்களிலொன்றில் விழுவர்; வேறு ஆபாஸபக்ஷங்களையும் ஆதரிப்பர். அதையும் அவ்வுபநிஷத்தே முன்கூட்டிக் கூறும் இப்பக்ஷங்களை விட்டு ப்ரம்மமே ஜகத்காரணமென்று இசைந்த பிறகும் கிம் காரணம் ப்ரஹ்ம என்று விசாரிக்கவேண்டுமென்கிறதே, ஸாங்க்ய, தார்க்கிக, சைவ, சாங்கரபாஸ்கர, யாதவப்ரகாசாதி பக்ஷங்கள் பல வாருகப் பரவியுள்ளதே அதற்குக் காரணமாகும். பழைய பக்ஷம் வேறென்று தெரிந்திருந்தும் அதில் அச்ரத்தையும் புதிதாக தம் மனத்திற் பட்டதில் ஆஸ்த்தையும் உண்டாவது பலருக்கு ஸஹஜம். இதற்கு ஆநந்தமயாதிகரணத்தில் வியாஸருடைய ஸூத்ரங்களுக்கு ஸ்வரஸமான பொருளைப் பழையவுரைக் கிணங்கத் தாமே வரைந்த பிறகும் அதை விட்டு வேறு விதமாக உபநிஷத்துக்குப் பொருள்கூற விழிந்து புச்சப்ரஹ்மவாதம் செய்யும் ஸ்ரீசங்கராசார்யரே உதாஹரணமாகலாம். வியாஸரை விடக்கூடாதாகையால் ஸூத்ரங்களுக்கும் வேறு பொருள் அடைக்க முயற்சிசெய்கிறார். இப்படியிருக்க வரம்பு கடந்த வேதபாஹ்யர் தோன்றியபடியெல்லாம் பணிக்கத்துணிவதில் என்ன ஆச்சர்யம்? இவையெல்லாம் நீடித்து நிற்பதால் அஸத்ஸம்ப்ரதாயங்களாயின.

ஸ்ரீபாஷ்யத்தில் सत्सन्तानप्रसूत सदाचारनिष्ठ त्मगुणोपेत वेदविदाच र्योपनीतस्य என்று உபநயநவேதாந்தபடங்களுக்கே ஆசார்யன் இவ்வளவு லக்ஷணங்களை உடையனுகயிருக்க வேண்டுமென்ற போது வேதாந்த ஸம்ப்ரதாயம் பெற வேண்டுமாகில் ஆசார்யன் எவ்வளவோ மேலாயிருக்க வேண்டும். பித்ருவம்சம் குருவம்சம் இரண்டும் சிறந்திருக்க வேண்டும். அனுஷ்டான பரனுயிருக்க வேண்டும். அதைவிட மேலானவை, दया सर्वं भूतेषु என்று தொடங்கி கௌதமர் கூறிய ஆத்மகுணங்கள். நாற்பது ஸம்ஸ்காரங்கள் இருந்தும் ஆத்மகுணமில்லை யாகில் பலனில்லை. அவற்றில் குறைபிருப்பினும் ஆத்ம குணங்கள் இருக்குமாகில் அவையே நற்பலன் அளிக்குமென்ருரே! இவற்றுடன் ஜ்ஞானமும் தெளிவாயிருக்க வேண்டும். இக் காலத்தில் எல்லோரும் ஏதோ ஒரு

பாஷையைப் பயின்று ஊஹாபோஹம் செய்யும் திறமை வாய்ந்தவர்களே யென்னலாம். ஆனாலும் சாஸ்த்ர ஸரணியிற் ப்ரவேசமிரா மையால் கேட்ட விஷயங்களை மனத்தில் தரிக்கவும் தாங்கள் சொல்லவும் முடியாத நிலையிலிருக்கின்றனர். அதனால் சிலர்க்கு புறமதங்களைப் பற்றி விமர்சம் எதற்கு; நம் பெரியோர்களுக்கு அவை தெரியாமலிருந்தால் அவர்கள் செய்த முடிவைக் கொள்ளத் தயங்கலாம். அவர்கள் கூடுமானவரை எல்லாம் விசாரித்துக் கழித்தே முடிவுக்கு வந்திருப்பதால் நமது ஸித்தாந்தம் நமக்கும் போது மென்று நினைப்பர். அவர்களைக் கருத்திற் கொண்டு ஸ்ரீதேசிகன் அருளிச் செய்தார், शास्त्र ज्ञानं बहुक्लेशं बुद्धेश्चलनकारणम् । उपदेशात् 'हरिं बुध्वा विरमेत् सर्वकर्मसु' என்றவாறு. இது ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் தத்வத்ரய சிந்தநாதிகாரத்திலுள்ள காரிகை. அவ்வதிகாரத்தில் சிந்தித்திருக்கும் விஷயங்களை மனத்தில் வாங்கிக் கொள்வது மிக்க ப்ரயாஸையாகும். ஆனாலும் இது மொத்தம் பகவானைப் பற்றிய உபதேசமென்று விடாமல் ஒவ்வொருவரும் கற்பது மற்றமத சாஸ்த்ரங்களில் கிலேசப்பட வேண்டா என்ற கருத்தாலேயே இக்காரிகையை இங்கே சேர்த்தது. இவ்வதிகாரப் பொருளை விரித்துச் சொல்வதென்பது விசெஷ ஞானமும் ஸம்ப்ரதாயப்படி அறிவு மிலாதபோது ஸாத்யமாகாது. பிற மதங்களில் குண தோஷவிவேகம் வேண்டுமாகில் தத்துவ முக்தாகலாபம், ந்யாயஸித்தாஞ்ஜனம், பரமதபங்கம் போன்ற க்ரந்தங்களை அப்யஸிக்க வேண்டும். வேண்டாமாகில் இவ்வதிகாரம் அறிந்தால் போது மென்றதாயிற்று.

பிறமதத்தினர் தம் மதங்களிலுள்ள குற்றம் அறிந்தும் அபிநிவேசத்தாலே கோஷிப்பது போல் அரைவாய் கால்வாயானவர்கள் தங்களை ஸமர்த்தர்களாக நினைத்து, ஆஸ்திக மஹாவித்வான்கள் சொல்வதைச் செவியிற் கொண்டு தெளியப் பெருமையும் திறமையுமிராமலிருந்தும், ஆடம்பரம் செய்பவராகையாலே அத்தகையவருடைய வாதங்களுக்கு ஒருவாறு உத்தரம் அளிப்பதும் இக்காலத்தில் அவசியமாகிறது. சிறப்பாக சாஸ்த்ரப் பயிற்சியுள்ளவர்கள் மலிந்ருந்திருக்கும் வரையில் தான் மதம் நிலையுறும். வடமொழியைக் கைவிடப்படும் இக்காலத்திலே சாஸ்த்ரம் பயில யார் முன் வருவார்? ஆனாலும் பரம்பரா ப்ராப்தமான தனத்தையிழவாமல் காக்கப் பெரிய அக்ரஹாரங்கள் சிலவற்றால்தான் ஆகும். அத்தகைய இடங்களில் ஒன்றாகும் நாவல்பாக்க மென்ற பேரில் வழங்கப்பெறும் தாத வம்சத்தினரின் அக்ரஹாரம். நாவில் வலிமை பெற்ற ஸ்தானம் அது. ஆசார்ய பரம்பரையில் மேன்மேல் வருகிறவர்கள் கலியின் கொடுமையால் முன்முன் விளங்கின வரை விட ஈனஸ்த்தியிலேயே யிருப்பார்கள் என்ன வொண்ணாது. ஆசார்யர்களிடத்திலே சிஷ்யகளுக்கு இருக்கும் பக்தியின் பெருக்காலும், சில ஆசார்யர்களுக்கு அவ்பாஜமாய் அனுக்ரஹிப்பது விசேஷமாயிருப்பதாலும் அவரவர் பூர்வஸுக்ருதத்திற்கிணங்கப் பின்னேரும் முன்னேரைவிட மேம்பட்டிருப்பது முண்டு. நாதமுனிகள் ஆளவந்தார் எம்பெருமானர் நடாதூர் அம்மாள் தேசிகன் போன்றரைக்காண்க. அவ்வக்ரஹாரத்தில் ஸ்ரீஹயக்ரீவானுக்ரஹபாத்ரமான ஸ்ரீமத் அண்ணயார்ய மஹா தேசிகனின் வித்யாஸந்ததியிலே ஸ்ரீ உ. வே. வித்வான் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஜ்ஞாநா நுஷ்டாந வைராக்ய வாராங்நிதியாக விளங்கியிருந்தார். அடியேனுடைய தர்க்க சாஸ்த்ர குருவான மஹாதார்க்கிக ஸுப்ரஸித்த ஸ்வச்சந்தம் ஸ்ரீனிவஸாசார்ய ஸ்மியின் ப்ரேரணையால் இம் மஹான் மைசூர் சென்று तदाचार्य ஸ்ரீகஸ்தூரிரங்காசார்ய ஸ்வாமியின் பூர்ண க்ருபைக்கு ப்பாத்ரமாகி அற்புத தார்க்கிகராகத் திரும்பி வேதாந்த சாஸ்த்ரத்திலே விசேஷ பரிச்ரமம் பெற்று எழுந்தருளியிருக்கும்போது சிறுவர்களான

புத்திமான்கள் தர்க்க சாஸ்த்ரம் பயின்றனர். அவர்களில் ப்ரதானமானவர்கள் ஸ்ரீ உ. வே. ஸ்வாமி திருமாளிகை ஆராவமுதாசார்யர் ஸ்வாமி, ஸ்ரீ அக்னிஹோத்ரம் நாராயணாசார்ய ஸ்வாமி, ப்ரக்ருத ஸ்ரீ ஐயா தேவநாதாசார்ய ஸ்வாமி போன்றவர்கள். இவர்களுக்கெல்லாம் ஆசார்யராயிருக்கும் பதவி பெற்றும் அஹங்காரலவலேசமுமிராத வித்வான் ஸ்வாமி ''மீமாம்ஸாசாஸ்த்ரம் அப்யஸிக்க வேண்டும்; பூர்வமீமாம்ஸையும் உத்தரமீமாம்ஸையும் சேர்ந்து ஏக சாஸ்த்ரமன்று என்கிற சாங்கராத்வைதிகளே பூர்வமீமாம்ஸையில் அதிக பரிச்ரமம் பெற்றுத்தங்கள் சாரீரக பாஷ்ய வ்யாக்யாநாதிகளை வளர்த்தியிருக்கும் போது ஏக சாஸ்த்ரமென்ற ப்ராசீன முறையைப் பின்பற்றும் நாம் அதையறியாமலிருப்பதோ'' என்று எண்ண 'ஸ்ரீமஹாமஹோபாத்யாய திருவிசைநல்லூர் ராமஸுப்பா சாஸ்த்ரிகளிடம் சென்று முழுமையும் க்ரஹித்தார். அதன் பிறகு அந்த ஸ்வாமி ''விதைவாங்கி வந்துளோம்; இனி விதைக்கவேண்டும்' என்றருளியது'' இன்னும் அடியேனுக்கு நினைவிலிருக்கிறது. அந்த ஸ்வாமிக்கு அடியேன் சிஷ்யனாகா விடினும் தம் சிஷ்யர்களிடத்திற்போல் அடியேனிடம் அவ்யாஜமான க்ருபை நிரந்தரமாயிருந்தது. இதனை விரித்துரைக்க இது ஸமயமன்று.

ஸ்ரீபாஷ்யத்தில் அருளியபடி ஸத்ஸந்தாந ப்ரஸூத ஸதாசார நிஷ்ட ஸதாசார்யர் பக்கல் வேதாத்யயனம் செய்து ஸ்ரீகாஞ்சி தேவாதிராஜ ப்ரஹ்மோத்ஸவ வேதபாராயண கோஷ்டியில் முன்னே விளங்கி வரும் இம்மஹான் மீமாம்ஸையும் அதிகரித்து மேன்மையுற்றார். உபநிஷத்தில் உத்தாலகரென்ற மஹான் தமக்குப் போதுமான வித்யையைப் பெற்றிருந்தும் மேன்மேல் வித்யைகளைப் பெறப் பேராவல் கொண்டவரென்று கண்டிருக்கிறோம். அவர் போல் இம்மஹான் பல வேதங்களின் பல சாகைகளின் முடிவான உபநிஷத்துக்கள் முழுமையும் அத்யயனம் யார் செய்ய முடியும். ஆசார்யோபதேசமே அத்யயநமாக நினைக்கப்பட்ட இந்நாளில் தைத்திரியம் போன்ற தம் உபநிஷத்தையே அத்யயனம் செய்வதரிதாயிருக்க இவர் சாந்தோக்யோப நிஷத்தைப் பூரணமாக ஸ்வரத்துடன் அத்யயனம் செய்திருந்தும் ஓர் ஏற்றமாகும்.

முன் சொன்னதர்க்க சிஷ்யர்களான வேத வித்துக்கள் மீமாம்ஸை முழுமையும் அதிகரித்தனர். அக்ரஹாரம் இப்போது போல் அதிகக்ஷீணமாகாமல் பலர் அத்யயனம், காவ்யசாஸ்த்ரபடனம் இவற்றிலே ஆஸக்தராயிருந்த படியால் வேறு பாடசாலை முதலான இடத்திலிராமலே பரீக்ஷைகளுக்கு அனுப்பும்படி அங்கு வித்யையைவிருத்தி செய்துகொள்ள அனுகூலங்கள் இருந்தன. ப்ரக்ருதம் ஸ்ரீஉவே தேவநாதாசார்ய ஸ்வாமி தர்க்க சாஸ்த்ரத்தில் பரீக்ஷை கொடுக்கப் புதுக்கோட்டைக்கு எழுந்தருளின போது ஸமவயஸ்கனான அடியேனும் அதற்காகவே அங்குச் சென்றபடியால் அதுமுதல் பலகால் பரஸ்பரஸமாகமமும் ஸரஸமாக சாஸ்த்ரஸல்லாபமும் செய்து வந்திருப்பதால் சிறிது இங்கே எழுத முன் வந்தேன். சாஸ்த்ராப்யாஸம் செய்தது முதல் பலருக்கு ப்ரவசனம் செய்வதும் முக்யமென்று உத்ஸாஹத்துடன் அதில் இழிந்து பலருக்கு ஆசார்யராகி இன்னும் ப்ரவசனம் செய்தவண்ணமேயிருப்பதும்' இது வியாஜமாக விசிஷ்டாத்வைத ஸமபந்தமான உபயவேதாந்த க்ரந்தங்கள் எல்லாவற்றிலும் ஸாவதானமாக பரிச்ரமப்பட்டு அர்த்தஸ்வாரஸ்யங்களை யறிந்து ரஸிப்பதும் இவரிடம் நன்றாகக் காணலாம். பொதுவாகக்ரந்த சதுஷ்டயம் அதற்கு வேண்டிய முக்கிய வியாக்யானங்கள் என்ற வற்றோடு பல வேதாந்திகள் நிற்பதே பரம்பரையாக இருக்க ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திகளிலும் மற்ற மஹாக்ரந்தங்களிலும் மஹத்தான பரிச்

ரமம் பெற விரும்பிய மஹான்கள் சிலருண்டாகில்தானே முதலில் இங்கே ப்ரஸ்தாவித்தபடி பலருடைய துராக்ஷேபங்களுக்குத்தக்க ஸமாதானம் சொல்லி ஸ்வமத ஸ்த்தாபனம் செய்வது ஸாத்யமாகும். பிற் காலத்திலும் சிலர் இவ்வாறு விளங்கவேண்டு மென்பதற்காக இந்த ஸ்வாமி பாடுபடுவது போற்றத் தக்கது. இவருடைய ஆசார்யரான வித்வான் ஸ்வாமி மஹாவிரக்தாக்ரேஸரராய், சிஷ்யர்கள் பலர் இருந்தும் தமக்குப் பின்னே சேர்ந்துத் தொடர்ந்து வருவதையும் விரும்பாமல் ஏகாந்த சீலராயிருந்த படியால் அந்த ஸ்வாமியைப் பற்றியாரும் गुरुं प्रकाशयेत् என்கிற விதியை யனுஷ்டானத்தில் விரிவாகக் கொண்டு வரமுடியாமலிருந்தது. இந்த ஸ்வாமி தர்க்க வேதாந்தங்களில் சில க்ரந்தங்கள் செய்திருப்பதை ப்ரகாசப்படுத்த வேண்டுமென்று பல சிஷ்யர்கள் •ஒன்று சேர்ந்து தொண்டு புரிவதைக் கண்டு நாம் களிப்போமாக. ஸ்வாமி பல்லாண்டு எழுந்தருளிப் பலருக்கு ஆசார்யராய் விளங்கியிருக்க ஸ்ரீநிவாஸன் அருள் புரிவானுக.

We Pay Homage to the Swamiji

from

Leo Engineering Corpn.

45, EDWARD ELLIOTS ROAD,
MYLAPORE, MADRAS-4.

ஸ்ரீ:

ஸ்ரீ அய்யா குமாரதாத தேசிகன்

[ஸ்ரீ. உ. வே. நாவல்பாக்கம் வித்வான் ஸோமயாஜி நாராயணதாதாசாரியர் ஸ்வாமி]

"காசி முதலான நன்னகரெல்லாம் கார் மேனியருளாளரது கச்சிக்கொவ்வா" என்று ஸ்வாமி தேசிகன் புகழ்ந்து பேசிய பெருமாள் கோவில் என்கிற காஞ்சீபுரத்திற்கு ஸமீபத்தில் விளங்கும் சுரோத்ரியம் நாவல்பாக்கம் என்று பிரஸித்தமான அக்ரஹாரத்தில், விஷ்ணு வ்ருத்தகணத்தைச் சேர்ந்த சடமர்ஷண கோத்ரத்தில் இப்பாரத தேசத்தில் மிக்க புகழுடன் விளங்கியவர்களும், தூய்மை நிறைந்தவர்களும், குண புருஷ தத்வ ஸ்திதிகளை அறிந்தவர்களும் இயற்கையிலேயே பகவானது திருவடிகளிலேயே நிலைநின்ற மனமுடையவர்களுமான நாத, யாமுன ஸ்ரீசைல பூர்ண, குருகாதீசர் போன்ற உத்தமர்களான ஆசார்யர்கள் அவதரித்த திருவம்சத்தில் ஸ்ரீநிவாஸ தாதாசாரியர் ஸ்வாமியின் திருக்குமாரரான ஸ்ரீவேங்கடதேசிகனுக்கு அய்யா குமாரதாத தேசிகன் குமாரராக அவதரித்தார். உரியகாலத்தில் குமாரதாத தேசிகன் தன் பிதாவினிடத்திலேயே உபநயநாதி ஸம்ஸ்காராதிகளைப் பெற்றார். "அங்கமாறு ஐந்து வேள்வி நால் வேதமருங்கலை பயின்று எரி மூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர்". என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி வாழும் திருவம்சத்தில் அவதரித்ததற்கு ஏற்ப அங்கங்களுடன் நான்கு வேதங்களையும் நால் வகை சாஸ்த்ரங்களையும் ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் தன் பிதாவின் அருநிழலிலேயே கற்றார்.

தங்களுக்கு அரசர்களால் ச்ரோத்ரியமாகக் கொடுக்கப்பட்ட நாவல்பாக்கம் என்னும் அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருந்த திம்மயாசாரியர் ஸ்வாமி (குமாரதாத தேசிகனின் ப்ரபிதாமஹன்) காஞ்சிபுரத்தில் ஸ்ரீவைகுண்டப்பெருமாள் ஸந்நிதி நிர்வாஹம் போன்ற காரணங்களால் சில காலம் பெருமாள் கோவிலிலேயே எழுந்தருளியிருக்க நேர்ந்தது. இவர்களுக்கு குலக்ரமமாக வந்த வாஸஸ்தானமான திருப்பதியிலேயே நியதமாக வஸிக்காமல் அவ்வப்போது வந்து மலையப்பனை ஸேவித்துப் போவதாக இவர்கள் இருந்தனர். அதிலும் திம்மயாசாரியர் ஸ்வாமி ப்ரதிஸம்வத்ஸரமும் தவறாமல் ஸ்ரீநிவாஸனை ஸேவித்துப் போவது வழக்கம். ஒரு ஸமயம் திம்மயாசாரியர் ஸ்வாமி திருமலைக்கு எழுந்தருளி வேங்கடவனை மங்களாசாஸனம் செய்துக்கொண்டிருந்தபோது எம்பெருமானுக்குக் கைங்கர்யம் புரிந்து கொண்டிருந்த ஸ்ரீசேஷதீக்ஷிதர் என்னும் பட்டரை அணுகி "அடியேன் சற்று கர்பக்ரஹத்தில் ஏகாந்தமாக எம்பெருமானை ஸேவிக்க அவகாசம் ஸாதித்தருளவேண்டும் என்று விஜ்ஞாபித்தார். அர்ச்சக ஸ்வாமி தேவரீர் ஏகாந்தத்தை விரும்புவானேன் என்று வினவவும் "அடியேன் இம் மண்ணுலகிலிருந்து வெகு சீக்கிரம் விண்ணுலகையடைந்து அங்கு எம்பெருமான் திருவடிகளில் அப்ரதிஹத கைங்கர்யம் புரிய ஆர்த்த ப்ரபத்தி செய்யப்போகிறேன்" என்று திம்மயாசாரியர் விடையிறுத்தார். இதைக் கேட்ட அர்ச்சக ஸ்வாமி "அடியேனுக்கும் சீக்ரமாக நிரந்தர கைங்கர்யம் ப்ராப்தமாகும்படி திருவேங்கடமுடையான் திருவடி வாரத்தில் ஓர் அஞ்சலி செய்யவேண்டும்" என்று ப்ரார்த்திக்க திம்மயாசாரியரும் அப்படியே என்று அங்கீகரித்து பட்டர் ஸ்வாமிக்காகவும்

ஸ்ரீ ஆராவமுதனும்
ஸ்ரீ அய்யாகுமாரதாத தேசிகனும்

திருமலைநம்பி சதுர்வேத சதக்ரது
நாவல்பாக்கம்
ஸ்ரீ அய்யா குமாரதாததேசிகன்
(திருக்குடந்தை)

தனக்காகவும் ஏழாவது நாளன்று அபிஜித் வேளையிலே தேஹவியோகம் ஏற்படும்படி ப்ரார்த்தித்தார். அந்த ஏழாவது நாளுக்குள் காஞ்சீபுரம் சென்று விடவேண்டும் என்பது ஸ்வாமியின் திருவுள்ளம். அந்தப் படிக்கு மலையப்பனிடம் நியமனம் பெற்று காஞ்சிக்கு எழுந்தருளும் வழியில் ஒரு நாள் தடைப்பட்ட தன் காரணமாக ஆழ்வான் அவதரித்த ஸ்தல மான கூரத்தில் தங்கும்படி நேரிட்டது. அப்போது தனக்குத் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளும் காலம் ஸமீபத்து விட்டதை யறிந்து உடனிருந்த புத்ர, சிஷ்யர்களுக்கு அர்ச்சிராதி மார்க்கத்தை உபதேசித்துக்கொண்டிருக்கும்போதே ப்ராணவியோகமாகி விட்டது. அதே ஸமயம் சேஷதீக்ஷித பட்டரும் பரமபதமடைந்தார். பிறகு இதனை யறிந்தவர்கள் ஆச்சரிய மடைந்தனர். இவ்வர்த்தத்தை

"वन्देतिम्मयतातार्यं स्वेच्छया प्रापयस्वयं
अर्चिराद्युपदेशान्ते वैकुण्ठं पादचारत:"

என்று தனியன் பத்யத்துடன் சேர்த்து அனுஸந்திக்கத்தொடங்கினர்.

பிறகு திம்மயதாதாசாரியர் குமாரரான ஸ்ரீநிவாஸதாதாசாரியரும் ப்ரதி ஸம்வத்ஸரம் பிதாவைப்போல் ஸ்ரீநிவாஸனை ஸேவித்துவந்தார். முதுமையால மலைக்கு எழுந்தருள முடியாமல் போய் சிஷ்யர்களின ஸஹாயத்துடன் எழுந்தருளி ஸ்ரீநிவாஸனை மங்களா சாஸனம் செய்து இனி "மலையப்பனின் ஸேவை அடியேனுககு எப்படி கிடைக்கும்" என்று அனுசோசிதது நிற்க அபபோது எம்பெருமான அர்ச்சகமுகேந "தேவரீர் இருக்குமிடத்திலேயே நாம் அவதரிக்க ஸங்கல்பம் கொணடோம். எனவே சோகிக்கவேண்டாம்" என்று நியமித்தருளவும் ஸ்வாமியும் நாவல்பாக்கம் எழுந்தருளி ஸ்ரீநிவாஸனின் சுபாச்ரய திருமேனியை எழுந்தருளப்பண்ணி தனக்கு நியமித்த கோவிந்த தீக்ஷிதபட்டர் மூலம் ப்ரதிஷ்டைசெய்து வைத்து காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோவிலில தீரதத பரிகரஹம் செய்து ஸகல கைங்கர்யங்களையும் செயது கொண்டு ஆனந்தப் பரவசரானார். ஸ்ரீநிவாஸனிடத்தில் இவருக்கிருந்த அபரிமிதமான பக்தியைப் பின்வரும் இவரது தனியனே காட்டும்.

श्रीशैलपूर्ण कुलवारिधि पूर्णचन्द्रं
श्रीवेङ्कटेश चरणाम्बुज चञ्चरीकम् ।
श्रीतिम्मयार्य तनयं विनयैकभूमिं
श्रीश्रीनिवासगुरुमन्वहमानतोऽस्मि"

நாவல்பாக்கத்தில் திருவேங்கடமுடையான் அவதரித்தபிறகு அவன் திருவடி வாரத்தில் நித்யாராதனம் செய்துகொண்டும் அவன் முகோல்லாஸார்த்தமாக யஜ்ஞாதிகளைச் செய்து கொண்டும் பஞ்சகால பராயணராக எழுந்தருளியிருந்தார்.

இவரது குமாரரான ஸ்ரீவேங்கடதேசிகனின் புண்ய பரிபாகமாக அவதரித்த ஸ்ரீகுமாரதாத தேசிகன் தம் தகப்பனாரால் உபதேசிக்கப்பட்ட ஸுதர்சனமந்த்ரோபாஸனத்தால் அநிதர ஸாதாரண ஜ்ஞானாநுஷ்டானங்களையும் விலக்ஷணப்ரம்ஹ தேஜஸ்ஸையும் பெற்றிருந்தார். இவருக்குத் தகுந்த காலத்தில் மௌக்திகாம்பா என்கிற கன்னிகையை வேங்கட தேசிகன் விவாஹம் செய்து வைததார். ஸ்ரீகுமாரதாததேசிகனும் அதுமுதல் அக்னிபரிசர்யை செய்து கொண்டும் ரமாநிவாஸனை ஆராதிதது கொணடும் நாவல்பாக்கத்திலேயே எழுநதருளியிருந்தார். இதைக் குமாரதாத தேசிகனின குமாரர் வேங்கடாசாரியர் शरणागति கோரணி என்ற க்ரந்தத்தில்

योगेन यागनिवहैरपि नाथवंश्या:
त्यागेन चापि मुखयन्नियमेवनित्यम् ।
कम्बूपमानगल मम्बुज वक्त्रनेत्रं
जम्बू पुरालयमुपैमि रमानिवासम् ॥

என்று ஸூசிப்பித்தார்.

இக் குமாரதாத தேசிகனுக்குப் பத்னிமார் இருவர். அதில் மூத்தவள் பெயர் தெரியவில்லை. இவர்க்குக் குமாரர்கள் எழுவர். அவர்களுள் முதல்வர் நீலமேகதாத தேசிகன். இவருடைய பரம்பரையைச் சேர்ந்தவர்களே நாவல்பாக்கத்திலிருப்பவர்கள். கடைசி குமாரரான வேங்கடாசாரியர் பாட்டராசாரியர் எனப்படுபவர். இவரது ஸந்ததியினரே கும்பகோணத்திலுள்ள பாட்டராசாரியர் வீதியிலிருப்பவர்கள். மூன்றுமவரான ரகுநாதாசாரியரின் ஸந்ததியினர் திருச்சேரை திவ்ய தேசத்திலுள்ளபாட்டராசாரியர்கள்.மற்றொரு குமாரரான ஸ்ரீநிவாஸாசாரியரின் வமசத்தவர்கள் "த்வார்" என்னு மூரில் உள்ளனர். ஸச்சரித்ரஸுதாநிதி என்னும்தர்ம சாஸ்த்ர க்ரந்தத்தைச் செய்தருளிய வரும் நைத்ருவ வம்சஸ்தரும் ஸ்ரீ அஹோபிலமடத்தில் 11 ஆம் பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீநிவாஸ சடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் சிஷ்யருமான வீரராகவாசாரியர் ஸ்வாமி ஷ ஸ்ரீநிவாஸதாதாசாரியரிடம் சாஸ்த்ரங்கள் வாசித்ததாகவும் அவர் நியமனப்படியே இக் க்ரந்தத்தைச் செய்வதாகவும் எழுதியுள்ளார். மற்ற குமாரர்களது வம்சத்தவர்கள் ஆந்திர தேசத்தில் ஆங்காங்குள்ளனர்.

நாவல்பாக்கத்திற்கு ஸமீபத்தில் நெடுங்குன்றம் என்றொரு கிராமம் உண்டு. அதனருகிலுள்ள வேப்பம்பட்டு என்ற ஊரிலுள்ள வரவணைவரும் குமாரதாத தேசிகனது சிஷ்யர்கள். அவர்களுள் நாயகர் குலத்தைச் சேர்ந்த நான்கு ஸஹோதரர்களிருந்தனர். அந்நால்வருள் அச்சுதநாயகர் எனபவரும் ஒருவர். இவரே பிற்காலத்தில் தஞ்சையை ஆண்டார். அச்சுதநாயகருக்குத் தன் வீட்டில் ஏற்பட்ட மனக்கசப்பால் வீட்டை விட்டு வெளியேறி நடக்கத் தொடங்கினர். வெயிலாலும் பசியாலும் நீர் வேட்கையாலும் துயருற்ற அவர் நாவல்பாக்கம் குளக்கரையை யடைந்து நீர் விடாயைத் தீர்த்துக் கொண்டு மரத்தின் நிழலில் படுத்துறங்கி விட்டார். ஸ்வாமி குமாரதாத தேசிகன் மாத்யாஹ்னிகஸ்நாநத்திற்காகக் குளத்திற்கு எழுந்தருளும் போது ஒருவன் படுத்துறங்குவதையும், பெரிய ஸர்ப்பம் ஒன்று தன்படத்தைப் பரப்பி அவன் மீது வெயில படாதவாறு குடை பிடிப்பதையும் கண்டு வியந்து கருட மந்த்ரத்தை ஜபித்து ஸர்ப்பத்தை வெளியேறச் செய்து, அச்சுதநாயகன் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்து அவன் துயிலை நீக்கிக்களைப்பையும் போக்கி அவனைப் பற்றி விசாரித்தார். அவன் தம் சீடன் என்பதையும் அவனுக்கு அவன் வீட்டாரிடம் ஏற்பட்ட மனககசப்பையும் அறிந்து அவனுக்கு அறிவுரை கூறி மன அமைதி யேற்படுத்தினர். மேலும் அவனது ஜாதகத்தையும் சரீரத்திலுள்ள சில உத்தம லக்ஷணங்களையும் ஸர்ப்பம் குடைபிடித்த பாக்கியத்தையும் சிந்தித்துப்பார்த்தஸ்வாமி அவனுககு விரைவில் நல்ல பதவி கிட்டப்போகிறது என்று கூறினர். பின்னர் அச்சுத நாயகரது ப்ரார்த்தனைக் கிணஙக அவருக்கு தப்தசக்ராங்கத்தைச் செய்து வைஷ்ணவ தத்வங்களையும் உபதேசித்தார். நாயகரும் ஒரு வருஷ காலம் நாவல்பாக்க த்திலேயே இருந்து பல உபதேசங்களைப் பெற்றார்.

பிறகு அச்சுத நாயகர் ஆசாரிபரது நியமனம பெற்று தஞ்சை சென்று அரச வேலையொன்றில அமர்நதார். பூர்வ ஜனம புண்ய விசேஷத்தால பல சோதனைகளிலும் வெற்றி பெற்றுமன்னனது அபிமானத்தைப் பெற்றார். அரசரும் தமககு மகனில்லாத குறையை எண்ணி அச்சுதநாயகரும் தனக்குப் பழைய பந்து வர்க்கத்தைச் சேர்ந்தவராதலால அவரை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டார். இளவரசனுக முடி சூட்டப்பட்டதும் தம் ஸ்வீகாரத்தந்தையான மன்னர் சேவுகப்பநாயகரை அச்சுதநாயகர் தம் திறமை

மிக்க செயல்களால் மகிழச் செய்தார். மன்னர் மறைந்ததும் அச்சுதநாயகர் மன்னராக முடி சூட்டப்பட்டார்.

அச்சுத நாயகர், தாம் தஞ்சை மன்னராக முடிசூட்டப்பட்ட செய்தியை விரைவில் ஆசாரியரான குமாரதாத தேசிகனுக்குத் தெரிவித்து அவரையும் அவரது குடும்பத்தாரையும் பல்லக்கில் எழுந்தருளச்செய்து நகர வாஸத்தை விரும்பாத ஆசாரியனை வெண்ணாற்றங்கரையில் நீலமேகப் பெருமாள் திருவடி வாரத்தில் நிலையாகத் தங்கச்செய்து ஏராளமான பொருள்களைக் காணிக்கையாக்கினார். அந்த பொருள்களின் உதவியால் உத்தம ரித்விக்குகளைக்கொண்டு பல வகையான யாகங்களைச்செய்ய விரும்பிய குமாரதாத தேசிகன் அவ்வாறே செய்துமுடித்தார். எல்லா யாகங்களிலும் யஜ்ஞபீடத்தில் நீலமேகன் எழுந்தருளி ஹவிர் பாகங்களை ஸ்வீகரித்தது விசேஷம். இதனால் அக்காலத்திலிருந்த மஹான்கள் ஸ்வாமிக்கு "சதுர்வேத சதக்ரது" என்ற விருதையளித்தனர்.

साग्नि चित्य पौण्डरीक सर्वपृष्ठविश्वजित् ।
द्वादशाह वाजपेय सर्वतोमुखादिभिः ॥
प्रीणयन्त मम्बुजाक्षमर्चयन्त मुक्तिभिः ।
तातयार्यमस्मदीयतातपादमाश्रये ॥

என்று இந்த ஸ்வாமி செய்த யாகங்களைப் பற்றி அவரது குமாரரே அருளிச்செய்துள்ளார்.

அச்யுத நாயகர் தன் ஆட்சிக்குட்பட்ட பகுதியிலுள்ள எல்லா விஷ்ணு தேவாலயங்களிலும் குமாரதாததேசிகனுக்கே முதல் தீர்த்த கௌரவமும், புராண படனத்திலும், அருளிச்செயல், வேதபாராயணங்களிலும் அதிகாரமும், தர்மாதிகாரி-பதவி ஆகியவற்றையும் அளித்து எல்லாம் ஸ்வாமியின் நியமனப்படியே நடைபெறும்படி உத்தரவிட்டார். ஸ்வாமியும் அப்பதவியை யேற்று பல தேவாலயங்களை ஜீர்ணோத்தாரணம் செய்தும் அவற்றில் உத்ஸவாதிகளும் நித்யாராதனங்களும் குறைவின்றி நடைபெறவும் ஏற்பாடு செய்ததோடு ஆங்காங்கு தம் குமாரர்களை இருக்கச் செய்தார். தாமும் அவ்வப்போது சென்று மேற்பார்வையிட்டு வந்தார். அச்சுதநாயகனுக்குக் குமாரதாத தேசிகன் ஆஸ்தான வித்வானாக இருந்து பல கலைகளை வளர்த்தார். மேலும் தற்போது ஸரஸ்வதி மஹால் எனப்படும் நூல் நிலையத்தை விரிவாக்கச் செய்தார். நாயக அரசர் ஆஸ்தானத்தில் தேசிக ஸம்ப்ரதாய ஸித்தாந்தமான ப்ரபத்தியைப் பற்றி கந்தாடை சிங்கராச்சாரியரோடு ஏற்பட்டவாக்யர்த்தத்தில் மூன்றுநாட்கள் வாதிட்டு ப்ரபத்திபுபாயத்தை ஸ்தாபித்தார். அதனால் "தேசிகஸித்தாந்த விஜயத்வஜ" என்ற விருதைப்பெற்றார். இதுவும் அவரது தனியனில் சேர்க்கப்பட்டு அனுஸந்திக்கப்படுகிறது.

திருக்குடந்தை ஆராவமுதன் ஸன்னிதியில் கோமளவல்லித் தாயாருக்கிருந்த தனிக் கோவிலை மாற்றித் தாயாரைப் பெருமாள் ஸன்னிதியிலேயே எழுந்தருளப்பண்ணி அப்பகுதியைத் தேவதாந்தரத்திற்கு அளித்து விட்டனர் முன்னரிருந்த சைவமன்னர்கள். நம் குமாரதாத தேசிகன் மீண்டும் தாயாருக்குத்தனிக் கோவில் ஏற்படுத்தி எழுந்தருளப் பண்ணுவித்தார். இதன் காரணமாக கோமளவல்லித் தாயாரின் நியமனப்படி நாயக அரசரும் குமாரதாத தேசிகனுக்குத் தாயார் ஸன்னிதிக்கு எதிரில் ஸன்னிதி ஏற்படுத்தினார்.

குமாரதாததேசிகன் நாவல் பாக்கத்தில் ஸ்ரீனிவாஸன் ஆலயத்தை விரிவாக்கினார். அச்சுத நாயகரது ஜன்மபூமியான நெடுங்குன்றத்தில் ஸ்ரீராமனுக்கு திவ்யாலயம் ஏற்படுத்தினார். அதற்கருகில் ரகுநாதஸமுத்ரம் என்ற கிராமத்தை ப்ரதிஷ்டை செய்து ஸ்ரீராமசந்தரனையும் எழுந்தருளப் பண்ணி அவ்

ஊரைச் சுரோத்ரியர்களுக்குத் தானம் செய்வித்தார். நெடுங்குன்றக் கோவிலில் தஞ்சையையாண்ட அச்சுதநாயகரது குமாரர் ரகுநாத ராஜாவின் கல்வெட்டும் விஜயநகர மன்னர்களின் சிலாசாஸனமும் உள்ளன. தஞ்சை மன்னர்களும் விஜயநகர மன்னர்களும் உறவினர்களாவர். ஸ்ரீகுமாரதாத தேசிகன் அவ்வப்போது தாம் செய்த யாகங்களின் ஞ்ஞாபகார்த்தமாக பௌண்டரீகபுரம், ரகுநாதபுரம் முதலிய அக்ரஹாரங்களை ப்ரதிஷ்டை செய்தார்.

ஸர்வதோ முகம் என்னும் மஹாயாகத்தை தேவாதி ராஜன் திருவடி வாரததில் ஸ்வாமி அனுஷ்டித்த போது ரகுநாத நாயக மன்னர் தமக்களித்த, நீல நாயகக்கல் மோதிரததை அவப்ருதத்தன்று யஜ்ஞசாலைக் கெழுந்தருளிய தேவாதிராஜனுக்கே ஸ்வாமி ஸமர்ப்பிதது விட்டதாகவும் அக்கல்லைப் பேரருளாளன் திலகமாகச் சாத்திக் கொண்டான் என்றும் பெரியோர் பகர்வர். மேலும் தென்னாட்டில் பல கோவில்களுக்கும் திருவாபரணுதிகளை ஸ்மர்ப்பித்து அர்ச்சையில் வெகு ஈடுபாட்டுடன் விளங்கினுர். நீலகண்ட தீக்ஷிதர் தம் க்ரந்தத்தில் ' ஷட்தர்சன ப்ரவீண குமாரதாதாசாரியர்'' என்று ஸ்வாமி திருநாமத்தை எடுததுள்ளார். இவர் வாஜபேய ச்சத்ர சாமரங்களுடனும் அரச பரிவாரங்களுடனும் அங்காஙகு சென்று வாதம் செய்து சோழ நாட்டில் ஸ்ரீவைஷ்ணவத்தை நிலைநாட்டினுர்.

அச்சுத நாயகர் காலம் A D 1572–1614 ரகுநாத நாயகர் A D 1614–1633 விஜய ராகவ நாயகர் AD 1633–1673. இம் மூன்று மன்னர்கள் காலத்திலும் ஸ்வாமி ராஜகுரு பதத்தை அலங்கரித்தார். இறுதியில் குமார தாத தேசிகன் திருக்குடந்தைக்குச் சென்று அனவரதமும் ஆராவமுதனுக்குக் கைங்கர்யங்கள் செய்துக்கொண்டு பரமபதத்தை யடைந்தார். அம்மஹானின் கைங்கர்யத்தில் 11 ஆவது நாளில் அளிக்கப்பட்ட பொருளைக் கொண்டு லக்ஷ்மீ நாராயணஸ்வாமி என்பவர் ஆராவமுதனின் வாயிற்கோபுரத்தை 11 நிலைகளுடன் கட்டி முடித்தார்.

குமாரதாத தேசிகன் அருளிச்செய்த
க்ரந்தங்களுள் சில.

(1) பாரிஜாதாபஹரண நாடகம். (2) நிக்ஷேபரக்ஷாவ்யாக்யா. (3) ஸ்ரீபாஷ்ய வ்யாக்யா விசிஷ்டாத்வைதஸரணி. (4) பஞ்சகால ப்ரதீபிகா. (5) உஷா நிருத்த சரிதம். (6) ராமாயண கதாஸாரம். (7) ஸூத்ரகல்ப பாஷ்யம். (8) வ்பாகரணதீபிகா. (9) கணுத பரிபாடி (10) கபிலதந்த்ரஸாரம். (11) அபய ப்ரதான ஸாரவ்யாக்யா. (12) அச்யுதேந்த்ராப்யுதயம்.

सुदर्शनकृपालब्ध वेदतत्वार्थसागरम् ।
अनुष्ठित क्रतु शतं वन्देऽस्मत्पितरं गुरुम् ॥
कुमारतातयाचार्यं सदाचारपरं सदा ।
वेदान्ताचार्य सिद्धान्त विजयध्वजमाश्रये ॥

—✲—



ஸ்ரீமதண்ணயார்ய மஹாதேசிகன் ஆராதித்த ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவன்

ஸ்ரீ:

ஸ்ரீ மதண்ணயார்ய மஹாதேசிகன்

நாவல்பாக்கம் வித்வான் தே. ஆ. யஜ்வராஹதாதாசாரியர்

आदौ नाथमुनि प्रभाव महिते दीप्तान्तरे सत्कुले
श्रीमद्यामुन योगिवर्य कुरुकाधीशादिभिर्देशिकैः।
संसारानल दह्यमान जनता सञ्जीवनायोदितः
जीयादण्णय देशिकोऽपरतनुः श्रीमान् हयास्योहरिः।

இம் மண்ணுலகிலுள்ள ஸப்தத்வீபங்களில் ஜம்பூத்வீபம் என்றும் நாவலந்தீவு என்றும் ப்ரஸித்தமானது இப்பாரத நாடாகும். இப்பாரத நாட்டிலும் நாராயணபரர்களான மஹான்கள் அவதரித்ததால் பெருமையைத் தேடிக் கொண்டது தக்ஷிண தேசமாகும். அதிலும் தொண்டை மண்டலத்துக் கோர் சிறப்புண்டு. "தொண்டைநாடு சான்றோர் உடைத்து" என்பது தொன்று தொட்டு வழங்கும் வழக்காகும். ஸ்ரீ தேசிகனும் "தொண்டை மண்டலவேதியர் வாழவே" என்றருளிப் போந்தார்.

இத்தகையை பெருமைவாய்ந்த தொண்டைநாட்டிற்குத் திலகமாய் விளங்குவது ஜம்பூபுரம் என்றும் நாவல்பாக்கம் என்றும் பிரஸித்தமான அக்ரஹாரமாகும். இவ்வூரிலுள்ள ஸ்ரீவைஷ்ணவரனைவரும் ஸ்ரீபாஷ்யகாரர் அருளியபடி सत्सन्तान प्रसूत सदाचारनिष्ठर्களாய் விளங்குபவர்கள். நம் ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களான ஸ்ரீமந்நாதமுனி, ஸ்ரீமத்யாமுனமுனி போன்றவர்களும் पितामहस्यापि पितामह ரான திருமலைநம்பியும், குருகைப்பிரானும் அவதரித்த குலத்தவர்களான இவ்வூர் மஹான்கள் தங்களுடைய ஜ்ஞானத்தாலும் யாகாதி அனுஷ்டானங்களாலும் சதுர்வேத சதக்ரது என்ற விருதைப் பெற்று ஆசாரியகம் செய்து வருபவர்களாவர். எனவேதான் மிகவும் நலிந்து போன ச்ருதப்ரகாசிகா ஸம்ப்ரதாயத்தைப் பரப்பத்திருவுள்ளங் கொண்ட எம்பெருமான் முன்பு நான்கு வேதங்களின் மறைவால் நலிவுற்ற நான்முகனது துயர் துடைக்க ஹயக்ரீவனாக அவதரித்தது போல் ஸ்ரீ அண்ணயார்ய மஹாதேசிகன் வடிவில் திருவுள்ளம் பற்றி சதுர்வேதசதக்ரது குலத்தைச் சேர்ந்த ஸ்ரீநிவாஸ ஸூரியைப் பிதாவாக ஸங்கல்பித்தான்.

ஸ்ரீநிவாஸஸூரியின் பத்னீ கனகவல்லியென்பவள் கொத்திமங்கலம் திருமலை நல்லான் சக்ரவர்த்தி கோவிந்தாசாரியர் ஸ்வாமியின் குமாரத்தியாவள். அவள் ஜ்யேஷ்ட புத்ரனைப் பெற்றெடுத்த பின்பு மீண்டும் கர்ப்பிணியானாள். அக்காலத்தில் நாட்டின் நிலை மிகவும் குழம்பியிருந்தது. குதிரை மீதிவர்ந்த மிலேச்சர்கள் கையில் கொடிய ஆயுதங்களையேந்தி பொதுமக்களைத் துன்புறுத்திக் கொள்ளையடிப்பதையே பொழுது போக்காகக் கொண்டிருந்தனர். அவர்கள் நாவல் பாக்கத்திற்கு வந்தவுடன் உயிர் பிழைத்தால் போதும் என்றெண்ணிய கிராமவாஸிகள் அனைவரும் ஓடி விட்டனர். பூர்ண கர்ப்பிணியான கனகவல்லி செய்வதறியாமல் திகைத்து நிற்கையில் தற்செயலாக அங்கு வந்த அவளது ஸஹோதரரான கொத்திமங்கலம் ராகவாசாரியர் அவளைத் தம் தோளில் சுமந்து கொண்டு விரைந்து ஓடி ஓரத்தி என்னும் அக்ரஹார ஸமீபத்திலிருந்த பெரிய காட்டை நெருங்கினார். அப்போது ப்ரஸவ வேதனையேற்படவே தன் ஸஹோதரரைத் தனித்திருக்கச் செய்து எம்பெருமானைத் தியானித்துக் கொண்டு ஸாதாரண ௵ ஆடி ௴ மிருகசீர்ஷ நக்ஷத்ரத்தில்

द्वीपे बदरिकामिश्रे बादरायणमच्युतम् ।
पराशरात्सत्यवती लेभे पुत्रं परन्तपम् ॥

என்கிற படியே ஸர்வேச்வரனே அண்ணயார்ய மஹாதேசிகன் வடிவில் பெற்றெடுத்தாள்.

அங்கிலேயில் ஸ்ரீநிவாஸ ஸூரியானவர் பூர்ணகர்ப்பிணியான பத்னியைத் தேடிக்கொண்டு இருளடர்ந்த வேளேயில் தீவட்டியுடன் தன்பத்னி ஸஹோதரரின் பேரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கொண்டு வர அவர்களும் "நாங்கள் இங்கே இருக்கிறோம்" என்று விடை யிறுத்ததும், ஸஹாயத்துடன். அவர்களே வந்தடைந்து அன்றிரவைக் கழித்தனர். கனகவல்லி, வனத்தில் ப்ரஸவித்த வேளேயை ஆராய்ந்த அவளது ஸஹோதரரான கொத்திமங்கலம் ராகவாசாரியார் "இவன் ஜகதாசார்யனுக விளங்குவான்" என்று அப்பொழுதே கூறினர். மறு நாட் காலேயில் அருகிலிருந்த ஓரத்தி யென்னும் ப்ரஸித்த அக்ரஹாரத்தில் சில நாட்கள் தங்கி நாட்டில் குழப்பம் நீங்கியதும் நாவல் பாக்கம் வந்தடைந்தனர்.

ஸ்ரீநிவாஸஸூரி தம் குழந்தைக்குத் தகுந்த காலத்தில் ஜாதகர்மாவைச் செய்து நாதமுனிகளின் திருநாமமான ரங்கநாதன் என்ற நாமத்தையே சூட்டி எட்டாம் வயதில் உபநயனம் செய்வித்து யஜ்வாவான தன் திருத்தகப்பனுர் யஜ்ஞந்ருஸிம்ஹதேசிகனேக் கொண்டு பஞ்சஸம் ஸ்காரத்தை நடத்தி வைத்ததோடு இதிஹாஸ புராணுதிகளேயும் உபதேசித்தருளப் பண்ணினுர். பின்னர் சக்ரவர்த்தி குலத்தைச் சேர்ந்த கமலவல்லி என்ற கன்னிகையை விவாஹம் செய்து வைத்து வைச்வதேவத்தையும் தன்பிதாவான ஸ்ரீயஜ்ஞ நரஸிம்ம தேசிகன் மூலமாகவே நடத்தி வைத்தார்.

தன் குமாரருக்கு வேதாத்யயனம் செய்யுங் காலத்திலேயே அத்யயனத்தோடு ஸாஹித்ய க்ரந்தங்களேயும் வ்யாகரண சாஸ்த்ரத்தையும் தானே பரிசீலனம் பண்ணி வைத்து குமாரர் பதினுறு ப்ராயத்தையடையும் போது திருநாட்டுக் கெழுந்தருளினுர்.

பின்பு நம் அண்ணயார்யமஹாதேசிகன் காவிரி தீரத்திற்கு எழுந்தருளி; அங்கு தம் மாதா மஹ குலத்தைச் சேர்ந்தவரும் தன் மாதுலரான கொத்திமங்கலம் மாமா ராகவாசாரியரது ஆசாரியரும், ஸதாசாரத்தில் வஸிஷ்டரைப் போன்றவரும், வாதத்தில் வெல்லவந்த ராமருத்ரபட்டன் முதலானவர்களே தர்க்க க்ரந்தமான மணி என்னும் நூலுக்கு உரையான (दीधिति) என்ற நூலுக்கு அனேவரும் வியக்கும் வண்ணம் உரை எழுதி புகழின் சிகரத்திலிருந்த கதாதரன் கூட நினேத்துப் பாராத முறையில் பரிஷ்காரங்கள் செய்து வென்றபடியால் கதாதரனது ஸந்ததியைச் சேர்ந்த புருஷோத்தம பட்டாசாரியராலேயே சிரோமணி என்று விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவருமான திருமலே நல்லான் சக்ரவர்த்தி சிரோமணி வேங்கடாசாரியர் என்பரை யடைந்து பணிவிடைகள் செய்து தர்க்க சாஸ்த்ரத்தை அதிகரித்தார்.

हयग्रीवमनाराध्य यस्सर्वज्ञत्वमिच्छति ।
अनालम्बित नौकस्सन् समुद्रं तर्तुमिच्छति ॥

என்று ஸ்ரீஹயக்ரீவ கல்பத்தில் சொன்னபடி ஹயக்ரீவனது அனுக்ரஹமிராமல் விசேஷமான ஜ்ஞான விகாஸம் கூடாதாகையால் ஹயக்ரீவானுக்ரஹத்தைப் பெறவேண்டி ஸ்ரீஹயசிரோ மந்த்ரத்தை ப்ரஸாதித்தருளும்படி சிரோமணி வேங்கடாசாரியர் ஸ்வாமியையே ப்ரார்த்திக்க அவரும் சதக்ரது குல திலக வேங்கடாசாரியர் குமாரரான வேதாந்தாசாரியர் ஸன்னதியில் தான் க்ரஹித்த ஹயக்ரீவ மந்த்ரத்தை ப்ரஸாதித்தருளினுர். பின்பு சாஸ்த்ரப்படி காவேரியில் கழுத்தளவு ஜலத்தில் சில காலம் மந்த்ராவ்ருத்தி செய்து சிரோமணி ஸ்வாமி திருநாட்டுக்கெழுந்தருளி

யதும் காஞ்சியில் இருந்த ஆளூர் நரஸிம்ஹ சாஸ்த்ரிகள் என்ற வித்வானிடத்தில் ந்யாய சாஸ்த்ரத்தை உஞ்சவிருத்தியுடனிருந்து பல காலம் அப்யஸித்தார். பின்பு ஹயக்ரீவனுடைய அனுக்ரஹத்தைப் பெற தீவிர வ்ரதானுஷ்டானம் செய்ய ஸங்கல்பித்து அதற்கான தகுந்த ஸ்தலத்தைத் தேடி शैलाग्रे जलमध्ये वा तीरे वा लवणाम्बुधेः என்ற ஹயக்ரீவ கல்பத்தில் சொன்ன லக்ஷணம் நிறைந்த திருக்கடல் மல்லை (மாமல்லபுரம்) என்ற க்ஷேத்ரத்தையடைந்து ஜ்ஞானபிரான் ஸன்னிதியின் ஸமீபத்திலிருந்த புஷ்கரிணியில் கழுத்தளவு நீரில் நின்று மந்த்ரஜபம் செய்தும், பிற்பகலில் கோமூத்ரத்தில் பக்வமான அன்னத்தையும் ஒரு வேளை மட்டும் புசித்தும் ஸங்கல்பித்த காலம் வரையில் அனுஷ்டித்துவர ப்ரஸன்னரான ஹயக்ரீவன் ஒரு புருஷரூபத்தை அடைந்து நம் அண்ணயார்ய மஹா தேசிகன் ஜலத்தில் நித்ரைக்கு ப்ரஸக்தியே இராமல் ஜபம் செய்யும் போதிலும் ஸ்வப்னத்தில் தோன்றுவதைப்போல் தோன்றி "உம் வ்ரதம் முடிந்தது. நீர் அறியாத அம்சம் ஒன்றின்றி ஜ்ஞான ஸம்ருத்தி உண்டாகும் தபஸ்ஸை நிறுத்தி ஹயக்ரீவனை அர்ச்சை வடிவில் ஆராதித்து எல்லா மேன்மையையும் பெறுவீராக" என்று கூறி மறைந்தருளினர்.

இப்படி வ்ரதம் தலைக்கட்டியதும் மாதல க்ராமமான கொத்திமங்கலம் எழுந்தருளி விருதத்திற்கு அங்கமான ஹோம தர்பண ப்ராம்ஹணபோஜனாதிகளை நடத்திய பிறகு ஸ்வக்ராமம் எழுந்தருளி ஹயக்ரீவனை அர்ச்சையில் எழுந்தருளப்பண்ணி காஞ்சியில் பேருளாளனை ஆராதித்து வந்த வாஸுதேவ பட்டரை ஸஹாயமாய் கொண்டு பாத்மஸம்ஹிதையில் கூறியபடி ப்ரதிஷ்டை செய்து ஆராதித்து வந்தார். அந்த திவ்ய மங்கள விக்ரஹத்தில் பகவானுடைய ஆவிர்பாவத்தால் ஷாட்குண்யபூர்ததி ஏற்பட்டு அந்த வூரில் துருஷ்கர்களின் கலாபத்தில் நின்று போயிருந்த திருவாராதனாதிகளை மறுபடி செய்தருள திவ்யாலயத்தை மீண்டும் ப்ரதிஷ்டை செய்து வேங்கடமுடையானை எழுந்தருளப்பண்ணி திருக்கடல் மல்லை ஸ்தல சயனப்பெருமாள் ஸன்னதியிலிருந்து தீர்த்த பரிக்ரஹம் செய்து சித்திரை மாதத்தில் ப்ரம்ஹோத்ஸவத்தைத் தொடங்கி வைத்தார். இன்றளவும் அவ்வுத்ஸவம் ஆண்டு தோறும் வெகு சிறப்பாகத்தடையின்றி நடைபெற்று வருகிறது. நம் அண்ணயார்ய மஹாதேசிகன் பல ஊர்களிலிருந்தும் வந்த வித்யார்த்திகளைத் தர்க்க சாஸ்த்ரத்தில் வல்லவராக்கி

कणादो गौतमो वाऽयं रङ्गनाथसुधीवरः ।
इति स्तुवन्ति बहुधा सर्व एव हि तार्किकाः ॥

என்றபடி பண்டிதர்களால் புகழப்பட்டு விளங்கினர்.

ப்ரஹ்மவித்யயை அதிகரிக்காமல் ஜ்ஞான நிறைவு ஏற்படாதாகையாலே அதற்காக ஸதாசார்யரைத்தேடி ஸ்ரீரங்கத்தில் ரைக்வரைப்போல் ப்ரம்ஹவித்யாநிதியாய் ஸாக்ஷாத் ஸ்வாமியின் ஸம்பரதாயஸ்தராய், திருக்குடந்தை தேசிகனது கடாக்ஷ பாத்ரராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீவேதாந்த ராமானுஜ ஸ்வாமி ஸன்னிதிக்கு நான்கு சிஷ்யர்களுடன் சென்று ப்ரார்த்திக்க அந்த ஸ்வாமியும் சில காலம் பரீக்ஷிதது ஸத்பாத்ரமென்று திருவுள்ளம் பற்றி ஸ்ரீபாஷ்ய கீதாபாஷ்யாதிகளை அனுக்ரஹிதது ஸ்ரீரங்கநாதன் திருவடி வாரத்தில் ஆதமபர ஸமர்ப்பணததையும் அனுஷ்டித்து க்ருத க்ருத்யராக்கியதோடு ஜ்ஞான ஸம்ருத்திக்காகவும் ரங்கநாத தேசிகன மூலமாக வேதாந்த ஸம்ப்ரதாயம் அபிவ்ருத்தமாவதற்காகவும் ரங்கநாதன் ஸன்னிதியில் உபாயானுஷ்டானம் செய்து "உம்மால் அறியப்படாத ஜ்ஞானம் ஒன்றுமில்லை ரங்கநாதன் குளிரக்கடாக்ஷித்தான் என்று நியமிகக நம் ஸ்வாமியும் மனநிறைவுடன் நாவல்பாக்கம் எழுந்தருளி பலருக்கும் வேதாந்த காலக்ஷேபம்

ஸாதித்து வந்ததோடு ஸ்ரீபாஷ்யதீபிகையான ச்ருதப்ரகாசிகை பாவப்ரகாசிகை தூலிகைதத் வடீகை முதலியவற்றோடு அனுக்ரஹித்துத் தொண்டை மண்டலத்தை ப்ரம்ஹவித்துக் களால் விளங்கும்படி செய்தருளினர்.

நம் ஸ்வாமி சில காலம் ஸ்ரீ காஞ்சியில் பேரருளாளனை மங்களா சாஸனம் செய்துக் கொண்டு பலருக்கு வேதாந்த காலக்ஷேபம் ஸாதித்துக்கொண்டு மிருந்த ஸமயம் ஒரு ஸ்வாமி உபநிஷத் பாஷ்யகாரரான ஸ்ரீரங்க ராமானுஜ முனியின் பாவப்ரகாசிகையில் ப்ரம்ஹ சப்தார்த்த நிர்வசனத்தில் தோஷம் சொல்ல அவருடன் ஏழுநாட்கள் வாதம் செய்து பாவப்ரகாசிகையை நிர்தோஷமாக் கினர்.

பின்னர் திருவேங்கடமுடையானை மங்களா சாஸனம் செய்யத் திருவுள்ளம் பற்றித் திருச் சானூரை யடைந்து பத்மாவதியை ஸேவித்து திருப்பதியில் கோவிந்தராஜனை மங்களா சாஸனம் செய்து திருமலைக்கு எழுந்தருளி னர். அப்போது மலையப்பன் ப்ரமஹோத் ஸவம் கண்டருளிக்கொண்டிருந்தார். எனவே ப்ரம்ஹோத்ஸவம் முடியும் வரை அதாவது ஏழு நாட்கள் உபவாஸத்துடன் இருந்து திரு மலையப்பனை ஸ்ரீநிவாஸனை மங்களா சாஸனம் செய்து மீண்டும் (பெருமாள் கோவிலை) காஞ்சியை யடைந்தார்.

அப்போது 38ஆவது திருநக்ஷத்ரம் நடந்த வாறே ஸர்வதாரிஹு ஆனிமீல் பத்னியான கமலவல்லியின் தேகவியோகம் ஏற்பட்டது ஸ்வாமி வைராக்யத்தால் ஸன்யாஸாச்ரமஸ் வீகாரம் செய்யத் தீவிரமாக இருந்தபோதிலும் சதக்ரது :குலத்தைச் சேர்ந்தவரும் பகவத் விஷய ஆசாரியருமான ஸ்ரீ ஸ்ரீநிவாஸ தேசிக னுடைய நியமனத்தால் மறுபடி விவாஹத்தை அங்கீகரித்து நிற்க மாதுலரான கொத்தி மங்கலம் ராகவாசாரியர் திருமலை நல்லான் சக்ரவர்த்தி வம்சஸ்தரான கூத்தப்பாக்கம் லக்ஷ்மீ நரஸிம்ஹாசாரியரின் கன்னிகையான ஸ்ரீநிவாஸா என்பவளை விவாஹம் செய்து வைத்தார். பின்னர் நான்கு வருஷங்கள் ஸ்வாமி காஞ்சியில் எழுந்தருளியிருந்து தக்ஷிண தேசயாத்ரை தொடங்கிதனுஷ்கோடி வரை எல்லா திவ்யதேசங்களையும் நவதிருப் பதிகளையும் மங்களா சாஸனம்செய்து திருக் குடந்தைக்கு எழுந்தருளி சிலகாலம் வஸிதது ப்ரம்ஹ வித்யையை ப்ரவசனம் செய்து வந்தார்.

பின்னர் திருவஹீந்திரபுரம் எழுந்தருளி சில காலம் ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து கொண்டிருக்கையில் சிஷ்யர்களது ப்ரார்த் தனைக்கிணங்க தேசிகனுடைய விமான கைங் கரியத்தையும் திருத்தேர் கைங்கரியத்தை யும் நல்லோரையில் தொடங்கி முதலில் தமது பத்னியின் தாடங்கத்தை ஸமர்ப்பித்து பக்தர்கள் ஸமர்ப்பித்த த்ரவ்யங்களையும் கொண்டு இருகைங் கர்யங்களையும் நிறைவு செய்ததோடு அனந்தாசாரியர் என்கிற ப்ரம்ஹசாரியான சிஷ்யர் மூலம் நந்தவனத் தையும் நிர்மாணித்து அதன நடுவில் மண்ட பத்தை நிறுவி நாள் தோறும் திருவிளக்கு திருமாலைவடை முதலிய பக்ஷ்யநிவேதனம் போன்ற பல கைங்கர்யங்களைப் பண்ணி வைத்துக்ருதார்த்தரானர். அப்பொழுது காலக்ஷேப கோஷ்டியில் வித்வான் ஒருவர் வந்து சைவ மதம்தான ப்ராமாணிகம் என று நம் ஸ்வாமியிடம் வாதிக்கத் தொடங்கி ஒரு நாள் முழுவதும் காலக்ஷேபம் நடத்த விடா மல் செய்தும் முடியாத பொழுது மறு நாளும் அதையே வாதிக்கத் தொடங்கி “என் ஆசாரியனின் நியமனப்படி ஜகத்ப்ரஸித்த வித்வானை தேவரை வாக்யார்த்தத்தில் ஜயித்து வருவதாக ப்ரதிஜ்ஞை பண்ணி விட்டு வந்திருக்கிறேன் ஆகையால் எப்படி யாவது ப்ரதிஜ்ஞையை ஸபலமாக்க வேண்டு மென்று கூற ஸ்வாமியும் காலக்ஷேபம் நின்றுவிடாமல் நடக்கவும் ப்ரார்த்தித்து நிற் பவரின் ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றவும்

திருவுள்ளம் பற்றி நீர் வைஷ்ணவம் ப்ரா மாணிகம் என்று வாதம் செய்யும். நான் சைவம் ப்ராமாணிகம் என்று சொல்லி பராஜிதனுகிறேன் என்று கூறி அப்படியே இரணடொரு கோடிகள் சொல்லி அவரது கருத்தைப் பூர்த்தி செய்து அனுப்பினுர். இதே ஸமயம் மத்வமத வித்வானுன திம்ம யாசார் என்பவர் நம் ஸித்தாந்தத்தின் மீது தோஷம் சொல்ல; ஸ்வாமியும் தமது ஜாமா தாவும், சிஷ்யரும், ப்ரஸித்த வித்வானுமான திருப்பதி விக்ரஹம் தேசிகாசாரியரை வாதத் திற்கு நியமிக்க அவரும் மத்வ வித்வானேடு ஆறு நாட்கள் வாதிட்டு வென்றுர்.

பின்னர் ஸ்ரீபாஷ்யகாரரை அனுக்ரஹித் தருளிய ஸ்ரீமதுராந்தகத்தில் சிலகாலம் எழுந்தருளி சக்ரவர்த்தித்திருமகனை மங்களா சாஸனம் செய்து ஸித்தாந்த ப்ரவசனம் செய்து வருகையில் பக்தர்களின் ப்ரார்த் தனைக்கிணங்க ஸ்ரீராகவனுக்குத் திருத்தேர் கைங்கர்யத்தைத் தொடங்கி மூன்று வரு ஷங்கள் அங்கேயே எழுந்தருளியிருந்து ரத கைங்கர்யத்தைப் பூர்த்தி செய்தும், ஸ்ரீராகவ னுடைய நித்யப்படி ஆராதனத்திற்காக பூஸ்திதிகளை ஏற்படுத்தியும் வைத்த பிறகு திருவஹீந்திரபுரம் எழுந்தருளி ஷஷ்ட்யப்த பூர்த்தியை முன்னிட்டு விசேஷாராதனம் நடத்தி வைத்து திருக்குடந்தை எழுந்தருளி ஆராவமுதனை மங்களா சாஸனம் செய்து கொண்டிருந்தார்.

அப்பொழுது ஆண்டிக்காட்டுஸ்வாமி யென் கிற வேதாந்தராமாநுஜஸ்வாமி ஸன்னிதியில் ஸம்ப்ரதாயஜ்ஞானம் பெற்ற கேதாண்டபட்டி ஸ்வாமிக்கு அமுதன் ஸன்னிதியில் தாமாக எழுந்தருளிய ஒரு ஸ்வாமியை மூலமாகக் கொண்டு ஸந்யாஸா ச்ரமஸ்வீகாரம் செய்து வைத்து உபநிஷத் பாஷ்யகாரரின் திருநாம மான ரங்கராமாநுஜ முனி என்ற திருநாமத் தையே சாத்தி ஸஹாயத்துடன் பெருமாள் கோவிலுக்கு அனுப்பி ஸம்ப்ரதாய ப்ரவசனம் பண்ணச்செய்தார். பின்னர் நம் அண்ணயார்ய மஹாதேசிகன் என்னும் ரங்கநாத மஹா தேசிகனும் சித்திரை முதல் கார்த்திகை மீ வரையில் காஞ்சியில் இருந்து சிலரை ரங்க ராமானுஜஸ்வாமி திருவடியை ஆச்ரயிக்கச் செய்து நாவல் பாக்கத்தில் நியதவாஸம் செய்ய ஆனந்த ஒரு க்ரஹ நிர்மாணம் செய்து ராக்ஷஸ ஒரு தை மீ க்ருஹப்ரவேசம் செய்து ஹயக்ரீவனை ஆராதித்துக் கொண்டு நள பிங்கள ஆகிய இரு ஸம்வத்ஸரங்கள் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீஸ்வாமியின் முத்தண்ணு ஸ்ரீதேசிகாசாரி யர்ஸ்வாமி குடும்ப பாரத்தை நிர்வஹித்துக் கொண்டதால் ஸ்ரீஸ்வாமி குடும்ப நிர்வாஹ ச்ரமமிராமல் ஜ்ஞான ஸம்பாதனம் செய்ய முடிந்தது. ஆகவே பித்ரார்ஜிதமானஸ்வல்ப ஸொத்தையும் ஸ்வாமி தம் முத்தண்ணு ஸ்ரீதேசிகாச்சாரியருக்கே ஸமர்ப்பித்து விட்டார்.

இப்படி ப்ரதிஷ்டாபித வேதாந்தரான ஸ்ரீ அண்ணயார்ய மஹாதேசிகன் சிஷ்யரும் அதிகபக்திமானுமான செட்டி புண்ணியம் சிரஸ்தார்ரங்காச்சாரியர் என்பவர் ஹயக்ரீவா ராதனத்திற்காக காவேரி தீரத்திலோ திரு வஹீந்திரபுரம் ஸமீபத்திலோ ஒரு க்ராமத்தை வாங்கி ஸமர்ப்பிப்பதாக ஸ்வாமியிடம் விஞ் ஞாபிக்கவும் ஸ்ரீஸ்வாமி அந்த க்ராமம் என் னுடைய மாதுல கிராமத்திற்கு ஸமீபத்தி லிருக்க வேணடும்; அதுவும் என்னுடைய பெயரில் இருக்கக் கூடாது என்று நியமிக்க வும் அதன்படி ரங்காசாரியர் கொத்திமங் கலத்திற்கு ஸமீபமாயுள்ள தத்தனூர் என்ற கிராமத்தை விலைக்கு வாங்கி ஸ்வாமியின் அம்மாஞ்சியும் குட்டி சித்தியா என்று ப்ரஸித்தருமான திருமலைநல்லான் சக்ர வர்த்தி வீரராகவதாதாசாரியர் பெயரிலேயே சாஸனம் செய்தார்.

ஸ்வாமியும் ப்ரயத்னமிராமல் கிடைத்த இந்த கிராமததை ஸ்வீகரித்தார். காளயுத்தி வருஷம் ஸ்வாமிக்கு தத்தனூரில் திருமாளிகைகட்ட உபக்ரமிக்கப்பட்டது. காளயுக்தி ஸித்தார்த்தி ஆகிய இரு ஸம்வத்ஸரங்கள் ஸ்வாமி கொத்திமங்கலத்தில் எழுந்தருளியிருந்தார்.

அந்தஸமயம் முன்னர் திருக்குடந்தையில் ஸ்வாமி ஸன்னிதியில் ஸம்ப்ரதாய க்ரஹணம் பண்ணி நிபுணராயிருந்த நடாதூர் அம்மாள் வம்சஸ்தரான ஸ்ரீவில்லிபுத்தூர ராமானுஜாசாரியர் என்பவர் பத்னி வியோகத்திற்குப் பிறகு ஸ்வாமியைத் தண்டம் ஸமர்ப்பித்து ஸன்யாஸாச்ரமத்தை வேண்டிநிற்க ஸ்வாமியும் ஸன்யாஸாச்ரமத்தில் நிஷ்டரான சடகோபஸ்வாமியை பெருமாள் கோவிலிலிருந்து திருக்கடல் மல்லை ஸ்தலசாயியை மங்களாசாஸனம் செய்ய எழுந்தருளப்பண்ணி அந்த ஸ்வாமி ஸன்னிதியில் ஸ்ரீவில்லிபுத்தூர் ராமானுஜாசாரியர் என்கிற தம் சிஷ்யருககு ஸன்யாஸாச்ரம ஸ்வீகரணம் பண்ணி வைதது ரங்கநாத ஸ்வாமி என்ற திருநாமம் சூட்டி ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்யச்செயதார்.

பின்னர் தத்தனூரில் க்ருஹம் நிர்மாணிக்கப் பட்டதும் அங்கு சிஷ்யவாகங்களுடன் க்ருஹ ப்ரவேசம் நடத்தி ரௌத்ரி துர்மதி இரு ஸம்வத்ஸரங்கள எழுநதருளியிருந்தார்.

இப்படி துந்துபி ஹூ பங்குனி மீ வரை தத்தனூரில் ஹயக்ரீவனை ஆராதித்துக் கொண்டும் சிஷ்யவர்கங்களை அனுக்ரஹித்துககொண்டும் எழுந்தருளியிருந்து அவதார ஸமாபனத்தைத திருவுள்ளம் பற்றி आर्त प्रपदन செய்தருளி விவாஹாதி சுப காரியங்களுக்காக பந்துக்களுக்கு பத்திரிகை அனுப்புவது போல் தமது தேஹ வியோக காலததில் நானாதேச வாஸிகளான சிஷ்யவாகங்களுக்கு ஆஹ்வான பத்திரிகை அனுப்ப நியமிதது திருககுடந்தை தேசிகன் என்று ப்ரஸித்தரான ஸ்ரீகோபால தேசிகன் மோக்ஷாச்ரமத்தை ஸ்வீகரித்து திருநாட்டுக் கெழுநதருளியது போல துந்துபி ஹூ பங்குனி மீ சுகலபக்ஷ தசமிதிதியில ஸன்யாஸா ச்ரமத்தை ஸ்வீகரிததார. அப்போது ஸ்வாமியை ஆச்ரயித்தவர்கள்

वेदान्तलक्ष्मणमुनेः लब्ध वेदान्तसम्पदं ।
अपर्यासामृतमुनिं साक्षाद्रामानुजं भजे ॥

என்று தனியன் அனுஸந்தித்தனர். எம்பெருமானுடைய ஸேவையை விரும்பி ஐந்து தினங்கள் மோக்ஷாச்ரமத்திலிருந்து விட்டு தாம் மனோரதித்தபடி எழுபத்துமூன்றுவதுதிருநக்ஷத்ரமான துந்துபி ஹூ பங்குனி மீ சுக்ல பக்ஷ சதுர்தசியன்று ஸூர்யோதய காலத்தில் அவதார ஸமாபனம் செய்தருளினர்.

मोक्षाश्रमे पञ्चदिनान्यास्थाय गुरुसत्तमः ।
षष्ठेऽहन्युदिते सूर्ये परं धाम समारुहत् ।

இந்த ஸ்வாமியின் திருவடிகளில் முதன் முதலாக ஆச்ரயித்தவர் நாவல்பாககம் அய்யன் ராமானுஜதாதாசாரியர். இவரே ஸ்வாமியின் தனியனைச்செய்தவர். மற்ற சிஷ்ய வித்வான்களில் முக்யமானவர்கள்: (1) கொத்திமங்கலம் அப்பா என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்வாமி. (2) வலயப்பேட்டை ஸ்வாமியென்று ப்ரஸித்தமான வேதாந்த ராமானுஜஸ்வாமி [ஸன்யாஸி]. (3) ஸ்ரீபெரும்பூதூர மாப்பிள்ளை விஜயராகவாசாரியர் ஸ்வாமி. (4) திருப்பதி வங்க்ரஹம் தேசிகாசாரியர் ஸ்வாமி (5) நாவல்பாககம் அயயா வேங்கடாசாரியர் ஸ்வாமி. (6) ஸ்ரீவில்லிபுததூர் ஸ்வாமி [ஸன்யாஸி]. (7) திருக்குடநதை ராகவபாட்டராசாரியர் ஸ்வாமி. (8) திருப்பதி வீரராகவதாதாசாரியர்ஸ்வாமி. (9)ஸ்ரீரங்கம் மஹாமஹோபாத்யாய ஸுந்தராசாரியர் ஸ்வாமி. (10) நாவல்பாககம் முத்தண்ணா என்று ப்ரஸிததரான ஸ்ரீநிவாஸதாதாசாரியா ஸ்வாமி. (11) சிருங்கட்டூர ஸ்வாமி.

இவர்களால் ஸ்ரீமதணணயார்ய மஹாதேசிகனுடைய ஸத்ஸம்ப்ரதாயம் நானா சாகைகளாகப்பிரிந்து வளர்ந்தது.

श्रीशैलवंश कलशोदधिपूर्णचन्द्रं
श्रीवाजिवक्त्र करुणापरिपूर्ण बोधं ।
वेदान्त लक्ष्मण मुनीन्द्र कृपैकपात्रं
नौम्यण्णयार्यं गुरुमाश्रित पारिजातम् ॥
ज्ञानसद्भक्ति वैराग्य मानस स्वच्छतादिभिः ।
आगमान्तार्य तुल्यायास्त्वण्णयार्याय मङ्गलम् ॥
यशोऽधिक समुल्लास विशोधित चतुर्दिशे ।
अस्मदाचार्यपादायास्त्वण्णयार्याय मङ्गलम् ॥



பரமஹம்ஸேத்யாதி

ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹாதேசிகன்

(வலயப்பேட்டை ஸ்வாமி)

ஸ்ரீ:

வலயப்பேட்டை ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன்

[வீராபுரம், ஸ்ரீ. உப. வித்வான் வேங்கடதீக்ஷிதர் ஸ்வாமி]

श्रीदेवनाथगुरुवर्यशताभिषेके
रम्योत्सवे महति तत्पदपद्मभृङ्गः ।
श्रीवेङ्कटो हरिमुदे कुरुतेऽद्य दासः
वेदान्तलक्ष्मणमुनेश्चरितं विशुद्धम् ॥

ஸப்தத்வீபங்களுள் மிகச் சிறந்தது ஜம்பூத்வீபம், அதற்குத் திலகமாய் உள்ள ஜம்பூபுரம் என்னும் நாவல் பாக்கத்தில் பரவாஸுதேவன் ஸ்ரீநிவாஸனாக அவதரித்து மக்களை ரக்ஷித்து வருகிறான் என்பது உலகறிந்த உண்மை.

அவ்வூரில் நாதமுனிகளும் ஆளவந்தாரும் திருமலைநம்பிகளும், திருக்குருகைப் பிரான் பிள்ளானும் அவதரித்த சடமர்ஷணகோத்திரத்திலே அய்யாகுமாரதாததேசிகன் அவதரிததார். அவர் நான்கு வேதங்களையும் முறைப்படி அத்யயனம் செய்தார். स्थाणुरयं भारहारः என்கிறபடி அத்யயனம் மட்டும் பயனற்றது என்பதையறிந்து ஸகல சாஸ்த்ரார்ததங்களையும் அதிகரித்து, ச்ரௌத ப்ரக்ரியையில் தமக்கு இருந்த ப்ராவீண்யத்தாலே திருக்குடந்தை, நாவல்பாக்கம் முதலிய க்ஷேத்ரங்களில் நூறுயாகங்களை அனுஷ்டித்து, துர்வாதிகளை வென்று, தம்மதததை ஸ்தாபித் தருளினார். அவர் பௌத்ரரும் நாவல்பாக்கத்தில் எழுந்தருளியுள்ள இந்த வம்சஸ்தர்களுக்கு மட்டும் கூடஸ்தருமான ராமானுஜதாத தேசிகனுக்கு ஐந்து குமாரர்கள் அவதரித்தார்கள். அவர்களுள் ஐந்தாவது குமாரரான வரததாதாசாரியர் ஸ்வாமிக்குப் பௌத்ரராக ராமானுஜதாத தேசிகன் என்னும் மஹான் அவதரிததார்.

இந்தஸ்வாமியின் திருக்குமாரராகத் தாரண வருஷம் மார்கழி மாதம் ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் அவதரித்தவரே வலயபேட்டை பெரிய ஸ்வாமி என்னும் வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் ஆவர். அவதரித்த சில நாட்களில் குழந்தையின் முகதேஜஸ்ஸைக் கண்ட தகப்பனார் 'सविस्मयोत्फुल्लविलोचनः' என்கிறபடி, அன்று கண்ணனை ஸேவித்த வஸுதேவர் மகிழ்ச்சியடைந்தது போல ஆனந்த பரிதரானார். வேறு பெரியோர்களும், குழந்தையைக் கண்ணாரக் கண்டுகளித்து 'असौ स्यात्' என்று அனுக்ரஹம் செய்தார்கள் பிறகு தகப்பனார் திருமலை தாதாசாரியர் என்று நாமகரணம செய்தார்; பின்பு சாஸ்திர முறைப்படி கர்ப்பாஷ்டமத்தில் உபநயனம் செய்வித்தனர். ஆகையால் 'सत्सन्तानप्रसूतसदाचारनिष्ठवेदविदाचार्योपनीतस्य' என்னும் ஸ்ரீபாஷ்யபங்க்தி இந்த ஸ்வாமிக்கு மிகவும் பொருந்தியுள்ளது.

அப்பொழுது நாவல்பாக்கத்தில் சதுச்சாஸத்ர பாராவாரபாரீணராயும், "புரச்சர்யா" கல்பத்தால் ஹயக்ரீவமந்த்ரோபாஸனம் பண்ணி ஹயக்ரீவனைப் பிரத்யக்ஷீகரித்தவரும், அனுஷ்டான வைராக்ய சிரோமணியாய் எழுந்தருளியிருந்தவருமான ஸ்ரீமதண்ணயார்ய மஹா தேசிகன் ஸன்னிதியில் ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணினார். 'तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया । उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनस्तत्त्वदर्शिनः' என்கிறபடி வேதாந்தக்ரந்த காலக்ஷேபம் செய்யும்போது ப்ரணிபாதாதிபுரஸ்ஸரம் துருஹமானதத்வார்த்தங்களைக் கசடறக் கற்றார்.

இவருடைய ஜ்ஞான ஸம்ருத்தியைக் கண்ட அனைவராலும் என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள். என்னும் பெரியாழ்வார் ஸ்ரீஸூக்திப்படி இவர் கொண்டாடப்பட்டு ஜகதாஹ்லா தகராக விளங்கினார். இந்த ஸ்வாமியின் ஸதீர்த்யர்களாக யிருந்து காலக்ஷேபம் செய்தவர் பலர்.

1. அவர்களுள் முக்யமானவர்கள் கொத்தி மங்கலம் அப்பாஸ்வாமி என்னும் நும் சக்ரவர்த்தி வீரராகவார்ய மஹா தேசிகன். இந்த ஸ்வாமி கொத்திமங்கலத்தில் திருமலைநல்லான் சக்ரவர்த்தி வம்சத்தில் அவதரித்தவர் அண்ணயார்ய மஹாதேசிகனுடைய மாதுலகுமாரர். அண்ணயார்ய மஹா தேசிகனிடம் ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணினவர் சதுச்சாஸ்த்ரத்திலும் ஸமானாதிகரணஜ்ஞானம் உடையவர். கர்மானுஷ்டானத்தால் நிர்மலீக்ருதமனஸ்ஸைக் கொண்டவர். ஹயக்ரீவ மந்த்ரம் முதலிய விசேஷ மந்த்ரங்களை உபாஸனம் பண்ணிஸித்தி பெற்றவர். விரக்தாக்ரேஸரர். ஜ்ஞானானுஷ்டான சேவதியாய் விளங்கிய கோபாலார்ய மஹாதேசிகன் முதலான சிஷ்யர்களுக்கு ஸாமான்ய சாஸ்த்ரங்களையும், அத்யாத்மவித்யையையும் உபதேசித்தவர். பாகவதாதித்யம் பண்ணுவதில் பரத்வாஜ மஹர்ஷிதுல்யர்.

2. முத்தண்ணா ஸ்வாமி என்னும் ஸ்ரீநிவாஸார்ய மஹாதேசிகன்.

இந்த ஸ்வாமி சதுர்வேத சதக்ரதுவம்சத்தில் அவதரித்தவர். ஸ்ரீமதண்ணயார்ய மஹா தேசிகனின் தமையன் குமாரர். அண்ணயார்ய மஹாதேசிகனிடமே ஸர்வசாஸ்த்ரார்த்தங்களையும் அதிகரித்தார். அனுஷ்டானத்தில் மிகச்சிறந்தவர், அர்ச்சையில் மிதந்த ஈடுபாடுடையவர். कलौ संकीर्त्य केशवं என்கிறபடி ஸதா பகவந்நாமோச்சாரணத்தையே ஜீவனமாகக் கொண்டவர். ஸாமான்ய சாஸ்த்ரங்களில், ஸ்ரீபாஷ்யம் ச்ருதப்ரகாசிகா தேசிகன் க்ரந்தங்கள் இவற்றை வாசோவிதேயமாகக் கொண்ட தாதாசார்யர் ஸ்வாமி முதலிய பல சிஷ்யர்களுக்கு வேதாந்த காலக்ஷேபம் ஸாதித்தவர்.

3. விக்ரஹம் தேசிகாசார்யர் ஸ்வாமி.

இவர் சதுச்சாஸ்த்ரபாரங்கதர், தர்க்க சாஸ்த்ரத்தில் வ்யுத்பத்திவாதத்திற்குக்ரோடபத்ரம் எழுதியவர். தம்மேதாதிசயத்தால் அனேக பண்டிதர்களை வென்றவர்.

4. மாப்பிள்ளை விஜயராகவாசாரியர் ஸ்வாமி இவர் ஸ்ரீபெரும்பூதூரில் ஈச்சம்பாடி வம்சத்தில் அவதரித்து அண்ணயார்ய மஹா தேசிகனிடம் ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணி அவரிடம் காலக்ஷேபம் செய்த அனேகருக்குச் சிந்தனாசாரியரா யிருந்தவர். மஹா மேதாவியாய் விளங்கியவர்.

5. லக்ஷ்மீ குமாரதீக்ஷிதர்.

இவர் வீராபுரத்தில் வங்கிவம்சத்தில் அவதரித்தவர். அண்ணயார்ய மஹாதேசிகனிடத்தில் எல்லா சாஸ்த்ரங்களையும் அதிகரித்தவர். அனுஷ்டானவைராக்ய நிதியாய் விளங்கியவர். அனேக சிஷ்யர்களுக்கு ஸாமான்ய சாஸ்த்ரபாடம் கற்பித்தவர். ராமோதயமஞ்ஜரி முதலிய க்ரந்தங்களைச் செய்தருளியவர்.

பிறகு ப்ரக்ருத ஸ்வாமி விவாஹம் செய்து கொண்டு ஔபாஸன பஞ்சமஹா யக்ஞாதிகளை அனுஷ்டித்துக் கொண்டு பஞ்சகால பராயணராய் எழுந்தருளி யிருந்தார்.

இந்த ஸ்வாமியின் சேமுஷீவிலாஸத்தையும் அனுஷடான வைராக்யங்களையும் பார்த்த அண்ணயார்ய மஹா தேசிகன் விசிஷ்டாத்வைதமதம் தழைத்தோங்க, இவரை ஆச்ரயிக்கும் சிஷ்யர்களுக்கு வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் ஸாதிக்கும் படி நியமித்தார்.

ஸ்வாமிக்கு பார்யாவியோகம் ஏற்பட்ட வுடனே, அதிகமான வைராக்யம் ஏற்பட்டு திவ்ய தேசயாத்ரை செய்யத்திருவுள்ளம் கொண்டு, திருவஹீந்திரபுரம் முதலிய திவ்ய தேசங்களில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் களை மங்களா சாஸனம் பண்ணிவிட்டு, திருக்குடந்தையை அடைந்து கோமளவல் லித் தாயாரையும், ஆராவமுதாழ்வானையும், தம் கூடஸ்தரையும் மங்களாசாஸனம் செய்து கொண்டிருக்கும் பொழுது, அங்கே எழுந்தருளியிருந்த சில பெரியோர்கள் ஸ்வாமியிடம், 'असन्नेव स भवति असद्ब्रह्मेति वेद चेत्' என்கிறபடி அஸத் கல்பர்களாக இருக் கும் அடியோங்களை, 'अस्ति ब्रह्मेति चेद्वेद सन्तमेनं' என்கிறபடி ஸத்துக்களாக ஆக்க வேண்டும் என்றுப்ரார்த்தித்தார்கள்.

ஸ்வாமியும், 'शारीरकप्रवचनव्रतमाद्रियेथा:' என் கிற தேசிகன் திருவாக்கை மனத்தில் கொண்டு; அதை அப்யுபகமம் பண்ணித் தாம் அனுச்ரமியாய் இருப்பதை நினைத்து, விரக்தாக்ரேஸரரும். ஜ்ஞானத்தில் ப்ருஹஸ் பதி துல்யரும் ஆன கேதாண்டிபட்டி ஸ்வாமி ஸன்னிதிக்கு எழுந்தருளி ப்ரார்த்தித்து, துரீயாச்ரமஸ்வீகாரம் பண்ணிக்கொண்டார். இப்பொழுது இவருக்கு ஏற்பட்ட திரு நாமமே 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌮𑌹𑌾 தேசிகன் என்பதாகும். துரியாச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டதும் கொத்திமங்கலம் அப்பா என்று பிரசித்திபெற்ற ஸ்வாமி நியமனப்படி அவருடைய குமாரர் சின்னண்ணா என்கிற ஸ்ரீநிவாஸராகவா சாரிய ஸ்வாமி பிக்ஷை ஸாதித்துவந்தார். பின்னர் க்ராமைகராத்ர ராய்த்தம் ஆச்ரமதர்மத்தினின்றும் சிறிதும் வழுவாமல் தர்மானுஷ்டானத்தைச் செய்து கொண்டு சிஷ்யர்களுக்கு வேதாந்தக்ரந் தோபதேசத்தைச் செய்து கொண்டு எழுந் தருளியிருந்தார்.

ஸ்வாமிக்குத் திருமேனியில் அதிக அசக் தியேற்பட்டவுடனே திருக்குடந்தைக்கு ஸமீ பத்திலுள்ள வலயபேட்டை அக்ரஹாரத் தில் சிஷ்யர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஆச்ரமத்தில் ஸ்வாமி எழுந்தருளியிருந்து 30 சாதுர் மாஸ்யங்களை அனுஷ்டித் தருளினர்.

ஸ்வாமியின் பரபக்ஷப்ரதிக்ஷேபவைகரி யைப்பார்த்த மஹான்கள், ஸ்வாமிஸ்வாதீ நக்ஷத்ரத்தில் அவதரித்ததால் 'त्रैलोक्यमेतदखिलं नरसिंहगर्भं' என்கிறபடி, கலியுகத்தில் வரப் போகும் குத்ருஷ்டிகளாகிய அரக்கர்களை வெல்வதற்காக நரஸிம்மகர்பமான உலகத் திலிருந்து, நரஸிம்மனே இந்த ஸ்வாமியாக அவதரித்தார் என்று சொன்னார்கள்.

மற்றும் சிலர் 'பெரியாழ்வார் ஸ்வாதீ நக்ஷத்ரத்தில் அவதரித்துப் பரதத்வஸ்தா பனம் செய்தார். அது போல் இந்தஸ்வாமி யும் பரதத்வ ப்ரதிபாதகக்ரந்த ப்ரவசனத் தின் வாயிலாகப் பரதத்வஸ்தாபனம் பண் ணுவதால் பெரியாழ்வாரே ஸ்வாமியாய் அவதரித்துள்ளார் என்று கூறினர்கள்.

வேறுசிலர், 'ஆளவந்தார் தம் ஸம்ப்ரதா யத்திற்குத் தத்காலத்தில் குத்ருஷ்டிகளால் ஏற்பட்ட கலக்கத்தைப் பார்த்து, அதைப் போக்க எண்ணிதாமே தம் வம்சத்தில் இந்த ஸ்வாமியாக அவரித்தர்' என்று சொன் னர்கள். இதை அனுஸரித்தே 'श्रीयामुनार्य मवतीर्णमिवान्वयेस्वे वेदान्तलक्ष्मणमुनिं' என்பது ஸ்வாமி தனியனில் அமைந்துள்ளது. இந்த ஸ்வாமி ஸாதித்தக்ரந்தங்கள. (1) तत्क्रतुन्याय विचार:, (2) भगवद्ध्यान सोपानव्याख्या (3) श्राद्धयुग्मखण्डनम् என்பவையாகும்.

இந்த ஸ்வாமி ஸன்னிதியில் வேதாந்த க்ரந்த காலக்ஷேபம் செய்தவர்களில் மிகவும் முக்கியமான ஸ்வாமிகள்.

1. அய்யா நரஸிம்ம தாதார்ய மஹாதேசி கன். இந்த ஸ்வாமி சதுர்வேத சதக்ரது வம்

சத்தில் அவதரித்து, ஸாமான்ய சாஸ்த்ரங்களைக் கசடறக்கற்று பலவித்வான்களுக்கு அவற்றைக் கற்பித்து இந்த ஸ்வாமி ஸன்னிதியில் வேதாந்த க்ரந்த காலக்ஷேபம்பண்ணி விரக்தாக்ரேஸரராய் ஸதாசார நிஷ்டராய், ப்ரும்ஹ ஜ்ஞானத்தில் வ்யாஸ துல்யராய் எழுந்தருளியிருந்தார்.

2. வலயபேட்டை ஸ்ரீநிவாஸதாதாரய மஹா தேசிகன் இந்த ஸ்வாமி நாவல்பாக்கத்தில் சதுர்வேதசதக்ரதுகுலத்தில் அவதரித்து, லக்ஷணந்தம் வேதாத்யயனத்தை ஸாங்கமாகச்செய்து, பதபாடத்தைக் கொத்திமங்கலம் திருமலைநல்லான் சக்ரவர்த்தி கோபாலார்ய மஹா தேசிகனிடம் அதிகரித்துச் சதுஸ்தந்த்ர நிஷ்ணதராய், கர்மானுஷ்டானத்தில் வஸிஷ்டதுல்யராய், ஸூக்ஷ்மாசாரங்களை அநேகருக்குச்சிக்ஷித்துவைத்து,ஜகத்ப்ரஸித்தரும், விசிஷ்டாத்வைதஸித்தி முதலிய க்ரந்தங்களைச் செய்தருளியவருமான பண்டிதராஜ D. T. தாதாசார்யர் ஸ்வாமி முதலானவர்களுக்கு வேதாந்த க்ரந்தங்களையும், இதர மதஸ்தர்களுக்கு ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் கற்பித்து, 'ஆதித்ய' பண்ணுவதில் பரத்வாஜ மஹர்ஷி துல்யராய் ஸ்மிதபூர்வாபிபாஷியாய் எழுந்தருளியிருந்தார்.

3. தர்ம சாஸ்த்ரம் ஆராவமுதாசாரியர் ஸ்வாமி இவர் சடமர்ஷண கோத்ரத்தில் அவதரித்து ஸாமான்ய சாஸ்திரங்களில் தர்ம சாஸ்த்ரத்தில் விசேஷ ஜ்ஞான முடையவராய் வைராக்ய நிதியாய் அயாசிதமான த்ரவ்யத்தால் பகவதாராதனம் பண்ணிக்கொண்டு, ஆச்ரித சிஷ்யர்களுக்கு ரஹஸ்யத்ரயஸாரம் முதலிய க்ரந்தங்களை ஸாதித்தருளினர்.

4. ந்ருஸிம்ஹ தாதயார்ய மஹாதேசிகன்: இந்த ஸ்வாமி சதுர்வேத சதக்ரது வம்சத்தில் அவதரித்து, ஜ்ஞானனுஷ்டான வைராக்ய பூர்ணராய், மைஸூர் கஸ்தூரி ரங்காசாரியர் ஸ்வாமியிடம் தர்க்க சாஸ்த்ரத்தையும், திருவிசைநல்லூர் ராமஸுப்பா சாஸ்திரிகளிடம் மீமாம்ஸா சாஸ்த்ரத்தையும் இந்த ஸ்வாமியிடம் வேதாந்த க்ரந்தங்களையும் அதிகரித்தார். ஸ்வாமி திருமாளிகை ஆராவமுத தாதாசார்யர் ஸ்வாமி, அய்யா தேவநாத தாதாசார்யர் ஸ்வாமி முதலானவர்களுக்குத் தாம் அதிகரித்த சாஸ்த்ரங்களை ப்ரவசனம் பண்ணிவிட்டுப் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமியின் ஜ்ஞானமும், அனுஷ்டான வைராக்யங்களும் நிகமாந்த மஹாதேசிகனுடைய ஜ்ஞானனுஷ்டான துல்யங்கள் ஆகையால் ஸாக்ஷாத் நிகமாந்தமஹா தேசிகனே இந்த ஸ்வாமியாக அவதரித்தார் என்பதற்குக்குறையில்லை. இந்தஸ்வாமிஸலக்ஷணவேதாத்யாயி.

5. அம்மாஸத்ரம் சேஷாசார்யர் ஸ்வாமி: இந்த ஸ்வாமி சதுஸ்தந்த்ரதுரந்தரர். அசஞ்சலமான சேமுஷீ விலாஸம் கொண்டவர். உபன்யாஸம் பண்ணுவதில் வல்லவர் அர்ச்சையில் அதிகமான ஈடுபாடு கொண்டவர். ஆச்ரிதர்களான சிஷ்யர்களுக்கு ஸாமான்ய சாஸ்த்ரங்களையும் வேதாந்த க்ரந்தங்களையும் நன்ருகக் கற்பித்து ப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்தார்.

இந்த ஸ்வாமியின் சிஷ்யர்களே இத்தகைய உலகம் போற்றும் அறிவையுடையவர்களாக எழுந்தருளி யிருந்தாகள் என்ருல், அந்த அறிவைக் கற்பித்த ஸ்வாமியின் ஜ்ஞானத்தையளவிட யாருக்கும் சக்தி கிடையாது என்பது நிஶ்சயம் ।

இந்த வலயபேட்டை ஸ்வாமி அடியேன் பிதாமஹன் கோயில சப்தம் வங்கீபுரம் வீராபுரம் ராமானுஜார்ய மஹாதேசிகனுக்கு ஸாக்ஷாத் ஆசார்யர். அடியேனுக்கு ப்ராசார்யர், सचाचार्यवंशो ज्ञेयो भवति, आचार्याणामसावसावित्याभगवत्तः எனகிறபடி அடியேனுககு அனுஸந்தானம் பண்ண ப்ராப்தம். இந்த கைங்கர்யத்தை அடியேனுக்கு அளித்த கமிட்டியாருககு அடியேனுடைய ப்ரணமங்களை ஸமர்ப்பிகிகிறேன்.

इत्थं वेङ्कटदासेन वङ्गिसद्विजजन्मना ।
वेदान्तलक्ष्मणमुनेः कृतं चरितमद्भुतम् ।

। शुभमस्तु ।

ஸ்ரீ. உ. வே. அய்யா வேங்கடாச்சார்ய ஸ்வாமி

ஸ்ரீ. உ. வே. அய்யா வேங்கடாசார்ய ஸ்வாமி

ஸ்ரீ. உ. வே. வித்வான் ஓரத்தி ரங்காசாரியர் ஸ்வாமி

"தொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று ஆன்றோர் கூறுவர். அத்தகைய சிறப்பு வாய்ந்த துண்டீரமண்டலம் என்னும் தொண்டைவள நாட்டில் காஞ்சீபுரத்திற்குத் தெற்கில் முப்பது கல் தொலைவில் நாவல் பாக்கம் என்னும் வேதவித்துக்கள் வாழும் ஒரு கிராமம் உள்ளது. அங்கு வாழ்பவர் தூய்மையான வாழ்க்கை நடத்த, தன்னுரு வைக் காண்பித்து அவர்கள் கடைத்தேற, மக்கள் நலன் கருதி ஸ்ரீய: பதியான எம்பெரு மான் திருவேங்கமுடையான் இராமானுஜ தீர்த்த புஷ்கரிணிக் கரையில் திருமகள் கேள்வனாகக் கல்பவ்ருக்ஷம் போல்விளங்கு கிறார்.

शतसवन विधातुर्घाम्नि जंबू सुनाम्नि
श्रितजनबहुमान्यां मूर्तिमन्यां दधान: ।
जयति वृष गिरीश: श्री महीभ्यामुपेत:
परमइव पदे स्वे सूरिभिर्दृश्यमान: ॥

இவ்வாறு அவ்வெம் பெருமானைப்பற்றிக் கூறி யுள்ளனர்.

அங்கு நாதமுனி யாமுன முனியிலிருந்து தொடங்கிய திருமலைநம்பி திருவம்சத்தில், பாரிஜாத நாடகம் முதலிய அநேக நூல்களை இயற்றிப் பேரும் புகழும் பெற்று, சதுர்வேத சதக்ரது ஸ்ரீ குமாரதாத தேசிகன் என்பாரின் திருக்குமாரரின் கொள்ளுப் பெயரரான ஸ்ரீ வேதாந்தாசார்யருக்கு கலியாண்டு 4921, ஆவணித்திங்கள் ரோகிணி நன்னாளில் (30-8-1820) ஸ்ரீ உ. வே. வேங்கடாசாரியர் திருக்குமாரராக அவதரித்தார்.

இளமையிலேயே தந்தையை இழந்து தவித்துநின்ற அவரை லக்ஷ்மி அம்மாள் என்னும் அவருடைய தாய் அன்பினால் பரிவுடன் 'அய்யா' என்று அழைத்த சொல்லே அவ ருடைய பெயராக ப்ரஸித்தமாக ஆயிற்று. அதுமுதல் அக்குடும்பத்தில் உதித்தவர் அனை வராலும் அய்யா என்றே அழைக்கப் பட்டார். தக்க காலத்தில் உபநயன ஸம்ஸ்காரம் செய் விக்கப்பட்டு முதிர்ந்த அறிவாற்றலினால் குறைந்த காலத்திலேயே அங்கங்களுடன் வேதங்களை ஓதி, கற்க வேண்டிய நியாயம், மீமாம்ஸை, வியாகரணம் போன்ற ஸாமான்ய சாஸ்திரங்களைக் கற்றுத்தேர்ந்தார். பிறகு காஞ்சீபுரத்தில் வாழ்ந்து வந்த திவா ப்ரதீபம் வேங்கடாசாரியர் என்பவரின் திருக் குமாரத்தியான லக்ஷ்மி என்னும் கன்னி கையை மணந்து மாமனார் திருமாளிகை யிலேயே சிறிது காலம் தங்கி அங்கு எஞ்சி யுள்ள சாஸ்திரங்களில் சிலவற்றையும் கற்றுப் பெரும் புலவராய், அகில பாரத வித்வதக்ரேஸரராய்த் திகழ்ந்தார்.

பிறகு வேதாந்தக்ரந்த காலக்ஷேபத்திற்கு ஏற்ற ஆசார்யரைத் தேடி அண்ணயாயார்ய மஹா தேசிகன் திருவடிகளை அணுகினார்.

அண்ணயார்ய மஹாதேசிகன் கலி ஆண்டு 4891 ஸாதாரண வருஷம் ஆடி மீ மிருகசீர்ஷ நன்னாளில் குமாரதாத தேசி கனின் பெயரனுக்குப் பெயரனான ஸ்ரீநிவாஸ தாதாசார்யருக்கு முதல் மனைவியான கனக வல்லி அம்மையாருக்கு மகவாகத் தோன்றி யவர்.

शुद्ध श्रद्धा समिद्धाशय विलयहयग्रीव सुव्यपलीला
हेषाकोलाहलोर्मि क्षपित कुपित हत्सर्वदुर्वादि गर्वात् ।
प्राचीनाचार्यवर्य प्रचय परिचया नेकतंत्र स्वतं त्रात्
प्रख्यातादण्णयार्या द्यदितरगति मीमांसनं पांडनं न: ॥

यतन्ते किं तेमे तपसि सुदुरन्ते दिविषदां
कथन्ते सिष्णास न्त्यधि तटिनि कृष्णादिषु तथा ।
सकृद्ये ह्येस्मिन् चरणकमल स्यन्दिय सलिले
पिपासामासेदुः प्रसभमसमं वण्णयगुरोः ॥

இவ்வாறு நம் ஸ்வாமி அண்ணயார்ய மகா தேசிகன் திருவடிகளை ஆச்ரயித்து ஸகல வேதாந்தார்தங்களையும் க்ரஹித்துத் தம் க்ராமத்திலேயே எழுந்தருளியிருந்து ஸ்ரீராமா நுஜதர்சனம் தழைக்க கைங்கர்யம் செய்து வந்தார்.

அதுபோது ப்ரதிபந்தகதா வாத சப்த தத்வ விவேகம் முதலிய ஸாமான்யசாஸ்திரங்களை இயற்றியருளினார். ஸ்ரீ உ. வே. ராமாநுஜா சார்யர் ஸ்ரீ சுந்தரவரதாசார்யர் போன்ற வித்யார்த்திகளுக்கு சாஸ்திரங்களைக் கற் பித்தார்.

சூணம்பேடு ஜமீன்தார் அக் காலத்தில் சிறநத புரவலவராகத் திகழ்ந்தார். அவர் ஸ்வாமியினுடைய பாண்டித்யம், பெருமை, அனுஷ்டானம் முதலிய வற்றைக் கேள்வி யுற்று தன் அவைக்களததில் அவைப் புலவராக இருந்து அனுக்ரஹிக்க வேண்டு மென ப்ரார்ததிக்க, ஸ்வாமி அவா வேண்டு கோளை ஏற்றுச் சில ஆண்டுகள் அங்கு வஸித்து வந்தார். அது போது ஸ்வாமி இயற்றிய சில சுலோகங்கள், சுபாஷிதங் கள் இன்று நமக்குக் கிடைத்தில.

ஒரு சமயம் பூங்காவில் புலவரும் புரவ லரும் தனிமையில இருந்து அளவளாவி வந்த போது அங்குக் குலைகளுடன் குலுங் கும் வாழை மரத்தைப் பார்த்து இதைப்பற்றி ஒரு சுலோகம் கூறுங்கள் என்று புரவலர் வேண்ட நம் ஸ்வாமியும் உடனே பின்வரும் சுலோகததைக் கூறியதாக இன்றும் நம் பெரியோர்களால் கூறப்பட்டு வருகிறது.

धरित्रि ! पुष्पाञ्जलिरेष तुभ्यं
सुतामदीयाः परिपालनीयाः ।
इतीव रंभावनताग्रकाया
मुमो च बाष्पं मकरन्ददंभात् ॥

இந்த சுலோகத்தைக் கேட்ட அவர் நம் ஸ்வாமியின் கவிதை இயற்றும் திறனையும், புலமையையும் எண்ணி வியந்தார்.

பிரயாணம் செய்யும் போது ஸ்வாமியுடன் சிஷ்யர்களும் உடன் நடந்து செல்வது வழக் கம். வழி நடக்கும் களைப்புத் தெரியாமல் இருக்க அந்தாதியாகப் பல சுலோகங்களைச் சொல்லிக் கொண்டு செல்வார்கள். ஒரு நாள் காஞ்சியை நோக்கிச் செல்லும் போது இடை வழியில் மாலை நேரம்! திடீரென வானம் இருண்டது; காரிருள் சூழ்ந்தது; செல் லும் வழி தெரியவில்லை; திகைத்தனர். அங்கு ஓர் ஆட்டிடையன் ஒரு குடிசை யமைத்து அதில் இருந்தான். அவனிட மிருந்தாவது வழி கேட்டறியலாம் என எண்ணி உரக்க அவனை அழைத்தனர். பதில் வரவில்லை. குடிசையின் உள்ளே சென்று பார்க்கலாம் என உள்ளே நுழைந்தார். அங்குக் கீழே தண்ணீர் ஓடுகிறது. அவன் உடலைப் செமமங்கூடையால் மூடி கருங்கல் லின் மீது முழங்கால்களை ஊனறிக் கொண்டு ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதைக் கண்ணுற்றார். அப்போது அவர் வாயிலிருந்து இந்தச சுலோகம் உண்டாயிற்று.

शिलातलेष्वर्पित जानुपादाङ्गुष्ठद्वयस्तत्र शिरो निधाय ।
अशक्यबोधामुपयाति निद्रा माभीरकोऽधस्स्रवदम्बुपूरः ॥

இவை போன்ற மிகவும் இனிமையாக ஸ்வா மியால் இயற்றப்பட்ட சுலோகங்களை இன்னும் கேட்டு மகிழ்கின்றோம். நம் ஸ்வாமி சூணம்பேட்டில் வாழ்நத இககாலத்தில்தான் நாவல் பாக்கத்தில் ஸ்வாமியின் திருமாளிகை செப்பனிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டது. சூணம்பேட்டு ஜமீன்தார் காலததிற்குப்பிறகு ஸ்வாமி அங்கு எழுந்தருளியிருக்க மனமின்றி தம் கிராமத்திற்கு எழுந்தருளினார். அப் போது வேதாந்தாச்சாரியர் என்ற குமாரரும்

ஒரு பெண்ணும் தோன்றினர். ஸ்வாமி மருத்துவான்பாடி க்ராமத்தில் பாரத்வாஜ கோத்ரத்தைச் சார்ந்த ரங்கநாயகி என்னும் அம்மையாரை இரண்டாம் தரமாக மணந்து கொண்டார். இரண்டு புத்திரர்களும் இரண்டு புத்திரிகளும் தோன்றினர். முதல்வர் தான் நரஸிம்ஹதாதாசாரியர் ஸ்வாமியாவார். ரக்தாக்ஷி வருஷம் கார்த்திகை மாதம் பூர நன்ஞளில் ஸ்வாமியின் அவதாரம் 22-11-1864.

அப்போது ஆரணியில் திருமலராவ் என்பவர் ஜாகீர்தாராக இருந்தார். அவர் பன்மொழிப் புலமை வாய்ந்த வேங்கடாசாரியர் ஸ்வாமியின் பாண்டித்யத்தையும், கவிதை இயற்றும் திறத்தையும், சொல் நயத்தையும் கேள்வியுற்றுத் தம்முடன் வந்து தங்கி இருந்து தம்மை அனுக்ரஹிக்க வேண்டுமென வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுகோளுக்கு இசைந்து ஸ்வாமியும் குடும்பத்துடன் அங்கு போய் வாழலானுர். சுமார் ஐந்தாண்டு காலம் அங்கு வாழ்ந்தார். அவ்வப்போது ஜாகிர்தார் வேண்டியபடி பற்பல நூல்களையும், அழகான சுலோகங்களையும் இயற்றினுர். அவ்வப்போது ஸ்வாமியினுடைய நூல்களைச் செவிமடுத்து மிகவும் மகிழ்ந்து பேரவையில் பஹுமானங்கள் பலவற்றைச்செய்து ஜாகிர்தார் மனம் மகிழ்ந்தார். அப்போது ஸ்வாமிக்கு 54 திருநக்ஷத்ரம் இருக்கலாம். வாழ்நாள் வீணுகக் கழிந்து விடுவதை எண்ணி மனம் நொந்து வேதாந்த சாஸ்த்திரத்தில் சிறந்த நூல் ஒன்றை எழுதத்தொடங்கினுர். ஆனுல் துரதிர்ஷ்டவசமாகத் தம் தாயார் ஜீவதசையுடன் இருக்கும்போதே பவஹுல ஐப்பசிமீ சுக்ல சதுர்த்தி யன்று 13-11-1874 அன்று திருநாட்டை யலங்கரித்து விட்டார். ஸ்வாமியால் எழுதப்பட்ட நூல்களாக இப்போது நமக்குக்கிடைப்பவைகளுள் லக்ஷ்மீசதகம், யமரகாமாயணம், ஹனுமத் ஸ்தோத்ரம், ஹனுமத் தண்டகம், ரகுநந்தன பிருதாவளி, வைசாகோத்ஸவவர்ணனம், ஹயக்ரீவ நக்ஷத்ர மாலிகை, ராமாயண கத்யம், கந்தர்ப தர்ப பாணம் முதலியன குறிப்பிடத்தக்கன நமக்குக் கிடைக்காத நூல்கள் பல.

—✲—

ஸ்ரீ:

ஸ்ரீ. உ. வே. அய்யா நரஸிம்ஹநாதாசார்ய ஸ்வாமி

(ஸ்ரீ. உப. வித்வான் நாவல்பாக்கம் என். எஸ். தேவநாதாசாரியர், தஞ்சாவூர்.)

ஸ்ரீமந்நாத முனிகள், ஆளவந்தார், திருமலை நம்பிகள் முதலான விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ப்ரவர்த்தகர்களுடைய திரு அவதாரத்தினால் மஹநீயதரமானதும். "சொட்டைகுலம்' என்று பெயர் பெற்று ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் விசேஷாபிமான பாத்ர பூதமானதும் "வேதாந்தாசார்ய ஸித்தாந்த விஜயத்வஜ" முதலான பிருதாவளிகளால் நாடுநகரமும் நன்கறியப் பட்ட ஸ்ரீ. உ. வே. அய்யா குமாரதாதேசிகனுடைய திரு அவதாரத்தால் பல்லாயிர மடங்கு புகழ் பெற்றதுமான ஸ்ரீ சைலவம்சத்தில் தொண்டை மண்டலத்தில் நாவல்பாக்கம் என்று பிரஸித்தமான ஸ்ரீ வைஷ்ணவ அக்ரஹாரத்தில் ஸ்ரீ உ. வே. அய்யா வேங்கடாசார்ய ஸ்வாமிக்கும் அவரது இளைய தர்மபத்நியான ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மையாருக்கும் திருக்குமாரராக அவதரித்தார் அய்யா நரஸிம்ஹதாதாசார்ய ஸ்வாமி. இவர் ப்ரக்ருதம் சதாபிஷேகம் கண்டருளும் ஆசார்யச்ரேஷ்டருடைய திருத்தகப்பனார். A. D. 1861 டிஸம்பர் மாதத்துக்குச் சரியான ரக்தாக்ஷி வருஷம் கார்த்திகை மாதம் பூர நக்ஷத்திரத்தில் அவதரித்தார். அச்சமயம் இவருடைய திருத் தகப்பனார் ஆரணி ஜாகீர்தாரிடம் ஆஸ்தான வித்வானாக இருந்தார். 'नकारणात् स्वादि भिदे कुमार: प्रवर्तितोदीप इव प्रदीपात्' என்னும் மஹாகவி ஸ்ரீஸூக்தியில் கூறப்பட்டபடி தமது பிதாவின் ஸகல வித அருமை பெருமைகளும் அப்படியே ப்ரதிபலிக்கும் வகையில் பால்யத்தில் விளங்கினார். ஜாதகர்ம நாமகரணம் முதலான ஸம்ஸ்காரங்கள் உரிய காலத்தில் முறைப்படி நடந்தன. கர்பாஷ்டமத்திற்கும் ஒரு வருஷம் முன்னதாகவே உபநயனம் செய்விக்கப்பட்டது. உபநயனம் ஆரணி ஜாகீர்தாருடைய மேற்பார்வையில் சீரும் சிறப்புமாக நடந்தது. அரச குடும்பத்தினருக்கு மட்டும் செய்யப்படும் மரியாதைகளெல்லாம் இதிலும் இடம் பெற்றன. பட்டத்து யானை மேல் அமரச் செய்து ஊர்வலம் நடத்தப்பட்டது. இவர் காவ்ய நாடகங்களைத் தம் தகப்பனாரிடமே கற்றார். உபநயனமானதும் வேதாத்யயனம், மற்றசாஸ்த்ரங்களின் அத்யயனம் எல்லாம் தொடங்கப்பட்டன. இந் நிலையில் 1874-ம் வருடம் தமது பத்தாவது வயதில் தந்தையை இழந்தார். இஃது இந்தக் குடியில் பரம்பரை வழக்கம் போலும். இவரது திருத்தகப்பனாராகிய அய்யா வேங்கடாசார்ய ஸ்வாமியும் இவ்வாறே தமது இளம்பிராயத்தில் தந்தையை இழந்தார். இவருடைய திருக்குமாரராகிய ஸ்ரீ உ. வே. அய்யா தேவநாதாசார்ய ஸ்வாமியும் எட்டாவது வயதிலேயே தந்தையை இழந்தார்.

இதனால் குடும்பத்தில் பெருமாறுதல் ஏற்பட்டது. இவரது தாயார் தமது குழந்தையுடன் ஆரணி ஜாகீரை விட்டு விட்டு நாவல்பாக்கம் வந்து விட்டார். ஊரிலிருந்த பெரியோர்கள் தந்தையை இழந்த நம் ஸ்வாமிக்கு முறைப்படி வேதங்களையும் சாஸ்திரங்களையும் கற்பித்தனர்.

तांहंसमाला शरदीवगङ्गां
महौषधिं नक्तमिवात्मभासः ।

शिरोपदेशा मुपदेशकाले
प्रपेदिरे प्राक्तन जन्मविद्याः ॥

என்கிறார் காளிதாஸ மஹாகவி. மஹாகுல ப்ரஸூதர்களுக்குக் கல்வியறிவு தானாகவே வளரும். பக்குவமான வயது வரவேண்டும். விதையினுள்ளே பதிந்து மறைந்துறையும் செடியை மழைத் தண்ணீர் மலர வைத்து வெளியில் ப்ரகாசிக்கச் செய்வது போல் உபாத்யாயர் சொல்லித் தருவது ஒரு வ்யாஜ மாத்திரமே. விதையில் இருக்கும் தாரதம்யத்தை மழைத் தண்ணீரால் மாற்ற முடியாது மனுஸ்ம்ருதியில் 'उप्यते यद्धि यद्बीजं तत्तदेवप्ररोहति' என்கிறார் 'कार्यं निदानाद्धि गुणानधीते' என்கிறது மஹா காவ்யம். காரணத்தின் இயல்புகள் யாவும் கார்யத்தில் தலை காட்டுவது இன்றியமையாதது என்பது இதன் கருத்தாம். இந்த ஸ்வாமியினுடைய வித்யாப்யாஸத்தில் இவ்விஷயங்களெல்லாம் ப்ரத்யக்ஷமாயின. அதிவேகமாக சாஸ்த்ராப்யாஸம் முன்னேற்றமடைந்தது. இவருக்கு ப்ரஹ்மோபதேசம் மட்டும் தந்தையாரால் பண்ணப்பட்டது. "ஸ்வாமி திருமாளிகை அப்பா" என்று வழங்கப்பட்ட ஸ்ரீ உ. வே. வரதாச்சாரியர் ஸ்வாமியிடம் ஸமாச்ரயணமும் ஸ்ரீமத் ராமாயணோபதேசமும் நடந்தன. ஸ்ரீபெரும்பூதூர் மாப்பிள்ளை விஜயராகவாசார்யர், 'வலைப்பேட்டை ஸ்வாமி' என்றும் வேதாந்த ராமானுஜஸ்வாமி என்றும் வழங்கப்பட்ட திருமலைதாதாச்சாரியர் ஆகியோரிடம் தர்க்க சாஸ்த்ரத்தைக்கற்றார்.

பதின்மூன்று வயதிலேயே இவருக்கு விவாஹம் நடந்தேறியது. வடவானூர் அக்ரஹாரத்தைச் சேர்ந்தவரும், அண்ணயார்ய மஹாதேசிகனுடைய தௌஹித்ரிபுமான ஸ்ரீமதி கமலம்மாள் இவருக்கு ஸஹதர்மசாரிணியானாள். விவாஹம் நாவல்பாக்கத்திலேயே நடந்தது. அன்று முதல் 'धर्मं सिद्धति सत्वरः' என்கிறபடி ஔபாஸநம், வைச்வதேவம் முதலான கர்மானுஷ்டங்களை முறைப்படி செய்து வந்தார்.

திருவஹீந்த்ரபுரத்தில் எழுந்தருளியிருந்தபோது ஒரு நாள் வழக்கம்போல் வைதிகோத்தமர்கள் அதிகாலையில் எழுந்து திருப்பக் கூடையை எடுத்துக் கொண்டு ஆற்றங்கரைக்குச் சென்றனர். இவர் மட்டும் ஓட்டமும் நடையுமாக மிகவேகமாகச் சென்றார். இதைக் கண்ட ஒரு வைதிகர் விரைவாகச் செல்லக் காரணம் என்ன? என்று கேட்டபோது 'பயங்கரமான கருநாகம் என்னைத் துரத்துகிறதே' என்று சொல்லிக் கொண்டே வேகமாகச் சென்றார். ஆனால் அவருக்குக் கருநாகம் காணப்படவில்லை. மீண்டும் அவரைத் தொடர்ந்து கொண்டே கேட்டார். "தூரியார்க்ய ப்ரதானம்" பண்ணும்படியான காலம் வந்து விடுமோ என்று பயந்து அதையே 'கருநாகம்' என்று சொன்னேன்; நல்ல வேளையாக அதனிடமிருந்து தப்பித்துக் கொண்டேன்" என்று பதில் கூறினாராம். இதிலிருந்து இவர் கர்மானுஷ்டானத்தில் எவ்வளவு நியதியுடையவர் என்பதை நன்கு உணரலாமன்றோ.

இவருக்குத் தர்க்க சாஸ்த்ரத்தைக் கற்பித்து வந்த மாப்பிள்ளை விஜயராகவாசாரியர் வடதேச யாத்திரை சென்றார். சென்றவர் அத்தேசத்திலேயே நிலைத்திருக்க நேரிட்டது. ஸ்ரீ. உ. வே. திருமலைதாதாச்சாரியார் ஸந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரித்து வேதாந்த ராமானுஜஸ்வாமி என்னும் திருநாமம் பூண்டு வலையபேட்டையில் தங்கி இருக்கலானார். இது காரணமாக இவருக்கு தர்கசாஸ்த்ரம் பூராவையும் கற்க முடியாமற் போய் விட்டது. பின்பு திருக்குடந்தையில் எழுந்தருளியிருந்த குறிச்சி ஸ்ரீ உ. வே. ரங்காச்சாரியார் ஸ்வாமியிடம் உத்தரவாதங்களைக் கற்று பூர்த்தி செய்தார். பிறகு புதுக்கோட்டை வித்வத்ஸதஸ்ஸுக்கு எழுந்தருளினார்.

அங்கு வந்திருந்த வித்வான்களுள் முதன்மையாகவே இவர் கௌரவிக்கப்பட்டார். புதுக்கோட்டையில் வசித்து வந்த ப்ரஹ்மஸ்ரீ குப்பு ஸ்வாமி சாஸ்திரிகள் மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் வல்லவர். அங்கேயே இருந்து கொண்டு அவரிடம் மீமாம்ஸா சாஸ்த்ரத்தைக் கற்றார். இங்ஙனம் கல்வித் துறையில் இரு கண்கள் போன்ற தர்க்கம்—மீமாம்ஸா சாஸ்த்ரங்களிலும் வித்தகரானார். பின்னர் ஸந்யாஸாச்ரமஸ்வீகாரம் செய்து கொண்டு வலையப்பேட்டையில் எழுந்தருளியிருந்த வேதாந்த ராமானுஜ ஸ்வாமியிடம் 'க்ரந்த சதுஷ்டயம்' எனப்படும் வேதாந்த சாஸ்த்ரத்தையும், மற்ற நூல்களையும் முறைப்படி காலக்ஷேபம் செய்தார். அவரிடம் சரணாகதியும் செய்து கொண்டார்.

இவருடைய தமையனார் (தாயாருக்கு மூத்தவளின குமாரர்) ஸ்ரீ உ. வே. வேதாந்தாச்சாரியர் என்பவருக்கும் இவருடைய இளைய ஸஹோதரர் ஸ்ரீ. உ. வே. ராகவாச்சாரியார் என்பவருக்கு மிடையே குடும்ப பாக விஷயமாகச் சில சர்ச்சைகள் நடந்தன. பரமவைராக்யசாலியான இருவருக்கு இவையெல்லாம் பிடிக்கவில்லை. இவரது இளைய சகோதரர். பிரம்மசாரியாகவே இருந்து பரமபதமடைந்தார் இவர் உள்ளத்தில் ஒரு புதுத்திருப்பம் ஏற்பட்டது. "எங்கேயாவது சென்று உஞ்சவ்ருத்தி செய்து வாழலாம்; பிடியரிசி இருந்தால் போதுமே! அதைப் பிச்சை எடுத்துப் பெறலாம்; அதைச் சமைத்து எம்பெருமானுக்கு நிவேதனம் செய்து உவகையுடன் வாழலாமே" என்ற முடிவுக்கு வந்தார். இப்படியே தனது ஆயுள்கால மாகிய நூறு வருஷங்களிலும் அனுஷ்டித்துக் காட்டிய ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகனை நாம் மறக்க முடியுமோ?

இங்ஙனமிருக்க இவரது திருத்தகப்பனாரை ஆதரித்த ஆரணி ஜாகீர்தார் ஸ்ரீ. திருமலராவ் ஸாகேப் இறந்துவிட்டார். அவருடைய மகன் பொறுப்பேற்றான். அப்பொழுது ஜாகீர்தார் மகன் இவரைத் தமது ஆஸ்தான வித்வானாக இருக்கும்படி வேண்டினான். அதை ஏற்கவிரும்பவில்லை. வயது முதிர்ந்த தாயாரையும் தேவிகளையும் இரு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு திருவஹீந்திரபுரத்துக்கு எழுந்தருளினார். அங்கிருந்த பாகவதோத்தமர்கள் கருட நதிக்கரையில் வீடு ஒன்றை ஏற்பாடு செய்துகொடுத்தனர். இவர் கருடநதியில் நீராடி கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அடியவர்க்கு மெய்யனையும் அருள்தருமாரண தேசிகனையும் பணிந்து, உபாதானகாலத்தில் செப்புச் செம்பைக் கையிலேந்தி நடு வீதியில் கம்பீரமான குரலில் ஸ்ரீ தேசிக திவ்யஸூக்திகளை அனுஸந்தித்துக்கொண்டு உஞ்சவ்ருத்திக்கு எழுந்தருளும்போது ஸேவித்து மகிழும் பாக்யம் அவ்வூரினருக்கே கிடைத்தது.

திருவஹீந்திரபுரத்தில் இருப்பவர்க்கு நாவல்பாக்கத்தாரிடம் பெருமதிப்பு உண்டு. அது காரணமாக இவர் அந்த திவ்யதேசத்திலேயே நிரந்தரமாக எழுந்தருளியிருந்தார். ஆயுட்காலத்தில் பெரும் பகுதி இத்தலத்திலேயே கழிந்தது.

இவரது குமாரரும் ஆசார்ய ச்ரேஷ்டருமான அய்யா தேவநாதாச்சார்ய ஸ்வாமி நாவல்பாக்கத்தில் அவதரித்தாலும் இத்தலத்தெம்பெருமானுடைய திருநாமமே இடப்பெற்றது.

இங்ஙனம் திருவஹீந்த்ரபுரத்தில் எழுந்தருளியிருந்தபோது இவரது ஜ்ஞானத்தையும், போதனாசக்தியையும் கண்ட பலர் இவரிடம் கல்விகற்று உலகப்ரஸித்த மேதைகளாகத் திகழ்ந்தனர். அவர்களுள் ஸ்ரீ. உ. வே. சேட்லூர் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி. ஸ்ரீ. உ. வே குடவாசல் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி. தையார் வங்கீபுரம் ஸ்ரீ. உ. வெ.

அம்மாளாச்சார் ஸ்வாமி, நாவல்பாக்கம் ஸ்ரீ. உ. வே. வலையப்பேட்டை ஸ்ரீநிவாஸ தாதாசார்ய ஸ்வாமி, நாவல்பாக்கம் ஸ்ரீ உ. வே. திருமலைதாதாசார்ய ஸ்வாமி வேங்கடாத்ரியகரம் ஸ்ரீ. உ. வே. கிருஷ்ண மாசார்ய ஸ்வாமி, ஒரத்தி ஸ்ரீ உ. வே. கண்டா வதாராசாரிய ஸ்வாமி, திருக்கண்ணமங்கை ஈச்சம்பாடி ஸ்ரீ. உ. வே. ஸ்ரீநிவாஸராகவா சார்ய ஸ்வாமி, ஸ்ரீ. உ. வே. ஸ்வச்சந்தம், ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, முதலானவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள் ஆவர்.

வைராக்ய ச்ரேஷ்டரான இவரை 'வெள்ளை வேஷ்டி ஸந்யாஸி' என்று எல்லோரும் வழங்கி வந்தனர். திருக்குடந்தை யிலுள்ள பெரியோர்கள் இவருக்கு ஸந்யா ஸாச்ரமஸ்வீகாரம் செய்து வைத்து விட வேண்டும் என்று விரும்பினர். ஆனால் இவருடைய ஸஹதர்மசாரிணிக்குக் கொஞ்சம் கூட இஷ்டமில்லை. தமது உடல் ஆரோக்யத்தைக் கவனித்துக் கொள்ளும் வழக்கம் என்றுமே இவருக்குக் கிடையாது; யதிதர்மங்களோ கடினமானவை; ஆச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டால் நீண்டநாள் இருக்க முடியாது. ஆதலால் ஸந்யாஸம் கூடவே கூடாது என்று கூறினர். மற்ற உறவினர்களுக்கும் இவ்வாறான அபிப்ரா யமே இருந்து வந்தது. 1904-க்குச் சரியான க்ரோதி வருஷம் புரட்டாசி மாஸம் பௌர் ணமி தினத்தன்று ஸ்ரீ. வேதாந்தராமானுஜ ஸ்வாமியிடம் ஸந்யாஸாச்ரமதை ஸ்வீகரித துக் கொண்டார். அதே வருஷத்தில் மார் கழி மாதம் கிருஷ்ணபக்ஷ ஷஷ்டியன்று திருநாட்டை அலங்கரித்து விட்டார். வலையப் பேட்டையிலேயே கைங்கர்யம் நடைபெற் றது. 'अप्रज्ञातꣳहि तद् यदति पन्न आहुरिदं कार्यं मासीदिति' என்னும் வேதவாக்யத்தை எண்ணி இதற்குப் பொறுப்பானவர்கள் வருந்தினர்.

புரட்டாசி மாதத் திருவோணத் திருநாளில் ஸ்ரீ. தேசிகன் சாற்றுமறை திருவஹீந்த்ர புரத்தில் விசேஷமாக நடைபெறுகின்றது. பல்லாயிரக் கணக்கான பக்த கோடிகள் குழுமியிருந்தனர். ஸாயங்காலம் கருட நதி யில் தீர்த்தவாரி நடைபெற விருக்கின்றது. அந்த ஸமயம் இவர் கோஷ்டியில் காணப் படவில்லை. காலையிலிருந்து நிழல் போல விட்டுப் பிரியாமல் ஸ்ரீ தேசிகனுடனே அனு யாத்திரை செய்த இவர் எங்கே போயிருப் பார்? திருமாளிகையிலும் இல்லையே! என்று அனைவரும் திகைத்தனர்.

இவருடைய ஸஹதர்மசாரிணிக்கு விஷ யம் தெள்ளென விளங்கிவிட்டது. தீயில் விழுந்த புழுவைப் போல் துடிதுடித்தார். ஸ்ரீ. உ. வே. அக்னிஹோத்ரம் நாராயண தாதாசார்யருடைய ஜனக பிதாவான தாது மாமா என்பவரைத் துணையாகக் கொண்டு எட்டே வயதான குழந்தையையும் (ப்ரக்ரு தம் சதாபிஷேகம் கண்டருளும் ஆசார்ய ரத்னம்) அழைத்துக் கொண்டு அன்றிரவே இவரைத் தேடப்புறப்பட்டார். எங்கே போய்த் தேடுவது! அது தான் ஸ்வாமி தேவிகளுக்கு நன்றாகத் தெரியுமே. 'திண்ண மென்னிளமான் புகுமூர் திருக்கோளூரே' என் கிற படி "வலையப் பேட்டைக்குத்தான்" "அதற்காகத்தான்" இவர் சென்றிருக் கிறார். அங்குதான் போக வேண்டுமென்று கருதி மறு நாள் காலை மூவரும் வலையப் பேட்டைக்கு வந்து சேர்ந்தனர். நினைத்த படியே தான் நடந்து கொண்டிருந்தது.

இவருக்கு ஸந்யாஸம் கொடுக்கப் போகிற வரான ஸ்ரீ. வேதாந்த ராமானுஜஸ்வாமி யிடம் சென்று அடிபணிந்து இவருக்கு ஸந் யாஸம் கொடுத்தால் விபரீதமான விளைவு கள் ஏற்படும் என்று கூறி ஸந்யாஸம் கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும் என்று வேண்டிக் கொண்டனர். ஆனால் ஸ்வாமி

"ஏற்கனவே இரண்டு முறை என்னைக் கேட்டார்" நான் இசையவில்லை. இது மூன்ருவது முறை; இப்போதும் மறுத்துரைப்பது எனக்குத்தகாது. பழுத்த வைராக்யமுள்ள இவரை மீண்டும் க்ருஹஸ்தராக இருக்கச் செய்வது ஸாத்யமுமில்லை; உசிதமுமில்லை" என்று ஸாதித்து விட்டார்.

பிறகு அவரையே நேரில் சென்று வேண்டிக் கொண்டனர். ஒன்றும் பயனில்லை. सतीभार्या सुतशिशुः என்கிறபடி மஹா உத்தமியான ஸஹதர்மசாரிணியும் சின்னஞ் சிறு பாலசஞகிய நம் ஸ்வாமியும் கண்ணுங் கண்ணீருமாகத் துக்கம் தாங்க முடியாமல் புலம்பி அழுதனர். "ऋणानि त्रीण्यपाकृत्य मनो मोक्षे निवेशयेत्" (மூன்று கடன்களையும் தீர்த்து விட்டுத் துறவு பூண வேண்டும்) 'यदहरेव विरजेत् तदहरेव प्रव्रजेत्' (பற்று அற்றுப் போனதும் தாமதமின்றித்துறவு பூண வேண்டும்) என்னும் சாஸ்த்ரங்களை அந்தப் பெரியோர்களிடம் எடுத்துக் காட்டினர் "எனக்கு மூன்று குழந்தைகள்; பெண்கள் இருவரும் மூத்தவர்கள்; அவர்களுக்குக் கல்யாணம் செய்துவைத்தாகிவிட்டது; மூன்ருவது பிள்ளைக்கு உரிய காலத்தில் உபநயனம்—ஸமாச்ரயணம்—பரந்யாஸம் எல்லாம் பண்ணி வைத்தாயிற்று. இவனுக்கும், இவன் தாயாருக்கும் ஜீவனத்திற்காதாரமாக நாவல்பாக்கத்தில் பித்ரார்ஜிதமான ஸ்வல்பமான பூமியும் வீடும் உள்ளன; அவர்களுக்கு ஒரு குறையுமில்லை. எனக்குத் துறவுபூண்டொழுகுவதில் ஆர்வம் அதிகமாக உள்ளது. தேஹபந்துக்களைத்தான் துறக்கிறேன். இனி நான் அவர்களுககில்லை; அவர்களும் எனக்கில்லை; அவ்வளவேயன்றி ஆத்மபந்துக்களான எண்ணற்ற நண்பர்களையும் ஆசார்யர்களையும், சிஷ்யர்களையும் துறக்கவில்லை. எனக்கு எவ்வித குறையுமில்லை; என்னைப் பற்றியாரும் கவலைப்பட வேண்டாம்; எனக்கும் யாரைப் பற்றியும் கவலை இல்லை; என்னிஷ்டம் போல் செய்ய எனச்கு அனுமதி கொடுங்கள்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி விட்டார்.

உத்தமமான முறையில் ஸந்யாஸாச்ரமஸ்வீகாரம் வலையப் பேட்டையில் நடந்தேறியது. "ஸ்ரீரங்கராமானுஜ ஸ்வாமி" என்று இவருக்குத் திருநாமம் சாத்தப் பட்டது பின்பு அதிவிலக்ஷணமாக யதிதர்மங்களை அனுஷ்டித்துக் கொண்டு வலையப் பேட்டையிலேயே எழுந்தருளியிருந்தார்.

நான்கு மாதங்கள் கழிந்தன. திருமேனியில் வாட்டம் காணலாயிற்று. உடல்நிலை குன்றியது. அவர் கூடிய சீக்கிரத்திலேபரமப்பிராப்தி ஏற்பட்டுவிடும் என்பதை உணர்ந்தார். கடைசி நிமிஷம்வரை ப்ரஜ்ஞாபங்கம் சிறிதுமில்லை. நெடுநாளாக அப்யஸித்து வந்த பகவதனுபவம் உள்ளத்தில் வெள்ளமிட்டோடியது. உடன் இருந்தவர்களை உபநிஷத்தை உத்கோஷிக்கும்படி கேட்டுக்கொண்டார். அது முடிந்ததும் 'த்வய' மந்திரத்தை அனுஸந்திக்கச்சொன்ஞர். இந்நிலையில் இவராசார்யரான ஸ்ரீ. வேதாந்தராமானுஜ ஸ்வாமி அருகில் எழுந்தருளினுர். இரண்டு கண்களும் தெரியாத இந்த ஸ்வாமிக்குத் துக்கம் தாங்க முடியவில்லை. "எனக்குப் பிறகு இங்கிருந்து ஸத்ஸம்ப்ரதாயப்ரவசனம் பண்ணும்படி இருக்கும் என்று பாரித்திருந்தேனே! விபரீதமாகிவிட்டதே" என்று புலம்பினுர். ஆசார்யனை அஞ்சலி செய்து வணங்கி, யதியின் மரணம் அனுசோசனர்ஹம்; இந்த ஸமயம் இங்கு எழுந்தருளியது அடியேனுடைய பாக்யம். கூரத்தாழ்வானுடைய அந்திம காலத்தில் எம்பெருமானுர் உடன் இருந்ததை நினைக்கிறேன்" என்று கூறி விடைபெற்ருர். சிறிது நேரத்திற்கெல்லாம் நாற்பது வருஷ காலம் இம்மண்ணுலகில், இருள்தருமா ஞாலத்தில் தோன்றி ஒளிவீசிய அற்புதமான ஜோதி

மறைந்தது. நிரந்தரமான பரம்பொருளில் கலந்து மறைந்துறைந்தது. நிலைபெற்ற பேரின்ப மெய்தியது.

பூர்வாச்ரமத்திலும், ஸந்யாஸாச்ரமத்திலும் ஸ்வாமிக்கு அந்தரங்க ப்ரிபசிஷ்யராக இருந்த ஸ்ரீ உ.வே. ஒரத்திகண்டாவதாராச்சாரியரும், மற்றும் அங்கிருந்த மஹநீயர்களும் பொறுக்க முடியாத துக்கத்தை ஒருவாறு கட்டுப்படுத்திக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமியின் ஸம்ஸ்காரத்தைச் சிறப்பாகவே நடத்திவைத்தனர். ஸத்புத்ர ரத்னமாகிய சதாபிஷேகம் கண்டருளும் நம் ஸ்வாமி உத்தரக்ரியைகளை நாவல்பாக்கத்தில் செய்து முடித்தார். இவருக்கு ஸ்ரீ. உ. வே. தாது மாமாவும் ஸ்ரீ. உ. வே. ஆராவமுதாச்சாரியாரும் உடன் இருந்து கைங்கர்யத்தைக் குறைவற நடத்திவைத்தனர்.

இந்த ஸ்வாமி மறைந்து போனாலும் சிஷ்ய ப்ரசிஷ்ய பரம்பரையாக இவரால் ஏற்றி வைக்கப்பட்ட ஞானவிளக்கு இன்றும் அகவிருளையகற்றி ஞானஒளியை வீசிவருகின்றது.

With the best compliments from :

A

Thooppil Bhaktha.

ஸ்ரீ நரஸிம்ஹதாதயார்ய மஹாதேசிகன்

(ஸ்ரீ. உப. வே. வித்வான், நாவல்பாக்கம் வி. நரஸிம்ஹதாதாசாரியர் ஸ்வாமி.)

இந்தஸ்வாமி நாத, யாமுன, குருகைப் பிரான் முதலிய மஹநீயர்கள் அவதரித்ததும் விஷ்ணு வ்ருத்தகணம் என்று ப்ரஸித்தமு மான சதுர்வேத சதக்ரது வம்சத்தில் நாவல் பாக்கத்தில் ஸ்ரீ வேங்கடரங்காசாரியர் ஸ்வாமியின் திருக்குமாரராக ஈச்வர வருஷம் வைகாசி மாதம் ரோஹிணி நக்ஷத்திரத்தில் அவதரித்தார். வைகாசி மாதம் ரோஹிணி நக்ஷத்திரம் நாவல்பாக்கம் கூடஸ்தரான ஸ்ரீ குமாரதாத தேசிகன் அவதரித்த நாளாகும்.

உரிய காலத்தில் உபநயநம் நடைபெற்ற தும் வேதாத்யயனத்தை முறைப்படி பெற்றார் அக்காலத்தில் மைசூர் கலாசாலையில் அத்ய க்ஷராக இருந்த "தர்க்க தீர்த்த" ஸ்ரீ கஸ் தூரி ரங்காசாரியர் ஸ்வாமியிடம் தர்க்க சாஸ்த்ரத்தையும் திருவிசநல்லூர் ஸ்ரீ ராம ஸுப்பா சாஸ்திரிகளிடம் மீமாம்ஸா சாஸ்த் ரத்தையும் கசடறக் கற்று ஸ்ரீ பரமஹம் ஸேத்யாதி நாவல் பாக்கம் வலயப்பேட்டை வேதாந்த ராமானுஜ மஹா தேசிகன் ஸன் னிதியில் வேதாந்த காலக்ஷேபமும் செய்து ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கினார்.

தர்க்க சாஸ்த்ரத்தில் மைசூர் அரணமனை யில் நடந்த பரீக்ஷைகளில் ஒவ்வொரு வருஷ மும் உத்தம பாகத்தில் தேர்ச்சியடைந்து அனைவராலும் பாராட்டப்பட்டார். ஒரு ஸம யம் மன்னார்குடி ஸதஸ் முடிவடைந்து வித் வான்கள் ஸம்பாவனைகளைப் பெற்றுத்தம்தம் ஊர்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். அப்பொழுது உத்தர தேசத்திலிருந்து தர்க்க பண்டிதர் ஒருவர் வந்து வாதத்திற்கு அழைத் தார். ஸதஸ்ஸில் உத்தம ஸம்பாவனை பெற்ற பண்டிதர் உட்பட அனைவரும் திடுக்கிட்டு அஞ்சி நம் ஸ்வாமியையே ப்ரார்த்தித்து நிற்க ஸ்வாமியும் வாதம் செய்து வென்றார். கொச்சி மன்னரையும் தம் திறமையால் வாகைசூடி தம் நிகரற்ற தன்மையை வெளிப்படுத்தினார்.

ச்ருதப்ரகாசிகா, பாவப்ரகாசிகா, சத தூஷணி போன்றக்ரந்தங்களைத் தன் ஆசாரி யரது நியமனத்தின் பேரில் ஸ்ரீமதண்ண யார்ய மஹா தேசிகனது திருத்த மயனாரான ஸ்ரீ தேசிகாசாரியர் ஸ்வாமியின்திருக்குமா ரரான ஸ்ரீ தாதாசாரியர் ஸ்வாமியிடம் கால க்ஷேபம் செய்து வைச்வ தேவோப தேசத்தை யும் இந்த ஸ்வாமியிடமே பெற்றார். மேலும் அந்த ஸ்வாமியிடமே உபநிஷத்துகள் எல்லா வற்றையும் முறைப்படி அத்யயனம் செய்தார் ஸ்ரீ அஹோபில மடத்தில் 42-ஆம் பட்டத் தில் பிற் காலத்தில் எழுந்தருளியிருந்த இஞ்சிமேட்டு அழகியசிங்கரும் இந்த ஸ்வாமி யும் உத்தரதேசத்திற்குச் சென்று வித்யா க்ரஹணம் செய்தவர்கள்.

பின்னர் ஸ்வாமியும் நாவல்பாக்கத்திலேயே எழுந்தருளியிருந்து பலருக்கு ஸாமான்ய சாஸ்த்ரங்கள், வேதாந்த காலக்ஷேபம் முதலி யவற்றை ஸாதித்துக்கொண்டிருந்தார். ப்ரக் ருதம சதாபிஷேகம் கண்டருளும் நம் ஐயா தேவநாததாதயார்ய மஹா தேசிகன் இந்த ஸ்வாமி ஸன்னதியிலேயே தர்க்க, மீமாம்ஸா சாஸ்த்ரங்களை அதிகரித்து வேதாந்த கால க்ஷேபம் செய்தார். ஸ்வாமி ஸன்னிதியில் தர்க்கம் வாசித்துப் பிரஸித்திபெற்ற மற் றொரு ஸ்வாமி, ஸ்வாமி திருமாளிகை ஆரா வமுதாசாரியர் என்பவர். ஸ்வாமி ஸன்னிதி யில் மீமாம்ஸா சாஸ்த்ரத்தை யப்யஸித்த

ஸ்ரீ. நரஸிம்ஹதாதயார்ய மஹாதேசிகன்
(நாவல்பாக்கம்)

பிரஸித்த வித்வான்களில் ஸ்ரீ உ. வே. அக்னி ஹோத்ரம் நாராயண தாதயார்ய மஹா தேசி கனுமாவார்.

ஸ்ரீந்ருஸிம்ஹதாத தேசிகன் ஸன்னிதியில் காலக்ஷேபம் செய்தவர்களில் அம்மணிதாத தேசிகாசாரியர், ஸ்ரீபெரும்பூதூர் ஸமஸ்க்ருத கலாசாலையில் தர்க்காதயாபகராய் ப்ரஸிதத ராய் எழுந்தருளியிருந்த சட. க்ருஷ்ணதாதா சாரியர் ஸ்வாமியும் மற்றும் ப்ரஸித்தவித் வானகளான ஸ்ரீ N. S. தேவநாததாதாசாரியர் ஸ்வாமி N. S. ராஜகோபாலதாதாசாரியர் ஸ்வாமி சித்தியா (லக்ஷ்மீபுரம்) சுந்தரராஜா சாரியர் ஸ்வாமி சிததியாரஙகநாதாசாரியர் ஸ்வாமி உருதிககோட்டை வித்வான் கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி நல்லூர் ஸேவா ஸ்ரீநிவாஸராகவாசாரியர் ஆகியோர்களும் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

நம் ந்ருஸிம்ஹதாதா தேசிகன் பால்ய முதல் ஆடமபரததை வெறுததவர். ஸ்ரீதேசிகனைப் போல வைராகயததில் நிகரற்றவர்.

திருமாளிகை தேடி வேண்டி வற்புறுத்தி அளிததாலும் பொருளை ஏற்காதவர். பிற் காலததில் பெருமாள் கோவிலிலேயே பல் லாணடுகள் எழுநதருளியிருந்தார். பேரரு ளாளனிடம மிகுநத ஈடுபாடு கொண்டு நவ ராத்ரி முதலான உதஸவ காலங்களில் தீவட்டி பிடிததல் கைஙகரியத்தில மிகுந்த நோககுடையவா. அடிககடி "नकञ्चनवसतौ प्रत्याचक्षीत" என்று ஸாதிப்பது வழககம். வேதாதயயனம் செய்தவாகளிடம் மிகுநத க்ருபையுடையவர். கடைசி வரை யஜ்ஞோப வீதம் நூறறல் போன்ற கார்யங்களைததாமே செய்து வநதார்.

காலஞ்சென்ற சென்னை ஹைகோர்ட் நீதி பதி ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் போன்ற மஹநீயர்கள் ஸ்ரீ ஸ்வாமியிடம் தேவ தாப்ரதிபத்தியுடையவாகள். பெடரல் கோர்ட் நீதிபதியாயிருந்த ஸர் S வரதாசாரியர் ஸ்வாமி ப்ரஸித்தராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ A. N. S. ராகவாசாரியார் ஸ்வாமி முத லானோர் ஸ்வாமியின் திருவடிகளை யாச்ர யித்த ப்ரமுகர்கள். நம் ந்ருஸிம்ஹதாத தேசி கன் नार्विजित्य पुन र्निवर्तते என்றபடி எந்த வாதத்திலும் வெற்றியின்றி திரும்பியது கிடையாது. இந்த ஸ்வாமியின் வைராக்யா னுஷ்டானங்கள் பற்றிப் பல வித்வான்கள் ச்லாகித்து எழுதியுள்ளனர்.

இந்த ஸ்வாமி ஸ்ன்னிதியில் பரஸமர்ப் பணம் செய்த இளந்தலை முறையினருள் நாவல்பாக்கம் N. S. ராமானுஜதாதாசாரிய ரும் ஒருவர். இவர் தர்க்க, மீமாம்ஸை, வ்யாகரணம் போன்ற ஸாமான்ய சாஸ்த்ரங் களில் சிரோமணி பரீக்ஷையில் உத்தமோத் தம பாகத்தில்தேர்ச்சி பெற்றவர். அய்யா தேவ நாததாத தேசிகனிடம் வேதாந்த காலக்ஷேபம் செய்தவர். இளந்தலைமுறையினருள் நான்கு சாஸ்திரங்களிலும் பாடப்ரவசனம் செய்யக் கூடியவராயும் அத்வைத மத்வமதஸ்தர்களின் ஸதஸ்ஸுக்களில் கலந்துகொண்டு அவர் களாலும் போறறப்பட்ட வராயும் ஒப்பாருமிக் காரு மற்றும் விளங்குகிறார்.

ஸ்ரீந்ருஸிம்மதாத தேசிகன் சோபகிருது ஸு ஐப்பசிமீ 11உ ஏகாதசியன்று திருநாடலங் கரித்தார்.

ஸ்ரீ:

நாவல்பாக்கம் ஸ்ரீ உப. வித்வான்

அய்யா ஸ்ரீதேவநாததாதாசார்ய ஸ்வாமி

[வங்கிபுரம் நவநீதம் வித்வான் ஸ்ரீராமதேசிகாசார்யர் ஒப்பிலியப்பன் சந்நிதி]

1. முன்னுரை

பரமைகாந்தி ஸார்வபௌமராய் ஸ்ரீதேசிக தர்சநத்துக்கு ஆதர்ச புருஷராய் விளங்கும் ஸ்ரீ உப. அய்யா ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவத்தை முன்னிட்டு வெளியாகும் மலரில் பல மஹாவித்வான்களின் சிறந்த வியாசங்கள் இடம் பெறுகின்றன. சிற்றறிவினனுன அடியேனையும் ஒரு பொருளாககி ஒரு வியாசம் எழுதும்படி உத்ஸவ நிர்வாஹகர்களின் நியமநம். ஸ்ரீஸ்வாமியைப் பற்றியே எழுதும்படி வந்த நியமநததை முடியில் தாங்கி அணில் திருவணை கட்ட உதவியதுபோல் அடியேன் மந்த மதிக்கு எட்டுமளவுக்கு ஒரு வியாசம் வரைந்து பாகவத நியமநத்தை ஒருவாறு தலைக்கட்டிய திருப்தியை மட்டும் கொண்டு நிறம்பெறுகின்றேன்.

2. பரமைகாந்திகள் யார்?

எம்பெருமானுர் தர்சநத்தில் பரமைகாந்தி என்னும் சொல் நெடுங்காலமாக வழங்குகின்றது. நல்ல ஆசாரசீலனுய் வைதிக கர்மங்களை அநுஷ்டித்து வருமவனையே இச் சொல் குறிப்பதாக நாட்டார் கணட பொருள் இச்சொல்லின் உண்மைப்பொருள் வேறு. ஸர்வேச்வரனுன ஸ்ரீமந்நாராயணனையே பரதேவதையாகக்கொணடு வேறு தெய்வத்தை உள்ளத்தாலும் சிநதியாதவர்கள் ஏகாந்திகள். எம்பெருமானிடமும் மோக்ஷத்தையன்றி வேறு பயனை நாடாதவர்கள் பரமைகாந்திகள். இங்கு உள்ள காலம் பகவத் கைங்கர்யங்களை அநந்ய ப்ரயோஜநமாகச்செய்து இவற்றுக்கு மோக்ஷத்தையும் பலனுகக் கருதாமல் பகவத் குணுனுபவத்திலேயே மண்டியிருப்பவர்கள் பதினுறு மாற்றுப் பொன் போன்ற பரமைகாந்திகள். இந்தப் பாகுபாடு ஸ்ரீதேசிகன் கண்டு நமக்கு விளங்கியது.

3. அவர்கள் வாழ்வதற்கு உரிய இடம்

இத்தகைய பரமை காந்திகள் இச்சரீரம் உள்ளவரை இங்குக் கைங்கர்யம் செய்து கொண்டு வாழ்வதற்கு உரிய இடத்தைச் சாஸ்த்ரங்கள் கூறுகினறன. தார்மிகர்கள் வசிசுகும் இடமாய்க கூறிய ஆர்யாவர்த்தம் முதலிய புணணிய பூமிகள் இககலியுகததில் வபரீதர் கையில் அகப்பட்டு ஸாத்துவிகாகள் வசிபபதற்குப் பொருந்தாமற் போயின. இப்பொழுது கைங்கர்யம் செயது வாழ்வதற்கு ஏறற இடத்தைத் தேடும்போது பாகவதர்கள் வசிக்கும் இடமே மிக மேம்பட்ட இடமென்று சாஸ்த்ரங்களே கூறிவிட்டன. 'இங்குத் திருவரங்கத்திலேயே உன் சரீரம் கழியுமளவும் ஸுகமாக வாழ்ந்திடு' என்பது பெரிய பெருமாள் சரணமடைந்த சேதநனுக்குக் கூறிய அருள்மொழி. இது எம்பெருமான் எழுந்தருளியுள்ள மற்ற இடங்களையும் குறிப்பதாகும் என்பது ஆசார்யர்கள் கண்ட முடிவு. புண்ணியத்தலம்-திவ்யதேசம் என்ற சிந்தனையெல்லாம் விட்டுப் பரமைகாந்திகளான பாகவதர்கள் வாழுமிடம் என்பதையே முக்கியமாகக் கொண்டு அத்தகைய இடத்திலே கைங்கர்யங்களைச் செய்து கொண்டு வாழ்வதுவே சிறக்கும். இவையெல்லாம் நம் தேசிகன் கண்டு விரித்துரைத்த உண்மை.

4. தொண்டைநாட்டின் சிறப்பு

நம் தர்சநத்துக்குப் பழய மூலபுருஷர் களான முதலாழ்வார்களையும் ப்ரதாந ஆசார் யர்களான எம்பெருமானுரையும் ஸ்ரீதேசி கனையும் அவதரிப்பித்த தனிப்பெருமையைத் தொண்டைநாடு கவர்ந்து கொண்டது. வேத வேதாந்தங்களை ஓதிய அந்தணப் பெரு மக்களைத தொண்டை மண்டலத்தில் மற்ற நாட்டினும் மிகுதியாகக் காணலாம். தேசி கன் தாமே தொண்டைமண்டல வேதியரென அவர்களைப் பற்றிப் பெருமையாகக் கூறுகின் ருர். ஸ்வாமியின் தேசாபிமாநமாகவும் இருக் கலாம். நாம் ஆக்ஷேபிப்பதற்கு இடமில்லையே! நம் தர்சநத்துக்கு வழிகாட்டிய நாதமுனிகள், ஆளவந்தார் மற்ற ஆழ்வார்கள் இவர்களை அவதரிப்பித்ததைக்கொண்டு சோழநாடு திருப்தி பெறலாமே!

5. நாவல்பாக்கம் ஸ்ரீகிராமம்

அந்தத் தொண்டைமண்டலத்தில் ஆசார அநுஷ்டாநங்களுக்கும் ஏகாந்த வாஸத்துக் கும் அர்ச்சையின் அநுபவத்துக்கும் பாங்கா கப் பெரியோர்கள் தாஙகள் மிக விரும்பி வாழு மிடமாக ஏற்ற ஒரு ஸ்ரீகிராமம் உண்டு. அது தான் நாவல்பாக்கம் என்பது. தினந்தோறும் ஜம்பூ த்வீப மென்று சொல்லிக்கொண்டு தானே ஸங்கல்பம் செய்து கொள்கின்ருேம்! இந்த நாவலம் பெரிய தீவினில் வைதிகச் செல்வம் நிறைந்த பெருமை பற்றி அத்தீவின் பெயரையும் பங்கிட்டுக்கொண்டதோ இந்தக் கிராமம்! நாவல் எனும் தமிழ்ச்சொல் வெற்றி முழக்கத்தையும், பாக்கம் எனும் சொல் அரசர் உறையும் இடத்தையும் குறிக்கும். வேதத்தில் கரை கண்ட வெற்றியுடன் வேத கோஷத்தைச்செய்யும் வைதிக சக்கரவர்த்தி கள் பலர் வாழுமிடமாயுள்ளதால் இந்தத் திரு நாமம் வந்ததோ! இதற்குப் பொருத்தமாகத் தானே இன்றளவும் சுரோத்ரிய நாவல்பாக்கம் என்றே வழங்குகிறது.

6. ஸ்ரீகிராமத்தின் சிறப்பு

அலர்மேல் மங்கையுறை மார்பஞன திரு வேங்கடமுடையான் திருமலையில் நடக்கும் எல்லையற்ற விபவங்களை அநுபவித்துச் சலித்து ஏகாந்த வாஸத்தையும், ஏகாந்த சீலர் களான பாகவதர்களின் ஸஹவாஸத்தையும் விரும்பி இவ்வூரைத் தனக்கு உறைவிடமாகக் கருதி இங்கு வந்து தோன்றி அற்புதக்காட்சி யளிக்கின்ருனே! அர்ச்சை வடிவில் இங்கு ஸ்ரீநிவாஸனை அநுபவித்து வாழ்வதால் பாக வதர்களுக்குப் பெருமை. அவர்கள் நடுவே வாழ்வதால் எம்பெருமானுக்குப் பெருமை.

நாதமுனிகள் திருவம்சத்தில் உதிக்கும் பேறு பெறற பல குடும்பப் பெரியோர்கள் முதன் முதலாக இவ்வூரில் எப்பொழுது குடியேறினுர்களென்பதும் ஸ்ரீநிவாஸப் பெரு மான் பிராட்டியோடு எப்பொழுது அர்ச்சை வடிவில் இங்கு எழுந்தருளினுன் என்பதும் நம் ஆராய்ச்சிக்கு அகப்படாத விஷயம். இந்தச் சிந்தனை அவசியமுமன்று. க்ஷீராந் நத்தின் போக்யதையில் மூழ்கி யிருப்பவன் அதன் சாதனப் பொருளைப் பற்றிச் சிந்திப் பதுண்டோ? இங்கு நெடுங்காலமாக வாழ்ந்த மஹான்களில் சிலர் நான்கு வேதங்களையும் ஓதி நூறு வேள்விகளையும் அநுஷ்டித்து வந்தவர்களாதலின் சதுர்வேத சதக்ரது என்ற சிறப்புப் பெயர் அந்தத் திருவம்சத்தில் தோன்றியவர்களுக் கெல்லாம் இன்றளவும் தொடர்ந்து வருகின்றது.

7. முனித்ரய ஆசார்ய பரம்பரைகள்

முநித்ரய ஸம்ப்ரதாயத்தில் மூன்று பரம் பரைகள் ஆசார்யகம் செய்து வருகின்றன. (1) ஸ்ரீ ஆண்டவன் பரம்பரை, (2) ஸ்ரீ ஆண்டிகாட்டு ஸ்வாமி பரம்பரை (3) ஸ்ரீ நாவல் பாககம் ஸ்வாமி பரம்பரை. இவற் றுள் ஸ்ரீ ஆண்டவன் பரம்பரை இன்றளவும் ஸந்ந்யாஸாச்ரமத்தில் எழுந்தருளியுள்ள ஆசார்யர்கள் வழியாகவே பரவி வருகின்

றது. ஸ்ரீ ஆண்டிகாட்டு ஸ்வாமி பரம்பரை இற்றைக்கு முன்பு சில ஆண்டுகள் வரை ஸந்ந்யாஸிகளாயுள்ள ஆசார்யர்கள் வழியாகவே வந்து இப்பொழுது க்ருஹஸ்த ஆசார்யர்கள் வழியாகவே எதோ ஊர்ந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீ நாவல்பாக்கம் ஸ்வாமி பரம்பரை மட்டும் (ஸந்ந்யாஸாச்ரமத்தில் எழுந்தருளியிருந்த ஓர் ஆசார்யனைத் தவிர) க்ருஹஸ்தாச்ரமத்திய ஆசாயர்கள் வழியாகவே இன்றளவும் நடந்து வருவது ஒரு விசேஷாம்சம்.

8. நாவல்பாக்கம் பரம்பரை

கீழ்க் கூறிய ஆசார்ய பரம்பரைகள் மூன்றும் திருக்குடந்தை தேசிகன் திருவடிகளை ஆச்ரயித்த ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகனிடமிருந்தே உருவாகின்றன. இந்த ஆசார்யனிடம் நேராக ஆச்ரயித்தவர் நாவல் பாக்கம் ஸ்ரீ அண்ணயார்ய மஹாதேசிகன்; இந்த மஹான் ஆசார்யாநுக்ரஹத்துடன் ஸ்ரீ ஹயக்ரீவனைத் தம் உபாஸந பலத்தால் ஸாக்ஷாத்கரித்து அந்தப் பெருமையால் ஸர்வதோமுகமான ஜ்ஞாந விகாஸத்துடன் இந்த ஸம்ப்ரதாய பரம்பரைக்கு முதல் ஆசார்யனாய் விளங்கியவர். இந்த மஹானுடைய திருவடிகளில் ஆச்ரயித்தவர்களுள் முதல்வர் துரீயாச்ரமத்தில் எழுந்தருளியிருந்த (வலையப்பேட்டை) ஸ்ரீ வேதாந்த ராமாநுஜ மஹா தேசிகன். இந்த ஸ்வாமிக்குப் பின இந்த ஸம்ப்ரதாயம் க்ருஹஸ்தர்களான ஆசார்யர்கள் வழியாகவே இன்றளவும் பிரகாசித்து வருகின்றது.

சதுःசாஸ்த்ர கல்ப தருவாய் எல்லாச் சாஸ்தரங்களையும் பற்பல மேதாவிகளான சிஷ்யாகளுக்கு உபதேசித்து ஜகத்ப்ரஸித்தராய் விளங்கிய அம்மாசத்திரம் ஸ்ரீ சேஷாதார்யார்ய மஹா தேசிகன்—வலையபேட்டை ஸ்ரீநிவாஸதாதார்ய மஹா தேசிகன்—நாவல் பாக்கம் ஸ்ரீ நரஸிம்ஹதாதார்ய மஹா தேசிகன் முதலிய பல ஆசார்யச்ரேஷ்ட்டர்கள் தத்தம் சிஷ்யர்கள் வாயிலாக நாவல்பாக்கம் ஸம்ப்ரதாயத்தை நன்கு ரக்ஷித்து வந்தனர்.

9. சில மஹான்களுக்கு அமுதன் அழைப்பு

ஆராவமுதனுக்கு நாவல்பாக்கத்து மஹான்களைக் குடந்தைக்கு அழைத்துத் தனது அநுபவத்தை அளிக்க ஆசை எழுந்தது. அமுதன் சில குடும்பங்களைக் குடந்தைக்கு வரச் செய்து அப்பெரியோர்களுக்குப் பாட்டராசாரியர் என்ற திருநாமத்தை அளித்து அப்பெயரிலேயே திருவீதி ஒன்றையும் அமைத்துத் தந்து அவர்கள் செய்த கைங்கர்யங்களை ஏற்று மகிழ்ந்தான். அவர்களும் சோழ அரசனால் மதிக்கப் பெற்றுப் பல திவ்ய தேசங்களில் தீர்த்தம் முதலிய மரியாதைகளைப் பெற்று இனிதே வாழ்ந்தனர். இன்றும் சில ஸந்நிதிகளில் இப்பொழுது உள்ளவர்கள் பெறுகின்றனர்.

10. ஸ்ரீ கிராமத்தின் இப்பொழுதைய நிலை

இப்படி ஸதாசார சீலர்களான மஹா பாகவதர்கள் முழுதும் நிரம்பப் பெற்ற நாவல் பாக்கத்தின் இப்பொழுதைய நிலையைப் பார்ப்போம். பல ஆஸ்திகர்கள் தமது ஜீவனத்துக்குக் குடும்பத்துடன் சென்னை முதலிய பல இடங்களுக்குச் சென்று வாழ வேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டது. தானியங்கள் மிகுதியாக விளையும் பெருநிலத்தில் பகவதாராதநத்துக்கு வேண்டிய அளவுக்கு விளைவு தரும் நிலமே போதுமென்ற மனப்பாங்குடைமையை ஸ்ரீ. தேசிகன் புகழ்ந்து பேசிய முறையில் அந்த மனவமைதியுடன் வாழ்வதற்குக் கூட இப்பொழுது இங்கு வாய்ப்பு இல்லாமையால் பல ஆஸ்திகர்கள் ஸ்ரீநிவாஸப் பெருமானைப் பிரிநது வெளியூரில் வஸிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. அவர்கள் விசேஷ உத்ஸவம் முதலிய காலங்களில் தவறாமல் வந்து தன கைங்கர்யத்தில் தங்கள் பங்கு

கொள்வதைக் கொண்டு ஸ்ரீநிவாஸப்பெருமான் திருவுள்ளம் உகக்கின்றான்.

11. இப்பொழுதைய இரண்டு மஹான்கள்

இப்பொழுது நாவல்பாக்கத்தில் எம்பெருமான் இரண்டு மஹாநுபாவர்களைக் கணமும் பிரியாது தனது பரிபூர்ண அநுபவத்தை அவர்களுக்குக் கொடுததுத் தானும் அவர்களின் ஈடுபாட்டுக்கும் கைங்கர்யத்துக்கும் இலக்காகி நிற்கின்றான். கொத்திமங்கலம் ஸ்ரீ நாராயணார்ய மஹா தேசிகன் என்னும் மஹான் வேத வேதாங்கங்களிலே ப்ரதிஷ்டிதராய், உபயவேதாந்தங்களில் எல்லையற்ற ஜ்ஞாந ஸம்பந்நராய், பரம புருஷனுக்கு ஆராதநரூபமாக யஜ்ஞங்களையும் அநுஷ்டித்துக் குல தெய்வமான ஸ்ரீநிவாஸனுக்கு முக்கருவிகளாலும் கைங்கர்யம் செய்து கொண்டு பரமைகாந்திகளுக்கு எடுத்துக் காட்டாய்ப் பிரகாசிக் கின்றார். சில ஆண்டுகட்கு முன் சதாபிஷேக மஹோத்ஸவம் கண்டருளி ஸகல ஆஸ்திகர்களுக்கும் பஹுமதி பாத்ரமாய் விளங்குகின்றார்.

மற்றொரு மஹானே நம் அய்யா ஸ்ரீ தேவநாதார்ய மஹாதேசிகன். இவரது பெருமையை விளககி அடியேன் தன்யனாக வேணடியுள்ளேன்.

12. அய்யா ஸ்வாமியின் பிதாமஹர்

நாவல் பாக்கத்தில் ஸ்ரீ வேங்கடதாதாசார்யர் என்னும் ஸ்வாமி ப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்தார். இந்த ஸ்வாமி வேதபாரங்கதராய் ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ரங்களிலும் மஹா ஜ்ஞாதாவாய் விளங்கியதுடன் கவிதா மார்க்கத்திலும் ஸ்வதந்த்ர ஸஞ்சாரம் செய்து அற்புதமான கவிகளை இயற்றுமவராய் ப்ரகாசித்தது இவரது தனிச் சிறப்பு. இந்த ஸ்வாமியின் ஜ்ஞாநத்திலும் ஆத்ம குணத்திலும் ஈடுபட்டு அப்பொழுது ஆரணி ஜாகீர் ஸம்ஸ்தாநாதிபதி இந்த ஸ்வாமியைப் பிரார்த்தித்து எழுந்தருளப் பண்ணிக் கொண்டு போய்த் தன் ஆஸ்தாந வித்வானுக்கிப் பெருமையடைந்தார். ஸ்வாமி எழுந்தருளியதாலேயே தம் ஆஸ்தாந நிர்வாஹம் சீரும் சிறப்பும் பெற்று விளங்கியதென்ற முழு நம்பிக்கையோடு அவ்வதிபதி ஸ்வாமியை மிக ஆதரித்து வந்தார். இவரே நம் அய்யா ஸ்வாமியின் பிதாமஹராவார்.

13. அய்யா ஸ்வாமியின் திருத்தகப்பனார்

இந்த மஹானுக்குத் திருக்குமாரராய் அவதரித்தவர் ஸ்ரீ நரஸிம்ஹதாத தேசிகன். இவர் தீபத்தினின்று தோன்றிய ப்ரதீபம் போல் எல்லா அம்சங்களிலும் தம் திருத்தகப்பனாரை அதிசயித்தவராகவே வாழ்ந்து ஆசார்யகம் செய்து வந்தார். திருவயிந்தையில் அடியவர்க்கு மெய்யனுக்கு இந்த ஸ்வாமியைத் தனது இடத்துக்கு வந்து வாழச் செய்து பல காலம் தனது அநுபவத்தைக் கொடுக்க வேண்டு மென்ற ஆசை எழுந்தது. முன்பு அமுதனது ஆசைக்கு இடம் தந்து ஸ்ரீநிவாஸப்பெருமான் பல குடும்பங்களை அங்கேயே சாச்வதமாய் வாழும் படி அநுமதிக்க வில்லையா? அவ்வாறே ஸ்ரீநிவாஸன் இப்பொழுது ஸ்ரீ நரஸிம்ஹதாதார்ய மஹாதேசிகனையும் திருவயிந்தைக்குச் செல்ல நியமநம் தந்தருளினான். ஸ்வாமியும் திருவயிந்திரபுரத்தில் வெகு காலம் தெய்வநாயகனையும் தேசிகனையும் அநுபவித்து அங்கேயே ஆசார்யகம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தார். மஹா மஹோபாத்யாய பகவத் விஷயம் ஸ்ரீ சேட்டலூர் ஸ்வாமி — மஹாமஹோ பாத்யாய ஸ்ரீ கொடவாசல் ஸ்வாமி - ஓரத்தி ஸ்ரீ கண்டாவதாராசார்யர் ஸ்வாமி — வேலாமூர் ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி முதலிய பல பெரியோர்கள் இந்த ஸ்வாமியிடம் ஸாமாந்ய சாஸ்த்ரங்களை அதிகரித்ததாய்க் கேள்வி.

14. தெய்வநாயகன் ஸங்கல்பமும் தேவநாதன் அவதாரமும்

நாவல்பாக்கத்து எம்பெருமான் பற்பல மஹான்களைத் தனது இடத்தில் அவதரிப்பித்துப் பெருமை பெற்றதுபோல் அடியவர்க்கு மெய்யனுக்கும் தன் திருவடி நிழலில் அதே ஸந்ததியில் ஓர் அற்புத வ்யக்தியைத் தோன்றச்செய்து தன் திருநாமத்தையும் இட்டு முன்னோர்களான மஹான்களின் பெருமைகளெல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற ஓர் ஆசார்யனாகச் செய்தருளவேண்டுமென்று ஒரு திவ்ய ஸங்கல்பம் உதித்தது. நரஸிம்ஹதாத ஸ்வாமியின் அருந்தவப் பயனாய்த் தோன்றியது ஓர் அற்புதக் குழந்தை. தெய்வநாயகன் அந்தக் குழந்தையைத் தேவநாதனாக்கினான். அங்குள்ள பெரியோர்கள் குழந்தையின் முகத்தில் தெய்வீக ஒளியைக் கண்டு வாழ்த்தினார்கள். பரம வைதிக ஸந்ததியில் ஒரு மஹாநுபாவருக்குப் பிறந்த குழந்தைக்குச் சாஸ்த்ரவிதிப்படி மங்கள ஸம்ஸ்காரங்கள் செய்விப்பதைக் கூறவும் வேண்டுமோ?

15. விஜ்ஞாந ஸம்பாதநம்

குலமுறைப்படி முதலில் வேதாத்யயநத்தைத் திருத்தகப்பனார் பரிபூர்ணமாய்ச் செய்வித்துக் காவ்ய நாடகாலங்காராதிகளையும் செவ்வனே புதல்வனுக்குப்போதித்தருளினார். க்ருஹஸ்தாச்ரம நிஷ்டர்களாலேயே பெரும்பான்மையாக நடந்துவரும் இந்த ஆசார்ய பரம்பரையில் ஸ்ரீநரசிம்ஹதாத ஸ்வாமி இரண்டாவது யதியாக ஸந்ந்யாஸாச்ரமத்தை ஸ்வீகரிக்க, அதனைப் பொறுக்காத சரண்யன் மூன்று மாதங்களுக்குள்ளேயே இந்த ஸ்வாமியைத் தானே ஸ்வீகரித்துக்கொண்டு விட்டான். திருத்தகப்பனாரைப் பிரிந்த தேவநாத ஸ்வாமி பெருமாள் கோயிலில் ஜ்ஞாநவைராக்யாநுஷ்டாந நிதியாய் ஸர்வஜ்ஞராய் ஆசார்யகம் செய்து கொண்டிருந்த நாவல்பாக்கம் ஸ்ரீந்ருஸிம்ஹார்ய மஹாதேசிகன் ஸந்நிதியில் தர்க்கமீமாம்ஸா சாஸ்த்ரங்களைப் பரிபூர்ணமாய் அப்யஸித்து மஹாமேதாவியாய் விளங்கினார். இப்படி ஸாமாந்ய சாஸ்த்ரங்களில் விசேஷ ஜ்ஞாநம் பெற்றது வேதாந்த சாஸ்த்ரத்தில் ஸ்வாமி பரிநிஷ்டிதராவதற்கு உதவி புரிந்தது. அந்த ஸ்வாமி ஸந்நிதியிலேயே க்ரந்த சதுஷ்டயத்தையும் காலக்ஷேபம் செய்து விசேஷமான தேர்ச்சி பெற்றார். இயற்கையாய் எம்பெருமான் அருளிய மேதா விலாஸத்துடன் தமக்கு ஜ்ஞாநோபதேசம் செய்த ஆசார்யனிடம் ஸ்வாமி கொண்ட பரமபக்தியும் வேதாந்த ஜ்ஞானத்தில் ஒப்பற்று நின்றமைக்கு உதவி புரிந்தது. அய்யா ஸ்வாமி தமது அவதாரத்துக்குக் காரணமாயிருந்த அடியவர்க்கு மெய்யனிடம் நியமநம் பெற்றுத் தம் முன்னோர்கள் பரம்பரையாய் வாழ்ந்த நாவல்பாக்கத்தில் மட்டும் நடமாடும் தெய்வமாகக் காட்சியளித்துக்கொண்டு க்ருஹஸ்த்த தர்மத்தைச் செவ்வனே நடத்தி வருகின்றார்.

16. ஐயா ஸ்வாமியின் தினசரி வாழ்க்கை

ஸ்வாமி திருக்குடந்தை தேசிகன் ஆஹ்நிகத்தையே தம் ஆசார அநுஷ்டாநாதிகளுக்கு முதன்மையான ப்ரமாணமாகக் கொண்டு அதன்படியே சிறிதும் வழுவாது நடந்து வருகின்றார். கௌதமர் முதலிய தர்ம சாஸ்த்ரகாரர்கள் நான்கு ஆச்ரமங்களுக்குள் க்ருஹஸ்தாச்ரமத்தைச் சிறந்ததாககூறி மற்ற ஆச்ரமத்தினர் அனைவருக்கும் உதவிபுரிதற்கு வாய்ப்புள்ளமையை அச்சிறப்புக்குக் காரணமாகக் கூறியுள்ளனர். ஸ்ரீதேசிகன் முதலிய பல ஆசார்யர்கள் கொண்டிருந்த திருவுள்ளப்பாங்கையே நம் ஐயா ஸ்வாமியும் கொண்டு தம் ஆசார்யன் சென்ற வழியையே பின்பற்றி இரண்டாவது ஆச்ரமத்திலேயே ஸ்வதர்மங்களை வழுவாது அநுஷ்டித்து வருகின்றார். ஸ்வாமியின் தினந்தோறும் உள்ள சர்யையை ஒரு நாள் முழுதும் கவனித்தால் அந்த ஆஹ்நிகத்தின் நடைமுறையை நன்றாய்க் கண்கூடாகக் காணலாம். பல ஆண்டுகளில்

அடியேன் நாவல்பாக்கம் ப்ரஹ்மோத்ஸவத்தில் அருளிச்செயல் கோஷ்டியிலும் வித்வத் ஸதஸ்ஸிலும் அந்வயிக்கும் பாக்கியம் பெற்றுள்ளேன். அந்த ஸமயங்களில் மட்டும் ஐயா ஸ்வாமியை ஸேவித்து நெருங்கிப் பழகும் பாக்யம் கிட்டியதுண்டு. 'நான்கு சுவருக்குள் வாழ்வது' என்று உலகியலில் கூறுவது போல் பல மஹான்கள் வாழ்ந்து வந்த இந்த ஸ்ரீகிராமத்தையும் இதில் உறையும் ஸ்ரீநிவாஸனையு மன்றி வேறு எதையும் சிந்தையில் கொள்ளாத புனித வாழ்க்கையை ஐயா ஸ்வாமி கொண்டுள்ளமையை நேரில் கண்டுவியந்தேன். தாம் பெற்ற ஸாமாந்ய சாஸ்த்ர ஜ்ஞாநத்தையும் வேதாந்த ஜ்ஞாந ஸம்பத்தையும் தம்மிடம் வரும் பல சிஷ்யர்களுக்கு அநுக்ரஹித்துக் கொண்டு எங்கும் யாரிடமும் எப்பயனையும் பெருது ஸ்வரூபாநுரூபமான பகவத் கைங்கர்யமென்ற உணர்ச்சியோடு ஸ்வாமி வாழ்ந்து வருவது மற்ற இடங்களில் எளிதில் காண முடியாத அம்சமாகும்.

நம் ஸ்வாமிக்கு ப்ரவசந சாதுர்யம் தவிர க்ரந்த நிர்மாண நைபுண்யத்தையும் சரண்யன் நன்கு அளித்துள்ளான். வேதாந்தத்திலும் ப்ராசீநதர்க்கத்திலும் நவீநதர்க்கத்திலும் ஆராய்ச்சி வடிவிலும் உரையுருவிலும் பல சிறந்த கிரந்தங்களை ஸ்வாமி இயற்றியுள்ளார். அவை யாவன. ஸூத்ராநு குண்ய ஸித்தி நிர்ணயம் — ப்ராசீந பாட பரித்ராணம் — சத பூஷணி கண்டநம் - குஸுமாஞ்ஜலி வியாக்கியாநம் — பஞ்சலக்ஷணீ வியாக்கியானம் முதலியன. இவை அச்சேறினுல் உலகுக்கு உபகாரமாயிருக்கும். இந்த உத்ஸவக் கமிட்டியார் இவற்றை அச்சிட்டு வெளியிட முயற்சி கொண்டுள்ள தாய் அறிந்து மகிழ்கின்றோம்.

17. ஸ்ரீ கிராமத்தில் ஸ்ரீநிவாஸனது நித்ய ஸாந்நித்யம்

ஒரு ஸந்நிதியில் அர்ச்சாவதாரப் பெருமான் நித்ய ஸாந்நித்யம் செய்தருள்வதற்கு மூன்று காரணங்கள் கூறப்பட்டுள்ளன. (1) ஆராதகர் ஆசார சீலராய்க் கர்மங்களைச் செவ்வனே அநுஷ்டித்தல். (2) திருவாராதனம் அந்தந்த ஆகமமுறை வழுவாது நேரிய முறையில் நடத்தல். (3) அர்ச்சைத் திருமேனியின் ஸௌந்தர்யம். இந்த மூன்று அம்சங்களையும் நாவல் பாக்கம் ஸந்நிதியில் பரிபூர்ணமாகக் காணலாம். விளக்கம் வருமாறு—

(1) ஆராதகர் வைகாநஸ குலத்தைச் சார்ந்தவர். வைகாநஸ ஆகமத்துக்கும் ஸ்ரீ பாஞ்சராத்ரம் போன்ற பெருமையுண்டென்றும் வைகாநஸர்கள் அநாதியான ஸ்ரீ வைஷ்ணவர்களாய் வம்சபரம்பரையாய் வேதாத்யயநம் செய்து கொண்டு வர்ணாச்ரம தர்மங்களை வழுவாது நடத்துபவர்களாய் எம்பெருமானையன்றி வேறு தெய்வத்தைச் சிந்தியாதவர்களாய் விளங்குவதாக ஸ்ரீ ந்யாய பரிசுத்தியில் ஸ்ரீ தேசிகன் போற்றியுள்ளார். அவர்களுக்குள்ளேயே பஞ்சஸம்ஸ்காரம் வேண்டுமென்றும் வேண்டாமென்றும் ப்ரபத்தியின் வடிவுவேறெனறும் பல விவாதங்கள் வந்து அநுஷ்டாநததிலும் சில வேறுபாடுகள் இருப்பதைப் பற்றி நாம் பேச வேண்டிய அவசியமில்லை. நாவல் பாக்கத்தில் ஆராதகராயிருக்கும் ஸ்வாமி பஞ்சஸம்ஸ்காரத்தைப் பெற்று, பரந்யாஸத்தையும் அநுஷ்டிக்கப் பெறறவர் என்னும் அம்சம் அநத ஸந்நிதியின் பாக்ய விசேஷம். வைகாநஸர்களில் த்வாதச ஊர்த்வ புண்ட்ரங்களுடன் பகவதாராதநம் செய்பவர்களைக் காண்பது அரிது. இந்த ஆராதகரோ ஆசார்ய ஸம்பந்தம் பெற்றுப் பரம வைதிகத் தோற்றத்துடன் மஹா பக்தியுடன் கைங்கர்

யங்களை நடத்தி வருகின்றார். வழக்கமான சில உலக முறைகளைக் கூடப் புறக்கணித்து ஐயா ஸ்வாமிக்கு உபசார மர்யாதைகள் செய்த பின்வே தாம் ஏற்றுக் கொள்வது அர்ச்சகரின் ஸ்வரூப ஜ்ஞாநத்தையும் ஆத்ம குணத்தையும் காட்டுகின்றது (2) இத் தசைய அர்ச்சகர் செய்யும் திருவாராதநம் முதலிய கைங்கர்யங்கள் கௌண பக்ஷத்துக் குச் சிறிதும் இடமின்றி முக்கிய முறைபி லேயே நடந்து வருவதில் ஸ்ரீநிவாஸப் பெரு மானுக்குப் பெருமிதம் பொங்குகின்றது. (3) ஸ்ரீநிவாஸனது திருமேனி அமைந்துள்ள அழகைப் பற்றி அடியேன் எழுதுவது அநாவ சியம். குளிர்ந்த திருக்கண்களுடன் மந்த ஹாஸம் தவழ எதிர்சூழல்புக்கு அருள் செய் யப் பாரிப்பது போல் ஸேவை தரும் சிறப்பு காண்பவர்களைப் பரவசமாக்கும். இந்த மூன்று அம்சங்களும் செவ்வனே பொருந்தி யுள்ள இந்தத் திருக்கோயிலில் ஸ்ரீநிவாஸன் பரிபூர்ணமாய் ஸாந்நித்யம் செய்வதில் ஐய முணடோ? மேலும் தன்னை அநவரதம் அநு பவிக்கும் ஐயா ஸ்வாமியைப் பிரிந்து ஸ்ரீநிவாஸன் எவ்வாறு அகல முடியும்?

18. ஐயா ஸ்வாமியின் அமைதி வாழ்க்கை

ஸ்ரீதேசிகன், ஆஹாரம்-பொருள் சேர்த் தல் முதலியவற்றில் வரையறையுடன் எம் பெருமான் கைங்கர்யத்தை வேறுபயனை நாடாது செய்யவேண்டுமென்றும் ஆசார சீலனைக் காட்டிலும் ஆத்ம குணம் நிரம்பிய வனும் அவனிலும் பகவத்பக்தி மிக்கவனும் அவனினும் வேறுபயனை நாடாதவனும் மேம் பட்டவன் என்றும் சாஸ்த்ரங்களைக்கொண்டு போதித்த வாழ்க்கையை நம் ஐயா ஸ்வாமி கைக்கொண்டு ஓர் உதாஹரண புருஷராய் வாழ்வது நம் பாக்ய விசேஷம் சாஸ்த்ரங்களை அதிகரித்து முடித்தபின் வெகுகாலத்துக்கு முன் மைசூர் ராஜ ஸபையில பரீக்ஷை கொடுத்து உத்தமஸம்பாவனையைப் பெற் றது, புதுக்கோட்டை திருக்குடந்தை முதலிய ஸதஸ்ஸுக்களில் பரீக்ஷகராயிருந்து விசேஷ கௌரவத்தைப் பெற்றது - ஆகியவையெல் லாம் இப்பொழுது ஸ்வாமிககு நினைவில் இருக்குமாவென்று கூடச் சங்கிக்கும்படி பிந்திய வாழ்வு ஸ்வாமிக்கு அமைந்தது சரண்யனது ஸங்கல்பம். ஸ்ரீநிவாஸன் ஸ்வா மிக்கு ஒரு குமாரனை முதலில் அருளினான். பின் தன்னைப் பரிபூர்ணமாக அனுபவிப்பதற் குத் தடையாக ஸ்வாமிக்கு ஸம்ஸார பந் தத்தை வைக்கலாகாதென்ற திருவுள்ளத் தாலோ என்னவோ அந்த ஸந்ததியைப் பறித்துக்கொண்டான். அதனால் சிறிதும் கலங்காத ஸ்வாமி அவனது உடைமையான ஜீவனை அவனே அழைத்துக்கொண்டான் என்று எண்ணி மனவமைதியோடு எழுந் தருளியுள்ளார்.

19. ஸ்வாமியின் வைராக்யம்

க்ருஹஸ்தன் நீதியான வழியில் பொருளை ஈட்டி அதைக்கொண்டு ஜீவனத்தை நடத் தலாமெனச் சாஸ்த்ரம் கூறுகின்றது. ஸ்ரீகிராமத்தை விட்டு அகலாது, த்ரவ்யம் பெறுதற்கு உரிய நியாயமான வழிகளைக் கூடப் புறக்கணித்து, ஆஸ்திகர்கள் கொண்டுவந்து ஸமர்ப்பிக்கும் பொருளையும் ஏற்றுக்கொள்ளாமல், முன்னோர்கள் வைத்த போதிய செல்வமும் இனறி ஐயாஸ்வாமியின் பகவதாராதநம்-அதிதிஸத்காரம் முதலியன எப்படி நடக்கின்றன வென்பது நமக்குப் புலப் படாத விஷயம். 'பரமைகாந்திகளின் வாழ்க் கைப் பொறுப்பை என் தலையால் சுமப்பேன்' என்று முழங்கிய கீதாசார்யனைக் கேட்டால் தெரியலாம் பரம ஸாத்துவிகமான பகவதா ராதந த்ரவ்யங்களை ஆஸ்த்தையோடு ஸ்வா மிக்கு ஸமர்ப்பிக்கப்புகும் சிஷ்யர்களிலும் ஆஸ்திகர்களிலும் இரண்டொருவருக்கு ஸ்வாமி அங்கீகரிக்கும் பாக்யம் கிட்டக் கூடும்.

20. ஸ்வாமி இல்லறத்துறவி

ஐயா ஸ்வாமி க்ருஹஸ்த்தாச்ரமத்திலேயே இருந்து இந்தத் தர்மங்களைச் சிறிதும் வழுவாது நடத்திவந்த போதிலும் ஸ்வாமியின் உள்ளப்பாங்கையும் வாழ்க்கை முறையையும் பார்க்கும்போது துறவறத்தின் பல அம்சங்கள் முன்வந்து நிற்கும். சுவாமியைத் தங்கள் ஊருக்கு எழுந்தருளச்செய்து அங்கேயே ப்ரவசநம்செய்து கொண்டு வாழ்வதற்கு வேண்டிய ஸகல ஸௌகர்யங்களையும் செய்து கொடுத்துத் தமது ஊரைப் புனிதமாக்கிக் கொள்ளவேண்டுமென்று பல தனிகர்கள் விரும்பியதுண்டு. ஸ்வாமி திருவுள்ளம் இசைந்தால் கனகாபிஷேகம் செய்யப் பெற்றிருக்கலாம். ஸ்வாமியின் திருவுள்ளம் ஏற்குமா? ஏகாந்த வாஸத்தைப் பரமபோக்யமாகக் கருதி அவன் கைங்கர்யத்தையே தாரகமாகப் பெற்று ருசிகண்ட ஸ்வாமியின் திருவுள்ளத்துக்கு லௌகிக அம்சங்களெல்லாம் உகப்பை அளிக்கமாட்டா.

21. அர்ச்சா விசேஷத்தில் ஸ்வாமியின் பாரமைகாந்த்ய நிலை

பாண்பெருமாள் 'மற்ற அர்ச்சைத் திருமேனிகளிலும விபவரூபங்களிலும் உள்ள இனிமையையெல்லாம் பெரிய பெருமாள் திருமேனி ஒன்றிலேயே கண்டு அநுபவித்துப் பரவாஸுதேவன் - வ்யூஹரூபம் - விபவத்திருமேனிகள் எல்லாவற்றையும் நேரில் காட்டினாலும் தமக்கு ருசிக்கமாட்டா? என்று கொண்ட பிடிவாதக்கொள்கையை ஸ்ரீதேசிகன் ரஹஸ்யத்தில் விளக்கியருளினார். நம் ஐயா ஸ்வாமியும் அவ்வாறே நாவலபாக்கம் ஸ்ரீநிவாஸப்பெருமான் திருமேனியிலேயே கோயில்-திருமலை-பெருமாள் கோயில் எம்பெருமான்களின் போக்யதையெல்லாம் கண்டு இதிலேயே முழுமனநிறைவும் கொண்டு விளங்குகின்றார். ஒருகால் எப்பொழுதாவது வேறு அர்ச்சைத் திருமேனியை ஸேவிக்கும் வாய்ப்பு ஏற்படினும் அந்தத் திருமேனியையும் ஸ்ரீநிவாஸப்பெருமானாகவே கண்டு அநுபவிக்கும் திருவுள்ளப்போக்கு வியத்தற்கு உரித்து. இப்பெருமானையன்றி ஸ்வாமியும் ஸ்வாமியையன்றி இப்பெருமானும் தரித்து நிற்கமாட்டாத நிலை உருவாகி விட்டதென்னுதல் மிகையாகாது. அத்தகைய பரமபக்தி ஸ்வாமிக்கு! இத்தகைய பேரன்பு அவனுக்கு!

22 முன்னோர்களின் கனவு ஸ்வாமியால் நனவாதல்

மஹாபரமைகாந்திகளான முன்னோர்கள் பலர் இந்த எம்பெருமானிடம் எல்லையற்ற பக்தியுடன் இவனுக்குப் பல விபவங்களைப் பெருக்கித் தாமும் கண்டு மகிழ ஆசைப்பட்டனர். அவர்கள் விரும்பிய விபவங்களையெல்லாம் ஐயா ஸ்வாமியின் புருஷகாரத்தாலேயே பெறவேண்டுமென்று ஸ்ரீநிவாஸப்பெருமான் கருதினான் போலும்! பல பரமைகாந்திகள் சில கைங்கர்யங்களைச் செய்யப் பாரித்தாலும் சில வ்பக்தி விசேஷங்களின் வாயிலாக அவற்றைப் பெறுவதில் எம்பெருமானுக்கு நோக்கு ஆகவே முன்னோர்கள் ஆசைப்பட்ட விபவங்களையெல்லாம் இப்பொழுது ஐயா ஸ்வாமியின் வழியாகப் பெற்று மகிழ்கின்றான் ஸ்ரீநிவாஸப்பெருமான்.

23. ராஜகோபுர நிர்மாணம்

இவ்வெம்பெருமான் ஸந்நிதிக்கு ஏற்ற ராஜகோபுரம இல்லையே என்று முன்னோர்கள் குறைப்பட்டதுண்டு. எம்பெருமானுக்கும் அதில் ஆசை உண்டு. அவன தானே அமைத்துக் கொள்வது சிறக்குமா? மனித முயற்சியில அது எளிதில் நடக்கிறகாரியமா? ஐயா ஸ்வாமியின் உள்ளத்துப் புகுந்து தன் ஸங்கல்பத்தை ஸ்வாமியின் மனோரத வடிவாக்கினான். இதை அறிந்தனர் பல பாக்யவான்கள். அற்புதமான ராஜகோபுரம் விச்வகர்ம ஸ்ருஷ்டியோ என்னும்படி மிக விரைவில் உருவாகி அற்புதக் காட்சியளிக்கின்

றது. இதற்காக ஸ்வாமி வெளியே எழுந்தருளிப் பலரிடம் பிரஸ்தாவிக்க வேண்டுமோ! இருந்த விடத்திலே ஸ்வாமி மனோரதித்தால் ஈடேற்றுகின்றனர். இன்று அவ்வூர் சென்று கோபுரத்தைக் கண்டு களியுங்கள்.

24. திருத்தேர் அமைதல்

ஸ்வாமியின் மனோரதம் மறுபடியும் செல்லுகின்றது. ஒரு ப்ரஹ்ம உத்ஸவம் பூர்த்தியாகும் போது அவபிருதத்துக்கு முன் பெருமாள் திருத்தேரில் எழுந்தருளித் திருவீதியை அலங்கரிப்பதை மிக முக்கியமாகக் கூறுகின்றன ஆகமங்கள். இதற்காக ஸ்வாமி ஏதாவது தனி முயற்சி கொள்ள வேண்டுமா? ஸ்வாமி ஸங்கல்பித்தால் எம்பெருமான் உடனே அதற்கு அநுகுணமாகத் தானும் ஸங்கல்பித்து விடுகின்றான். அல்லது அவன் ஸங்கல்பமே ஐயா ஸ்வாமியின் மனோரதமாக வடிவு கொள்கின்றது. ஸ்ரீநிவாஸன் அழகிய திருத்தேரைத் தன் முன்னே கொண்டு வந்து நிறுத்தி ஸ்வாமியின் நோக்குக்கு இலக்காக்கித் தானும் மன நிறைவு பெறுகின்றான். இப்படி ஒவ்வொன்றும் ஸ்வாமியின் திருவுள்ளத்தாலேயே உருவாகின்றது.

25. திருப்பவித்ர உத்ஸவம்

ஸந்நிதிகளில் அவ்வப்போது உரிய உத்ஸவங்கள் நடைபெறுவது எம்பெருமான் ஸாநித்யத்துக்கு இன்றியமையாததாகும். திருவாராதனம் தொடங்கி ஆண்டு முழுதும் நடக்கக் கூடிய வைதிக கார்யங்களுக்கு மந்திரங்களிலோ தந்திரங்களிலோ ஏற்படும் குறைகளுக் கெல்லாம் பிராயச் சித்தமாகத் திருப்பவித்திர உத்ஸவத்தை விதித்துள்ளன சாஸ்த்ரங்கள். பவித்ர உத்ஸவத்தில் வேத பாராயணமும் அருளிச் செயல் கோஷ்டியும் மிக முக்கியமான அம்சங்களாகும். நாவல்பாக்கம் உத்ஸவங்களில் வேதத்துக்குப் பஞ்சம் உண்டோ? ஜீவனத்திற்காக வெளியூரில் குடியேறிய வைதிக ச்ரேஷ்டர்கள் கூட இந்தப் பவித்ர உத்ஸவத்துக்குத் தவறாது வந்து பாராயண கைங்கர்யத்தைச் செவ்வனே நிறைவேற்றித் தம் கடமையைச் செய்த திருப்தி பெறுகின்றனர். பல்லாண்டுகளாக அருளிச் செயலுக்கும் முக்கிய இடம் கொடுத்து அதனையும் ஸ்ரீநிவாஸன் திருச் செவிசாத்தித் திருவுள்ளம் உகக்கின்றான். இந்த உத்ஸவம் இத்துணைச் சிறப்புடன் பரமவைதிக முறையில் அவன் கண்டருள்வதற்கு முக்கிய காரணம் யார்? நம் ஐபா ஸ்வாமியே தாம். ஸ்வாமி முழுதும் கூடவே இருந்து உத்ஸவத்தை நன்கு நிர்வஹித்து வெற்றி காணும் சீர்மையை உடன் இருந்து அநுபவிப்பவரே அறிவர்.

26. வஸந்த உத்ஸவம்

வேனிற் காலத்தில் கதிரவன தன் முழுச் சக்தியையும் மக்கள் விஷயத்தில் பயன் படுத்தி வாட்டுகின்றான். வெப்பம் பொறுக்க முடியாததாகின்றது. அப்பொழுது ப்ராக்ருதமான நம் சரீரம் எத்துணைக் கஷ்டத்தை அடைகின்றது! எத்தனை சீத உபசாரங்களை எதிர்பார்க்கின்றது! எம்பெருமான் திருமேனிக்கு இத்தகைய சிரமம் சிறிதேனும் உண்டா? அர்ச்சைத் திருமேனியும் அப்ராக்ருதமான சுத்த ஸத்துவமய மென்பதன்றோ சாஸ்த்ரங்கள் கண்ட உண்மை நிலை! ஆயினும் கணவனையும் குழந்தையையும் ஆசார்யனையும் தோழனையும் உபசரிப்பது போல் எம்பெருமானை உபசரிக்கும் படியல்லவோ சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன! அடியார்களுக்கு அர்ச்சைத் திருமேனியில் உள்ள பரிவின மிகுதி அதற்கும் தீங்கை அஞ்சிப் பரிஹாரம் தேடவும் முயலச் செய்யுமே! ப்ரஹ்லாதாழ்வான் மலையினின்று உருண்டு விழும் போது தன் அந்தர்யாமியான பகவானுக்குப் பாறையில் உரைதலால் நோவு வருமோ என்று அஞ்சித் தன் கையால்

அவனைத் தாங்கிக் கொள்ள வில்லையா? எம்பெருமான் அடியார்களின் பக்திக்குத் தலைகுனிந்து அவர்களின் பரிவு வெள்ளத்துக்கு வடிகால் விடுவதற்காகச் சில சமயங்களில் தன் அர்ச்சைத் திருமேனிகளில் கூடச் சில சிரமங்களைத் தானாக ஏறிட்டுக் கொள்கின்றான். நாற்பது ஆண்டுகட்கு முன் பங்குனி மாதத்திய ப்ரஹ்மோத்ஸவத்தில் எங்கள் திருவிண்ணகரப்பன் இரண்டு மைலில் உள்ள கிராமத்துக்கு எழுந்தருளிப் பகல் ஒரு மணிக்குத் திரும்பி ஸந்நிதிக்கு எழுந்தருளியவுடன் திருமுகமண்டலம் முழுதும் முத்து முத்தாகப் பல வேர்வைத்துளிகள் அரும்பி யுள்ளதைக் கண்டு பக்தி பரவசரான அர்ச்சகர் கண்ணீர் பெருக்கி உடனே சீத உபசாரங்கள் செய்ததை அடியேன் நேரில் கண்டு வியந்தேன். இப்படியே பல அர்ச்சைத் திருமேனிகளும் உலகமுறையில் தாங்களும் சிரமத்தைக் காட்டி அடியார்களின் உள்ளத்தை உருக்குவதுண்டு.

நாவல்பாக்கத்தில் ஸ்ரீநிவாஸப் பெருமான் வேனிற் காலத்தில் வஸந்த உத்ஸவம் கண்டருளிச் சீதள உபசாரங்களை ஏற்றுத் திருவுள்ளம் உகப்பதைக் கண்டுதாமும் மகிழ்ச்சி பெற முன்னோர்கள் விரும்பினர். அப்பொழுதைய சூழ் நிலையில் அப்பெரியோர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லாது போயிற்று. பரமபாகவதர்களின் மனோரதம் வீண் போகுமா! இப்பொழுது வேனிற் பருவந் தோறும் ஐபா ஸ்வாமியின் புருஷகாரத்தால் எம்பெருமான் வஸந்த உத்ஸவத்தைத் திருநந்தனவனத்தில் கண்டருளித்தான் உகந்து ஸ்வாமியையும் பரிபூர்ணமாய் மகிழ்விக்கின்றான். இப்படி முன்னோர்களின் கனவு ஸ்வாமியின் முயற்சியால் ஒவ்வொன்றாய் நனவாகின்றது.

27. ப்ரஹ்மோத்ஸவம்

அர்ச்சைத் திருமேனிகள் எழுந்தருளியுள்ள பல ஸந்நிதிகளிலும் ஆண்டுதோறும் ஒன்று அல்லது இரண்டு ப்ரஹ்மோத்ஸவங்கள் நடப்பதுண்டு. செல்வக் குறைவுள்ள சிறிய ஸந்நிதிகளில் நடக்கும் உத்ஸவங்களைப்பற்றி நாம் விளக்கவேண்டியதில்லை. செல்வச் செழிப்புள்ள பல பெரிய ஸந்நிதிகள் வைதிகமான அம்சங்களுக்குத் தீர்த்தம் சேர்த்து விட்டு உத்ஸவமென்ற பெயரில் மிகுதியான பொருளை வாரி இறைத்து இன்னிசை-நாட்டியம்-நடனம்-கவியரங்கு-பட்டிமன்றம் என்று சொல்லிக்கொண்டு ஆடம்பரமான அம்சங்களை நடத்திக்கொள்ளுகின்றன. சிறுபான்மையான ஸந்நிதிகளில் மட்டும் ப்ரஹ்மோத்ஸவம் கூடியவரை வைதிக முறையில் நடத்தப்படுவது போற்றுதற்கு உரியதே.

அன்பர்களே! பாகவதர்களே! நீங்கள் நாவல்பாக்கத்தில் ஸ்ரீநிவாஸன் கண்டருளும் ப்ரஹ்மோத்ஸவத்தை ஸேவித்திருக்கிறீர்களா? இல்லையேல் பிங்களவருஷம் சித்திரை மாதம் நடக்கப்போகும் ப்ரஹ்மோத்ஸவத்தை ஸேவித்து மகிழுங்கள். இந்த உத்ஸவம் பரமவைதிக முறையில் நடப்பதற்கு முக்கிய புருஷர் ஐபா ஸ்வாமியே என்பதைக் கண்ணால் காண்பீர்கள்.

இவ்வூர் ப்ரஹ்மோத்ஸவம் முழுதையும் ஓர் ஆண்டிலாவது அனுபவித்து இன்பமுறுவது அவசியம். அடியேன் பல ஆண்டுகள் அந்த ஆனந்தாநுபவத்தைப் பெற்றிருக்கின்றேன். அடியேன் கண்ட முறையில் சற்று அவ்வுத்ஸவத்தைப் பற்றி விளக்குகின்றேன். திருவேங்கடமுடையான் ஏகாந்த வாஸத்தை விரும்பி இவ்வூருக்கு எழுந்தருளிய போதிலும் ப்ரஹ்மோத்ஸவ காலத்தில் நடக்கும் வைபவங்களைக் காண ஆஸ்திக ஜனங்கள் ஆயிரக்கணக்கில் கூடுவார்கள். பேரருளாளன் உத்ஸவத்திற் போன்ற வைபவங்களைப் பின்

னும் மிக்க வைதிக முறையில் காணும்போது அந்த உத்ஸவத்தின் பிரதிபிம்பமோ என்று கூடத்தோன்றும். பல வாஹனங்கள் பேரருளாளன் வாஹனங்களினும் பெரிய வடிவு கொண்டு காட்சி தருகின்றன. கருடோத்ஸவத்தன்று பெரிய கோலாஹலம்! கச்சி கருடோத்ஸவத்துக்கு வருவது போலவே வெளியூர்கள் பலவற்றிலிருந்து ஜனக்கூட்டம் திரண்டு வந்து கொண்டேயிருக்கும். அன்று நடக்கும் விசேஷ வாணக்காட்சிகளைக் காணும் போது பேரருளாளனுக்கும் ஸ்ரீநிவாஸனுக்கும் போட்டி யிருப்பதாகக் கூடத்தோன்றும். உத்ஸவத்தில் இரண்டு காலங்களிலும் கம்பீரமாய் ஆனால் சாந்தமான வேத கோஷத்தையும் செவிக்கினிய அருளிச்செயலையும் செவியாரக்கேட்டு மகிழலாம். கருடோத்ஸவத்தன்று பெருமாளுக்கு முன் அருளிச் செயல் கோஷ்டி மிசப் பெரிய வெண்குடை இரண்டின் நிழலில் செல்வது ஓர் அற்புதக் காட்சி. உத்ஸவத்தில் தினந்தோறும் ததீயாராதநத்துககாக நியமிக்கப்பட்ட திருமடைப் பள்ளியாச்சான்கள் அதிசுத்தராய் ஒவ்வொன்றுக்கும் தங்கள் கைகளைசசோதித்துக் கொண்டு மஹாநஸ கைங்கர்யங்களைச் செய்வதும் ஸகல பதார்த்தங்களும் ஸ்ரீநிவாஸன் அமுது செய்த பின்பே பயன்படுவதும் பாகவதர்களுக்குப் பரிமாறுபவர்கள் ஸ்ரீபாஷ்யாதிகாரிகளாக அமைவதும் வெளியில் எளிதில் காணமுடியாத விசேஷாம்சங்கள். கருடோத்ஸவத்தன்று நள்ளிரவில் கங்கை கொண்டான் மண்டபத்துக்கு அருகில் பெருமாள் வாணககாட்சி கண்டருளும் ஸமயத்தில் ஏறக்குறைய முப்பது ஸ்வாமிகளுக்குமேல் ஐயா ஸ்வாமி தலைமையில் வேதபாராயணம் செய்யும்போது அவ்வினிய ஒலி அமைதியான சூழ்நிலையில் கந்தர்வகானமாய் நம் செவியில் ஏறும். அதிகம் எழுதுவது எதற்கு? ஓர் ஆண்டாவது நேரில் சென்று ஸேவித்துத் தங்யர்களாக முயலுங்கள. இத்தகைய விபவங்களுடன் உத்ஸவம் நடப்பதற்கு மூல காரணமான மஹாபுருஷர் ஐயா ஸ்வாமியே என்பதை அனைவரும் அறிவர். உத்ஸவத்தில் கைங்கர்யம் செய்ய வரும் ஸ்வாமிகளை ஒவ்வொருவராய்ப் பரமப்ரீதியுடன் கவனித்து அவரவர்க்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து கொடுக்கும்படி பிறருக்கு நியமித்து நிர்வஹிக்கும் பொறுப்பும் ஸ்வாமிக்கு உள்ளது. எந்தக் காரியத்திலும் ஸ்வாமியின் நியமநம் பெற்றே நடத்துவது தான் நிர்வாஹத்தில் இந்த ஸந்நிதி முன்னணியில் நிற்பதற்கு முதற்காரணமாகும். நித்யவிபூதியில் பரவாஸுதேவனோடு வாழும் முன்னோர்கள் அனைவரும் நாவல்பாக்கம் ஸந்நிதி விஷயமாய் முன்பு தாங்கள் கண்ட கனவெல்லாம் ஐயா ஸ்வாமியால் நனவாவதைக் கண்டு களித்து இப்பொழுது இந்த ஸ்வாமிக்குப் பல்லாண்டு பாடுகின்றனர்.

28. வித்வத் ஸதஸ்

நாட்டில் எந்த வைதிக கார்யமோ பொதுத் தருமமோ ஸம்ப்ரதாய ஸபையோ நடந்தாலும் ஒரு மஹானுடைய ஸம்பந்தம் இருந்தே தீரும், அவரது தொடர்பின்றி அவற்றில் வெற்றி காண்பது கடினம். அவர்தாம் கீர்த்தி மூர்த்தியான மாஜி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்ரீமான் V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி, எத்தனை மஹோத்ஸவங்களை, எத்தனை ஸபைகளை, எத்தனை ஸதஸ்ஸுக்களை அவர் முன் நின்று நடத்தியுள்ளார்! அந்த மஹானுடைய உள்ளத்தில் நாவல் பாக்கம் ஆசார்ய பரம்பரையில் முதல்வராய், ஸ்ரீஹயக்ரீவனைத் தமது தவவலிமையால் ஸாக்ஷாத்கரித்த ஸ்ரீ அண்ணயார்ய மஹா தேசிகன் திருநாமத்தைக் கொண்ட ஒரு வித்வத் ஸதஸ் ஏற்படுத்தி அதில் வித்வான்களின் வேதாந்த விசாரம் நடத்த வேண்டுமென்று ஓர் ஆசை எழுந்தது, அதைச் செயல் படுத்த முற்பட்டு நாவல் பாக்கம் வந்து அந்த மஹானுபாவர் ஸ்ரீநிவாஸனுடைய ப்ரஹ்மோத்ஸவத்தில் ஐந்தாவது உத்

ஸவம் தொடங்கி ஏழாவது உத்ஸவம் வரை மூன்று தினங்கள் பல வித்வான்களைக் கூட்டி ஸதஸ்ஸை நடத்திவைத்து ஆனந்தித்தார். முப்பது ஆண்டு கட்கு முன் அந்தப் புண்ய புருஷருடைய கையால் தொடங்கிய அந்த ஸதஸ் ஐயா ஸ்வாமியால் நன்கு வளர்க்கப்பட்டு இன்றளவும் மிகச்சிறப்பாய் நடந்து வருகின்றது. ஸ்வாமி முன் நின்று ஸதஸ்ஸை நடத்தும் போது வித்வான்களுக்கு உத்ஸாஹம் பொங்குகின்றது. ஹஸ்த விசேஷத்துக்குத் தான் எத்தனை சக்தி !

—✻—

With the best compliments of:

★

SRI GOPAL SALES CORPORATION

No. 8, N. V. Iyer, Street,

Nungambakkam, MADRAS-600 034.

Phone: 86491

Dealers in: ELECTRICAL EQUIPMENTS.

நாவல்பாக்கம் ஸ்ரீ உ. வே. திருமலை சதுர்வேத சதக்ரது

அய்யா ஸ்ரீதேவநாத தாதயார்ய மஹாதேசிகன் வைபவம்

ஸ்ரீ உ. வே. விதவான் வலயப்பேட்டை ராமானுஜதாதாசாரியர் ஸ்வாமி

वेदान्तिजातं विदुषां वरिष्ठं
वेदान्तविज्ञान सुनिश्चितार्थम् ।
आचारशीलं परिपूर्णबोधं
श्रीदेवनाथं गुरुवर्यमीडे ॥
श्रीदेवनाथार्यमहाप्रभावः
चतुर्दिगन्तः प्रथितः प्रशस्तः ।
अथापि जिह्वाशुचितोपलब्ध्यै
वदामि भक्त्या गुरुराट्चरित्रम् ॥

சடமர்ஷணகோத்ரம் என்று ப்ரஸித்தமான கோத்ரத்தின் ப்ரவர்த்தக ரிஷிகளுள் முதன்மையானவர் அங்கிரஸ் என்கிறரிஷி இந்த அங்கிரஸ் ஸாக்ஷாத் ப்ரம்ஹாவின் திருமுக மண்டலத்திலிருந்து அவதரித்தவர். இவர் "तेऽब्रुवन् अमृतः प्रदानं वा उपजिजीवमेति, ते समहोतारं यज्ञ विघ यायास्यम, आङ्गीरसं प्राहिण्वन्, एतेनामुत्रकल्पयेति, तस्य वा इयं क्लृप्तिः, यदिदं किञ्च, य एवं वेद, என்று யஜுர்வேதத்தில் கூறியவாறு இப்பூவுலகிற்கு எல்லாப் புண்ணிய கர்மாக்களையும் தெரிவித்தவர். மற்றும் இந்த மஹாமுனியானவர் யஜுர் வேதத்தில் போல் மற்ற மூன்று வேதங்களிலும் பலவாருகப் போற்றப்பட்டவர் இவரைப் போன்று மற்ற ரிஷிகளும் (சடமர்ஷண கோத்ர ப்ரவர்தகரிஷிகள்) பலபெருமையை உடையவர்கள் என்பதைச் சொல்லத் தேவையில்லை. இத்தகைய பெருமை வாய்ந்தது சடமர்ஷண கோத்ரம்.

ஆப்ரம்ஹ கீடபர்யந்த முள்ள ஸகல சேதனங்களையும் உஜ்ஜீவிப்பதற்கு "ப்ரபத்தி" தவிர வேறுஒன்றும் வழியில்லாமையால் அவ்வழியைக் காட்டிக் கொடுக்க ஸாக்ஷாத் பகவதவதார ரூபமாக அவதரித்தார் நம்மாழ்வார். ப்ரபந்ந ஜன ஸந்தாந கூடஸ்தரென்று, போற்றப்பட்ட நம்மாழ்வாருக்கு அத்யந்த ப்ரிய சிஷ்யரும், நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திகளை உலகுக்கு வழங்கினமையால் "தாளம் வழங்கித் தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல்" என்று போற்றப்பட்டவரும், "नाथोपज्ञं प्रवृत्तं" என்று ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் ஸாதித்தபடி நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை முதன் முதலில் ப்ரவர்த்திப்பித்தவருமான ஸ்ரீமந்நாத முனிகள் இச்சடமர்ஷணகோத்ரத்தில் அவதரித்தார். இந்த நாமுனிகளுடைய திருவம்சமானது "மஹாவம்சம்" என்பதை ஸ்ரீஆளவந்தார் "जनित्वाऽहं वंशे महति" என்றும்

"महानेको वंशस्तव जगति विख्यातमहिमा
यदुत्पन्नास्सर्वे प्यतिशयितविज्ञाननिचयः ।
श्रुतिस्मृत्याचारैस्स्वमतिगतिभिश्चाच्युतमतं
विजानन्तो नित्यं हरिचरणकैङ्कर्यपरमाः ॥"

என்று உருப்பட்டூர் ஆச்சானும் "वंशे महत्युदभवन् किल तावकीने" என்று குருகைக் காவலப்பனும்,

"कथमाशास्महे तस्मिन्नजनित्वा महाकुले ।
तव नाथपरां भक्तिं प्रयच्छ दययैव ताम् ।"

என்று ஈசாண்டானும், மற்றும் பலரும் போற்றி உள்ளார்கள்.

இதைப்போன்று ஸித்தி த்ரயம் முதலிய பல க்ரந்தங்களை ஸாதித்தவரும், ஸ்ரீபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை ஸாதிப்பிக்கச் செய்தவருமான ஆளவந்தாரும், ஸ்ரீபாஷ்யகாரருக்கு உத்தம தேசிகராயும், திருவேங்கடமுடையானுடைய கைங்கர்யத்தில் மெய் மறந்து ஈடுபட்டு, அதனால் ஸந்துஷ்டியடைந்த திருமலையப்பனால் (திருவேங்கடமுடையானால்) "தாத" என்று அழைக்கப்

பட்ட வருமான "சைலபூர்ணரும்" (திருமலை நம்பியும்) உலகு போற்றும் தமிழ் மறைக்கு முதன் முதலில் "ஆருயிரப்படி" என்னும் வ்யாக்யானத்தை அருளிய "திருக்குருகைப் பிரான் பிள்ளானும்" மற்றும் த்ரமிட பாஷ்ய காரர் முதலிய பெரியோர்களும் அவதரித்த இவ்வம்சம் ஸ்ரீசைலவம்சம் என்றும் அழைக்கப்படுகின்றது.

மேற்கூறியவாறுக பல மஹான்கள் அவதரித்த இந்த ஸ்ரீசைலவம்சத்தில் "நாவல்பாக்கம் திருமலை சதுர்வேத சதக்ரது குமார தாததேசிகன்" அவதரித்தார். இவருக்கு பகவன்முகோல்லாஸத்தினுல் கிடைத்த பிருதங்களில் "திருமலை" என்பது ஆபிஜாத்யத்தைக் காண்பிப்பதாகவும், "சதுர்வேதம்" என்பது ஜ்ஞானத்தைக் காண்பிப்பதாகவும் "சதக்ரது" என்பது அநுஷ்டானத்தைக் காண்பிப்பதாகவும் அமைந்துள்ளமை மிகவும் விசேஷம். இத்தகைய சிறந்த பெரியோர்கள் அவதரித்த இத்திருவம்சத்தில் குமாரதாத தேசிகனிலிருந்து ஒன்பதாவது ஸந்ததியாக நம் அய்யா தேவநாததாதாசார்யர் ஸ்வாமி அவதரித்துள்ளார்.

ஸ்வாமியின் அவதார காலதேசங்கள்

நம் ஸ்ரீஸ்வாமியின் திருத்தகப்பனுரா ஸ்ரீ உ.வே. நரஸிம்ஹ தாதாசார்யர் ஸ்வாமி திருவஹீந்திரபுரத்தில ஜ்ஞான வைராக்யானுஷ்டான ஸேவதியாய், தினமும் ஹயக்ரீவன், தேவநாதன், தேசிகன் முதலானவர்களை அநந்ய ப்ரயோஜனமாக மங்களாசாஸநம் செய்து கொண்டு எழுந்தருளியிருந்தமை பார் முழுது மறியும். இம் மூன்று மூர்த்திகளும் ஸ்வாமியின் மங்களாசாஸநத்தினுல் ப்ரஸன்னர்களானுர்கள் நரஸிம்ஹதாதாசார்யஸ்வாமியின் தேவிகளான கமலம்மாள் பகவானுடைய அனுக்ரஹத்தால் கர்ப்பம் தரித்தார். இந்த கமலம்மாள் பெரிய ஸ்வாமி என்று ப்ரஸித்தரான ஸ்ரீமதண்ணயார்ய மஹாதேசிகனின் தௌஹித்ரியாவார். பிறகு ப்ரஸவத்திற்காக கமலம்மாளை நாவல்பாக்கத்திற்கு அவளுடைய மாமா ஸ்ரீநிவாஸதாதாசார்யர் அழைத்துக்கொண்டு வந்தார். கலியுகாதி 4997 துன்முகி நாமஸம்வத்ஸரத்தில் (1896ல்) ஆடி மாதத்தில் ஸ்ரீபாஷ்யகாரருடைய அவதார திருநக்ஷத்ரமாகிய திருவாதிரை நக்ஷத்திரத்தில் அய்யா தேவநாததாதாசார்ய ஸ்வாமி நாவல்பாக்கத்தில் அவதரித்தார். ஸ்ரீஸ்வாமி நாவல்பாக்கத்தில் அவதரித்தாலும் திருவஹீந்திரபுரத்தில் தேவநாதன், தேசிகன், ஹயகரீவன் இவர்களுடைய அநுக்ரஹத்தால் கர்ப்பம் ஏற்பட்டதால் "தேவநாத தேசிகன்" என்று திருநாமமிட்டனர். அவதார ஸமயத்தில் ஸ்வாமியின் திருமேனியில் தோன்றிய ஸ்ரீவைஷ்ணவ தேஜஸ்ஸைக் கண்டு அக்காலத்திய பெரியோர்கள்" "आस्फोटयन्ति पितर: प्रनृत्यन्ति पितामहा: । वैष्णवो न: कुले जात: स न: संतारयिष्यति ॥" என்கிற கணக்கிலே குதூஹலங் கொண்டனர்.

"नास्याब्रह्मवित् कुले भवति" என்னும் ச்ருதி வசனமும் இவர் விஷயத்தில் அனவர்த்தமாயிற்று. "नामैकदेशे नामग्रहणम्" என்கிற ந்யாயத்தினுல் தேவநாத தேசிகன் இப்பொழுது தேவநாதன் என்று அழைக்கப்படுகிறுர். வம்சத்தில் தோன்றிய பெரியோர்களின் பெயரை வைக்கவேண்டும் என்கிற தர்ம சாஸ்திரத்தையும் "तस्माद्द्विनामा ब्राह्मण:" என்னும் ச்ருதி வசனத்தையும் அனுஸரித்து இவருக்குத்தன் பிதா மஹனின் திருநாமமாகிய வேங்கடேசன் என்கிற பெயரையும் சூட்டினர். அதுவே இவருக்கு சர்மாவும்.

உபநயநம்

கர்பாஷ்டம வயதில் இவருடைய பிதாமஹி பரமபதித்து விட்டபடியால் திருத்தகப்பனுர் தீக்ஷையான படியால் "गर्भाष्टमेऽष्टमेऽब्दे वा" என்கிற வசநத்தை அநுஸரித்து ஜன்மாஷ்டமத்தில் உபநயநம் நடந்தது. இந்த ஸ்வா

மிக்கு ஐந்தாவது திருநக்ஷத்திரத்தில் திருமேனி பாங்காக இராதிருந்ததால் திருத்தகப்பனுர் ஸ்வாமியால் பரஸமர்ப்பணம் பண்ணி வைக்கப்பட்டது. உபநயநம் நடந்த பிறகு திருத்தகப்பனுர் பஞ்ச ஸம்ஸ்காரம் மந்த்ரோபதேசம் எல்லாம் செய்வித்து அந்த வயதிற்குள் கற்பிக்கவேண்டிய பாடங்களையும் "शिक्षघिकपाहि" ஆன இவருக்கு கற்பித்தார். பிறகு விரக்தாக்ரேஸரரான அந்த ஸ்வாமி க்ருஹஸ்தாச்ரமதத்தைத்துறந்து ஸந்யாஸாச்ரமத்தை விரும்பி வலயபேட்டைக்கு எழுந்தருளி விட்டார். அங்கு பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய, "ஸ்ரீமத் வேதாந்த ராமானுஜ மஹாதேசிக ஸ்வாமியிடம் துரீயாச்ரமத்தை ஸ்வீகரித்தார். ஸந்யாஸாச்ரமத்துக்கு உரிய தர்மங்களை மிகவும் நெறியுடன் அநுஷ்டித்து வந்த படியால் திருமேனிகுத் தாளாமல் நான்கு மாதத்திற்குள்ளாக பரமபதிகும்படி ஆகிவிட்டது.

வித்யாப்யாஸம்

எனவே இந்த ஸ்வாமி ஊரிலுள்ள பெரியோர்களிடம் வித்யாக்ரஹணம் செய்தார். அந்தக்காலத்தில் நாவல்பாக்கத்தில் எழுந்தருளியிருந்த பெரியோர்கள் எல்லோரும் वेदाध्ययनसम्पन्नர்களாகவும், தர்கசாஸ்த்ரங்களிலும் வித்வானகளாகவும் இருந்தபடியால் நம் ஸ்வாமி மணியம் ஸ்ரீநிவா ஸாசாரியா ஸ்வாமி தாததேசிகாசாரியா ஸ்வாமி முதலியவர்களிடம் வேதாத்யயனம் செய்துகொணடு ஸ்ரீ உ. வே. தாதுமாமா ஸ்வாமியிடமும் சூளை ஸ்ரீநிவாஸதாதாசாரியர் ஸ்வாமியிடமும அம்மணி வித்வதகவிஸார்வபௌம ராமானுஜாசாரியர் ஸ்வாமியிடமும் காவியங்களை அப்யஸிததார். அந்த ஸமயம் நாவல்பாக்கம் ஸ்வாமி என்று ப்ரஸித்தராக எழுந்தருளியிருந்த நரஸிம்ஹ தாதாசார்ய ஸ்வாமி சில வருஷகாலம் ஊரிலேயே எழுந்தருளியிருந்தார். அப்பொழுது ஸ்ரீமத் அண்ணயார்ய மஹாதேசிகன் ஸப்தாவான ஸ்வாமி திருமாளிகை ஆராவமுதாசார்ய ஸ்வாமி முதலானவர்கள் தர்க்க சாஸ்திரத்தில் உத்க்ரந்தங்களை நாவல்பாக்கம் ஸ்வாமி ஸன்னதியில் வாசித்து வந்தார்கள். நம் அய்யா ஸ்வாமியும் சில காவ்ய க்ரந்தங்களையும், तर्कशास्त्रप्रकरण ग्रन्थங்களையும் நாவல்பாக்கம் ஸ்வாமியினிடத்தில் அதிகரித்தார். பிறகு நாவல்பாக்கம் ஸ்வாமி "मीमांसा शास्त्र"த்தை அதிகரிப்பதற்காக திருவிசநல்லூருக்கு எழுந்தருளினுர். அந்த ஸமயம் ஸ்வாமி திருமாளிகை ஆராவமுதாசார்யர் ஸ்வாமியிடம் "पञ्चलक्षणी" முதற்கொண்டு அநேகமாக எல்லா க்ரந்தங்களையும் நம் ஸ்வாமி வாசித்தார். வாசிக்கும் ஸமயத்தில் கடினமான விஷயங்களை "सकृदुपदेश" மாத்ரத்திலேயே புரிந்து கொள்ளும் சக்தியும், "युवास्यात् साधु युवाध्यायक:" என்றே உபநிஷத் வாக்யத்தினபடி வயதில் பெரியோர்களுக்கும் ப்ரதி தினம் தன்னுடன் வாசித்த ஸதீர்ததர்களுககும் சிந்தனை சொல்லும் ஸாமர்த்தியமும் ஸ்வாமிக்கு இருந்தது ப்ரஸித்தமானது.

ச்ரௌதத்திலும் வியாகரணத்திலும் மீமாம்ஸையிலும், வேதாந்தத்திலும் நிபுணராகவும் பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளில் அபூர்வமான அர்த்தங்களை ஸாதிக்கும் திறமையுடையவராகவும सोमयाग த்தை அநுஷ்டித்து அநேக வர்ஷங்கள் அகனிஹோதரம அநுஷ்டிதத வருமான ஸ்ரீ உவே. அக்னிஹோத்ரம நாராயணதாதாசார்ய ஸ்வாமியின திருத்தகப்பனுரான ஸ்ரீ உவே. தாது மாமாஸ்வாமி எனகிற தாதாசார்ய ஸ்வாமியிடம் இந்த ஸ்வாமி விசேஷார்த்தங்களுடன் ஸ்ரீமத ராமாயண உபதேசம பெற்ருர்.

விவாஹம்

பொய்கை பாக்கம் என்னும் அக்ரஹாரத்தில் ஸ்ரீவத்ஸகோத்ரத்தைச் சார்ந்த சக்ரவர்த்தி கிருஷ்ணமாசாரியர் 'என்கிற ஸ்வாமி தன்னுடைய த்விதீய குமாரத்தியை பண்டித

ராஜ D.T. தாதாசார்யஸ்வாமிக்கும் சிறிய குமாரத்தியை ஸ்ரீ உ. வே. அய்யாஸ்வாமிக்கும் கன்யகாதானம் பண்ணினார். சிறிய குமாரத்தியான அய்யாஸ்வாமி தேவிகளுக்கு லக்ஷ்மி என்று திருநாமம்.

அன்வர்த்த நாமதேயமான இந்த தேவிகளை பரிக்ரஹித்தது முதல் ஸ்வாமிக்கு ज्ञानानुष्ठादि सम्पत्துக்கள் மேன்மேலும் அபிவிருத்தியை அடைந்து வருகின்றன. "सहधर्मचरी तव" என்கிறபடியே ஸ்வாமி அநுஷ்டிக்கும் தர்மங்களைக்கூட இருந்து நடத்திவைக்கும் பாங்கு வெளியில் காண்பதரிது. திருமேனியிலும் மனதிலும், அநுரூபமான தாம்பத்யம். இந்த அம்மங்கார் விசாலமனப்பான்மை கொண்டவர். அநேகசிஷ்யர்களைத்தன் குழந்தைகளுக்கு மேலாக பாவித்து அநேகவருஷ காலம்தம்திருமாளிகையில் ஆஹாராதிஸௌகரியங்களைச் செய்து கொடுத்து வந்துள்ளார் 'गृहीत्वा प्रेक्षमाणा सा भर्तारं च मुहुर्मुहुः' इत्यादि வசனங்களில் கூறியவாறே ஸ்வாமியின் இங்கிதத்தைத் தெரிந்து கொண்டு பாலயம் முதல் இன்றுவரை ச்ரமத்தைப் பாராட்டாமல் ப்ரீதிபூர்வகமாக पतिशुश्रूषै செய்து வருவதை இப்பொழுதும் கண்கூடாகக் காணலாம். பொய்கைபாக்கம் ஸ்வாமிக்கும் சடமர்ஷண கோத்ரத்தில் அவதரித்த உலகம் புகழநிற்கும் இருமஹான்கள ஜாமாதர்களாகக் கிடைத்தது பெரும்பாக்கியம் என்பதைச் சொல்லததேவையில்லை.

ஸமஸ்தானங்களில் பரீக்ஷை கொடுத்தல்

அப்போது புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் தர்க்கசாஸ்த்ரத்தில் பரீக்ஷை கொடுக்க விரும்பி மன்னார்குடி எழுந்தருளி அங்கு எழுந்தருளியிருந்த நாவல்பாக்கம் ஸ்வாமி ஸன்னதியில் ग्रन्थपत्रादि களைவாசித்துப் பரீக்ஷை கொடுத்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றதும் நாவல்பாக்கம் ஸ்வாமி மிகவும் உகந்ததுடன் கொன்னையூர் சூரியநாராயண சாஸ்த்ரிகள் என்னும் வித்வான் நடத்தும் ஸதஸ்ஸுக்கும் செல்லும்படி நியமித்து அழைத்துக்கொண்டுபோக ஒரு வித்வானையும் நியமித்தார்.

நம்ஸ்வாமி, ஸதஸ்ஸில் सत्प्रतिपक्ष த்தில் अपितु प्रतिवादि वाग प्रकटाटोपनिवारणक्षमा: என்கிற ரீதியில் கோடிக்ரமமாக வாக்யார்த்தம் சொல்லி சாஸ்திரிகளை மகிழ்வித்து அதிஉத்தமஸம்பாவனையான ரூ ஐந்தைப்பெற்றார் வந்த வித்வானுக்கு இரண்டு ரூபாய் வழங்கினார் சாஸ்த்ரிகள் நம்ஸ்வாமியுடன்வந்தவித்வானை நோக்கி உமக்குவழக்கமாக ஒரு ரூபாய்தான் ஸம்பாவனை செய்வது வழக்கம். சிறுபிள்ளையாக இருப்பினும் மஹா மேதாவியான இவ்வித்வானை (நம்ஸ்வாமி) அழைத்துவந்ததற்காக மேலும் ஒரு ரூபாய் ஸம்பாவனை செய்தேன். தர்க்க கர்க்கசர்களான காசினி வேதாந்தாசசாரியர் தொட்டையாசாரியர் போல் வாக்யார்த்தம் சொன்னதால் இச்சிறு பிள்ளைக்கும் அவர்களுக்குப் பண்ணுவது போல் ரூ 5/- ஸம்பாவனை செய்தேன் என்றார். இந்தவ்ருத்தாந்தத்தைக் கேட்டு நாவல்பாக்கம் ஸ்வாமி மிக மகிழ்ந்து இவருக்குத் தர்க்கத்தில் சிலக்ரந்தங்களையும் மீமாம்ஸையையும் பாடஞ்சொல்லத்தாமே நாவல்பாக்கம் எழுந்தருளுவதாக ஸாதித்தாயிற்று. அதன்படி ஸ்ரீ நாவல்பாக்கம் ஸ்வாமி நாவல்பாக்கம் எழுந்தருளி நம்ஸ்வாமிக்கு தர்க்க சாஸ்த்ரத்தில சில் உத்க்ரந்தங்களை ஸாதித்தாயிற்று. நம் ஸ்வாமி, ஸ்வாமிதிருமாளிகை ஆராவமுதாசாரியர் ஸ்வாமி, அக்னிஹோத்ரம நாராயண தாதாசாரியா ஸ்வாமி நீல மேகாசாரிய ஸ்வாமி ஆகியோர் நாவல்பாக்கம் ஸ்வாமியிடம் மீமாம்ஸை வாசித்தனர். பின்னர் நம் ஸ்வாமி க்ரந்தசதுஷ்டயத்தையும் ஸ்ரீ தேசிகக்ரந்தங்களையும் ஸ்வாமிஸன்னதியில் காலக்ஷேபம் செய்தார். மைசூரில் ந்யாயத்திலும் மீமாம்ஸையிலும் பரீக்ஷைகொடுத்து முதல் வராகத் தேர்ச்சி பெற்றார்.

ஸமஸ்தானங்களில் பரீக்ஷாதிகாரம்

புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்தில் சில வருஷங்கள் பரீக்ஷாதிகாரிபாக நியமிக்கப் பட்டு ப்ரதி வருஷமும் அங்கு எழுந்தருளி ஞர். திருக்குடந்தை விசிஷ்டாத்வைத வேதாந்த ஸபை, மற்றும் பல இடங்களில் நடைபெற்ற வித்வத் ஸபையிலும் ஸ்வாமி பரீக்ஷாதிகாரியாக எழுந்தருளி யிருந்தார்.

பஞ்ச காலாநுஷ்டானம்

ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீமத் கீதாபாஷ்யம் நித் யம் முதலிய க்ரந்தங்களில் अभिगमनम्, उपादानम्, इज्या, स्वाध्याय:, योगम् என்று தினத்தை ஐந்து காலங்களாகப் பிரித்து அந் தந்தகாலத்தில் अभिगमनादि களால் எம்பெரு மானை ஆராதிக்க வேண்டுமென்று ஸாதித் துள்ளார். அவ்வழியைப் பின்பற்றி பால்யம் முதற்கொண்டு இன்று வரை பஞ்சகால ப்ர க்ரியையில் வழுவாமல் அநுஷ்டானம் செய்து கொண்டு வருகிறர். ब्राह्ममुहूर्त்தத்தில் எழுந்திருந்து நாமஸ்மரணதிகளைச் செய்து திருப்புல் கூடையை எடுத்துக் கொண்டு புஷ்கரணிக்கு எழுந்தருளி நீராட்டம் ஆகி உதயத்தில் உபஸ்தானம் அநுஷ்டித்தாகும். சாஸ்த்ரோக்த ரீதியில் ப்ரதிதினம் ஒரு ப்ரச்னம் சொல்லி ब्रह्मयज्ञத்தை முடித்துக் கொண்டு பெருமாள் திருவாராதனத்திற்கு வேண்டிய தீர்த்தத்தை குடத்தில் எடுதது்க் கொண்டு சிரஸ்ஸில் வேஷ்டியையும் திருப் புல் குடையையும் தரித்துக் கொண்டு புஷ் கரணியிலிருந்து திருமாளிகைக்கு எழுந் தருளியாகும். அந்த ஸமயம் ஸ்வாமியை ஸேவிப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருககும்.

திருமாளிகைகு எழுந்தருளிய பிறகு ஔபாஸனம் ஆகும். பிறகு அபிகமனம் ஆனபிறகு உபாதான காலததில் புஷ்பம், திருத்துழாய், முதலிய ஆராதனோபகரணங் களைச் சேகரித்துப் பிறகு வேதாந்த கால க்ஷேபம் ஸாதிச்கும்படி யிருக்கும். பிறகு மாத்யாஹ்னிக ஸ்நாநத்திற்கு எழுந்தருளி மாத்யாஹ்னிகம் ஆனவுடன திருவாராதனம் பண்ணி அன்னவைச்வதேவம் அநுஷ்டித் தாகும். பிறகு அதிதிகள் யாராவது வந் திருக்கிறர்களா என்று திருவாசல் வரை வந்து ப்ரதீக்ஷித்துப் பிறகு अनुयागम् அநுஷ் டித்தாகும். ஸ்ரீமத்ராமாயணம் முதலிய புராண पठनम् ஆகும். சிஷ்யர்களுக்கு ந்யாயம், மீமாம்ஸா, முதலிய ஸாமான்ய சாஸ்திரங் களையும் காவ்யாதிகளையும் அந்தந்த அதி காரிகளுக்கு அநுகுணமாக ப்ரவசனம் செய் தாகும். ஸந்த்யாகாலம் வந்தவாறே ஸாயம் ஸந்த்யோபாஸனம் அநுஷ்டித்து கோயிலு க்கு எழுந்தருளி எம்பெருமானை மங்களா சாஸநம் செய்து விட்டு सायमौपासनத்தை அநுஷ்டித்து ராத்ரியில் ग्रन्थावलोकन ग्रन्थले खनादि களைச் செய்து யோக காலத்தில் எம் பெருமானை த்யானித்துக் கொண்டு சயனித் தாகும். இம்மாதிரி கலுப்தமான அநுஷ்டா னத்தை ஸ்வாமி அன்று முதல் இன்றுவரை ஒரு நாள் கூடத்தவறியது கிடையாது. க்ரு ஹஸ்தாச்ரமததிலும் விரகதர்களாய், அநுஷ் டானபரர்களாகவும், பரமைகாநதிகளாகவும் இருக்க முடியும் என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்து அநுஷ்டித்துக் காண்பித்தபடியே நம் ஸ்வாமியும அநுஷ்டிததுக் காணபித் துள்ளார்.

ஸ்வாமியின் வைராக்யம்

ஸ்வாமியின் யோக்யதைக்கு அநுகுண மாக திருவையாறு, மைசூர் முதலிய இடங் களில் அத்யாபக ஸ்தானஙகள் கிடைததும் அவைகள் தம்முடைய அனுஷ்டானத்திற்கு அநுகூலங்களாக இருக்கமாட்டா என்று தீர் மானம் செய்து அம்மாதிரி ஸ்தானங்களை ஸ்வாமி ஏற்கவில்லை. தவிர மன்னர்குடியில் முதல் அகரஹாரத்தில் அண்ணுஸாமி அய் யங்கார் என்கிற பெரிய தனிகர் வேதபாட சாலை நடத்தி வந்தார். அங்கு நடைபெற்ற

வித்வத் ஸபைக்கு வரும்படியாக நம் ஸ்வாமிககு ஆஹ்வான பத்ரிகை அனுப்பி இருந்தார்கள். ஸ்ரீநம் ஸ்வாமியும் அந்த ஸபைககு எழுந்தருளியிருந்தார். அந்த ஸமயம் பெரிய உபந்யாஸகராகவும், வித்வாஞகவும் எழுந்தருளியிருந்த தென்ஞசார்யஸம்ப்ரதாய ஸ்தரானதேசிக வரதாசாரியர் வெண்ணுற்றங்கரை வித்வான் சீமாசாரியர் முதலான பல வித்வான்கள் நம் ஸ்வாமி சக்தி வாதத்தில் ரொம்பவும் அழகாக வாக்யார்த்தம் ஸாதிததைக்கேட்டு இவருடைய ஜ்ஞானம் அந்யாத்ருசமானது. இவரை உங்கள பாடசாலையில் சாஸ்த்ரப்ரவசனத்திற்கு அத்யாபகராக வைத்துக்கொள்ளலாமென்பதாகச் சொன்ஞர்கள். அண்ணு ஸாமி அய்யங்காரும் நம் ஸ்வாமியைத்தாம நடத்தி வந்த கலாசாலையில் அத்யாபகராக எழுந்தருளியிருந்து சாஸ்த்ர ப்ரவசனம் செய்யவேண்டுமென்று ப்ரார்த்தித்தார். நாங்கள் ஏதோ ஒளபாஸநத்ரவ்யமாக ஸமர்ப்பித்துக்கொள்கிறோம். இது भृत्याध्यापनமாக ஆகாது. மற்ற இடங்களில் போல் இராமல இது स्वाध्यायம் ஆகவும் இருப்பதால் இதை ஸ்வீகரித்துக் கொண்டு இங்கு எழுந்தருளியிருக்கவேண்டுமென்றும் ப்ரார்த்தித்தார்கள். இதைககேட்டு நம் ஸ்வாமி நான் ஊருக்குப்போய் பிறகு இது விஷயத்தை யோசனை செய்து தெரிவித்துக் கொள்கிறேன் என்று நாவல்பாக்கம் எழுந்தருளி ஸ்ரீஸ்வாமி ஸன்னிதியில் விண்ணப்பித்தார். "ஸ்வாமி" ஊரில் யாரும் இல்லை. நீ இருப்பதால் தான் நான் இவ்விடம் வந்திருககிறேன். வெளியில் எங்கும் பதவிகளுக்காகச் செல்லாமல் ஊரிலேயே இருந்துக் கொண்டு சாஸ்த்ரோக்த ரீதியில் அங்கும் சிஷ்யர்களுக்கு சாஸ்த்ரப்ரவசனத்தைச் செய்துகொண்டு இதரர்களுக்கு நிதர்சனமாக விளங்கவேண்டும். இது நம்முடைய ஊரில் தொன்று தொட்டுப் பெரியோர்கள் அநுஷ்டித்துவரும் க்ரமம். இதை நீ அனுஷ்டானத்தில் கொண்டுவரவேண்டும் என்று நியமித்து பெருமாள் கோவிலில் தேவப்பெருமாள் திருவடிவாரத்தில் அனுஷ்டானங்களையும் ப்ரவசனங்களையும் செய்து போந்தார். நம் ஸ்வாமி அந்த நியமனத்தை சிரஸா ஏற்றுக்கொண்டு அதை அப்படியே நடத்திக்காட்டி வருகிறுர். இது ஒனறே ஸ்வாமிக்குள்ள குருபக்திக்கும் ஸ்வாமியினிடத்தில் குருவுக்குள்ள அநுக்ரஹ விசேஷத்திற்கும் எடுத்துக்காட்டாகும். ஏகாதசி ச்ரவணத்வாதசி முதலிய உபவாஸங்களை இந்தத் தளர்ந்த தசையிலும் அனுஷ்டித்தாகிறது.

கற்பிக்கும் திறமை

பால்யம் முதல் இன்றுவரை ஸ்வாமிஸந்நிதியில் அநேக சிஷ்யர்கள் ந்யாய மீமாம்ஸாதி சாஸ்த்ரங்களை அதிகரித்து स्वरूपத்தை பெற்று உலகம் புகழும் நிலையில் இருக்கிறுர்கள். ஸ்வாமிககு சிஷ்யர்களிடம் இருக்கும் அநுக்ரஹம் அந்யாத்ருசம். அந்தநத அதிகாரிக்குத் தகுந்தபடி உபதேசிககும் திறமை அலாதியாக இருக்கும். பூப்பறிக்கும் மாதிரி கடினமான சாஸ்த்ரவிஷயங்களை எளிய நடையில் பாடம் சொல்லி வாசிப்பவன் மனதில் பதியவைக்கும் திறன் போற்றக் கூடியதாக இருக்கும். ஸ்வாமிக்கு அநுஷ்டானம் ஒருகண் அத்யாபனம மற்றொரு கண் இதில் ஏதாவது ஒன்று தவறினுல் ஒரு கண் போய்விட்டதாகவே நினைக்கும்படியிருக்கும் ஆனுல் அம்மாதிரி இன்றுவரை நேர்ந்ததிலலை. அநுஷ்டானம் நியதமாக அநுவ்ருத்திப்பது போல் அத்யாபனமும் இடைவிடாமல் நடந்து வருகிறது அனத்யயன தினத்தில் தான் அத்யாபனம் கிடையாதே தவிர மற்ற நாட்களில் யாராவது சிஷ்யர்களுக்கு அதயாபனம் செய்து கொணடே வருகிறுர். இநதத் தளர்ந்த திருமேனியையுடைய திருநக்ஷத்ரததில் கூடச்ரமத்தைப் பாராட்டாமல் மணிக்கணக்கில் அனன்யப்ரயோஜன மாகப் பாடம் சொல்லித்தருவது எனகிற உயர்ந்த ஸ்வபாவத்தை வெளியில் காணபது மிகமிக

அரிது ஸ்வாமிஸன்னிதியில் அதிகரித்து ஸ்வாமி அநுக்ரஹத்தால் வித்வான்களான வர்களில் சிலரை இங்குக் குறிப்பிடுகிறோம். (1) பண்டிதராஜ N. S. கிருஷ்ணஸ்வாமி தாதாசாரியார். (2) N S. தேவனுதாசாரியர் (3) வில்லிவலம் வேதாந்த வாவதூக நாராயணுசாரியர் (4) கோழியாலம் சட கோபாசாரியர் (5) கொததிமங்கலம் K S. வரதாசாரியர் (6) N S. ராமானுஜா சாரியர் இம்மாதிரி மற்றும் பலர்.

ஆத்மகுண பூர்த்தி

கீதாசார்யன் பகவத் கீதையில் 'अमानित्व मदाम्भित्वम्' என்று தொடங்கி அநுக்ரஹித்த ஆத்ம குணங்களையும் 'भवन्ति सम्पदं दैवी मभि जातस्य' என்று ப்ரஸித்த குணங்களையும் ஸ்வாமி ஸந்நிதியில் கண்கூடாகக் காண லாம். எம்பெருமானுக்கு பரத்வம், ஸௌல ப்யம் இரண்டும் சேர்ந்திருப்பதை நம்பூர் வாசார்யர்கள சேதனர்களுககு உஜ்ஜீவகங் களாகப் பணித்தார்கள். அந்த இரு குணங் களும் ஸ்வாமிககு அமைந்துள்ளன. ஸ்வாமி யின அநுஷ்டானத்தால உண்டான தேஜஸ் ஸைக கணடு பரத்வபுத்தியால் நெருங்க பயப்படுபவர்களை ஸௌலப்யத்தாலே ஆகர் ஷித்து அநுக்ரஹிச்கும் பாங்கு விலக்ஷண மாயிருக்கும். தூரததிலிருந்து ஸேவிதது விட்டு நெருங்கக கூசுமவர்கள் கிட்டே நெருங்கி ஸ்வாமியுடன் உரையாடியபின் ஸ்வாமியின் ஸௌலப்யம் என்னே! இந்த ஸ்வாமியிடம் நெருங்க பயப்பட்டது நம் முடைய தவறே என்று சொல்லும் படியிருக் கும். ஸ்வாமி செய்யும் எந்தக் காரியமும் க்யாதி லாப பூஜாதி களுக்காக வன்று என்பதை எல்லோரும் அநுபவத்தால் தெரிந்து கொண்டுள்ளார்கள.

ஸ்ரீஸந்நிதி கைங்கர்யம் முதலிய தர்மகார்யங்கள்

பூர்வாசார்யர்கள் அநுஷ்டித்த க்ரமத்தில் ஸ்ரீரங்கம் முதலிய திவ்யக்ஷேத்ரத்ரங்களில் எழுந்தருளியிருந்து அந்தந்த எம்பெருமான் களை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு இருக்கவேண்டுமென்று திருவுள்ளம் இருந் தும் நாவல்பாக்கத்திலேயே எழுந்தருளி இருக் கவேண்டிய அவச்யம் ஏற்பட்டதால் அங்குக்கோயில் கொண்டு எழுந்தருயிருக் கும் எம்பெருமானை மங்களாசாஸநம் பண்ணு வதே திவ்ய க்ஷேத்ர எம்பெருமானை மங்களா சாஸநம் பண்ணுவதற்கு ஸமானமாகும் என்ற அத்யவஸாயத்துடன் அங்கேயே எழுநதருளியாகிறது. திவ்யதேசத்து அநுப வங்களை இங்கேயே பெறுவதற்காக ஸந்நிதி யில் அநேக கைங்கர்யங்களையும் மஹோத் ஸவங்களையும் செய்ய ஏற்பாடுசெய்து அநுப வித்து வருகிறபடி ஸ்வாமி ஒரு கைங்கர் யத்தை நிறைவேற்றுவதற்காக ஒருவரையும் யாசிபபது கிடையாது ஸ்வாமி ஸங்கல்பித் தால் நான முன்னே நான் முன்னே என்று அநேகம் பெயர்கள் முன் வந்து அதை நிறை வேற்றுகிறார்கள். ஸ்வாமி எந்தக்கைங்கர் யத்தை நியமிப்பார் என்று எல்லோரும் ப்ரதீக்ஷை பண்ணுகிறார்கள் அது ஸ்வாமியின் தேஜஸ்ஸின மஹிமையே. ஸ்வாமி காலத் தில் ஸ்வாமி தேஜஸ்ஸால் நிறைவேறிய கைங்கர்யங்களில் சிலவற்றைக் கீழே குறிப் பிடுகிறோம்:—

(1) திருத்தேர் நிர்மணம். (2) கோபுர நிர்மாணம். (3) நந்தவனம். (4) வஸந் தோத்ஸவ மண்டபம். (5) பவித்ரோத்ஸவம் முதலியவை. தத்காலததில் நாவல்பாக்கம் ஸ்ரீரங்கம் முதலிய திவ்யதேசங்களுக்கு ஸமா னமாகத் திகழ்கிறது. 'सा काञ्चीति न चाकञ्चीति' என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் பணித்தது இந்த திவ்ய க்ஷேத்ரத்தில் அன்வர்தமாக அமைகிறது.

ஸதஸ் வாக்யார்த்தங்கள்

திவ்ய தேச யாத்ரா வ்யாஜத்தினுலே ஸபைகளுக்கு எழுந்தருளலாமே அல்லது

அர்த்தார்ஜனத்தை உத்தேசித்து ஸபைகளுக்கு எழுந்தருளக் கூடாது என்று சாஸ்த்ரம் இருப்பதாலும் திவ்யதேசங்களில் மங்களா சாஸனத்துக்குக் காலதோஷத்தால் ப்ரஸக்தி இராமற்போய் விட்டபடியாலும் ஸ்வாமி ரயில், பஸ் முதலிய ஸகல வாஹனங்களிலும் ஏறுவதைத் தவிர்த்து விட்டார். ஆகிலும் இஞ்சிமேட்டு அழகிய சிங்கர் சோகத்தூருககு எழுந்தருளியஸமயம் லக்ஷ்மீந்ருஸிம்ஹனை மங்களாசாஸநம் பண்ணுவதற்காகவும், அழகிய சிங்கரை தண்டம் ஸமர்ப்பிப்பதற்காகவும் அங்கு எழுந்தருளியாயிற்று. அப்பொழுது அழகிய சிங்கரும் ஸமீபத்தில் காஞ்சீபுரததில் மாலோலவித்வத்ஸபை நடக்கப் போகிறது. அதற்கு அவசியம் எழுந்தருளி ஸபையை அலங்கரிக்க வேண்டும் என்று நியமித்தார். அங்நியமனத்தை சிரஸா வஹித்து காஞ்சீக்கு எழுந்தருளியாயிற்று. அங்கு மஹாவித்வான்கள் பலர் எழுந்தருளியிருந்தபடியால் அவர்களின் வாக்யார்த்தங்களைக்கேட்டு ஆனந்திக்க வேணடும் என்று இஞ்சிமேட்டு அழகியசிங்கர் திருவுள்ளம் பற்றியதை அநுஸரித்து ஸ்வாமியும் வாக்யார்த்தம் ஸாதிசதாயிற்று. அதைத் திருச்செவி சாற்றிய சதுச்சாஸ்திர வித்வானுகவும் ஆத்மகுணபூர்ணராயும், ஆசாரசீலராயும், எழுந்தருளியிருந்த திருக்கோட்டியூர் ஸ்வாமி முதலியவர்கள் மிகவும் ஸந்தோஷப்பட்டு அபிநந்திககும்படியிருந்தது.

லௌகிக ஸாமர்த்யம்

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் आचार्यकृत्याधिகாரத்தில் गो गोपायत्ययोग्यानां योग्यानां संप्रयच्छति। इममर्थं स मान्य: என்று ஸாதித்தபடி ஆசார்ய ஸ்தானத்தை வஹிப்பவர்களுககு லௌகிக ஸாமர்த்தியம் மிகவும் அவசியமாகும். அது நம் ஸ்வாமியிடம் நன்கு அமைந்துள்ளது. அநேக ஸந்தர்ப்பங்களில் ஸர்கார் மூலமாக ஊரில் சில ச்ரமங்கள் ஏற்பட்டபோது அதிகாரிகளுடன் பேசி தன்னுடைய ஸாமர்த்தியத்தால் அவர்களை வசீகரித்து கார்யங்களை நிறைவேற்றியுள்ளார். லௌகிக ப்ரமுகர்களும் ஸ்வாமியின் தேஜஸ்ஸிலும், குணங்களிலும் ஈடுபட்டு ஸ்வாமி நியமிப்பதைச் செய்து வருகிறார்கள் ''सत्यं ब्रूयात् ब्रूयात् प्रियं ब्रूयात्'' என்கிற படியே ஸ்வாமி எல்லோரிடமும் ஸத்யத்தையும், ஹிதத்தையும், ப்ரியத்தையுமே, பேசுவார். பேசும் பொழுது அவரவர்கள் மனதில் படும்படி யுச்திகளுடன் பேசுவார். இந்த சாதுர்யம் அங்யாத்ருசம். ஆகவே எல்லா வகுப்பினர்களும் ஸ்வாமியின் ஸாமர்த்ரயத்தில் ஈடுபட்டு ஸங்கல்பித்தகார்யங்களை நிறை வேற்றுகிறார்கள்.

தர்மசாஸ்த்ரபாண்டித்யமும் ஆகமபாண்டித்யமும்

இந்தஸ்வாமி ப்ராசீனத்தில் உள்ள தர்ம சாஸ்த்ரக்ரந்தங்களை ஆலோடனம் பண்ணியும், பல பெரியோர்களிடம் ஆசாரங்களை ஸம்ப்ரதாயமாகக் கேட்டும், விஷயங்களை நிஷ்கர்ஷித்து அழகாக ஸாதித்துக்கொண்டு வருவதைப் பார்த்து, ஸ்ரீ உ வே பண்டிதராஜ D.T. தாதாசாரியஸ்வாமி, ''தேவரீர்தான்தத் காலத்தில் தர்மசாஸ்த்ரவிஷயங்களை ஸம்சய மறஸாதிப்பதில் வல்லவர். ஆகையால் லோகோபகாரமாகத் தமிழில் தர்மசாஸ்திர விஷயமாக ஒருக்ரந்தம் அருளிச் செய்ய வேணடும்'' என்று கேட்க ஸ்வாமியும் ''ப்ராசீனசார ஸங்க்ரஹம்'' என்னும் க்ரந்தத்தை அருளிச் செய்தார். அதை D T தாதாசாரியர் ஸ்வாமியே வெளியிட்டார். பஞ்சாங்கம் கணிக்கும் சோதிடர்களும், தர்மசாஸ்த்ரங்களை வெளியிடும் விதவான்களும் அனுஷ்டாதாக்களும தங்களுக்கு வரும் ஸம்சயங்களை இந்த ஸ்வாமியிடம் கேட்டு நிர்ணயம்செய்து கொள்கிறார்கள். ஆகமத்தில் பண்டிதர்களான அர்ச்சகர்களும நம் ஸ்வாமியிடம் ஆகம விஷயங்களையும் கேட்டுத்தெளிந்து கொள்கிறார்கள். இதர சாஸ்த்ரங்களில் பாடம் சொல்ல பல ஸ்வாமிகள் இருப்பினும்

தர்ம சாஸ்த்ர விஷயங்களை நிஷ்க்ருஷ்ட மாகச் சொல்ல தத்காலத்தில் நம் ஸ்வாமி யைத் தவிர யாரும் இல்லை.

லௌகிக ப்ரமுகர்களுக்கு ஸ்வாமியிடம் உள்ள ஈடுபாடு

ஸ்வாமியின் ஜ்ஞானனுஷ்டானங்களையும் மேதாவிலாஸத்தையும் நேரில் பார்த்து வைதீகாபிமானியான பெடரல் கோர்ட் நீதிபதி S. வரதாசாரியர் ஸ்வாமி இவரை பல பேர்களுக்கு உபகாரமாக காஞ்சீபுரத்தில் எழுந்தருளி ஆசார்யகம்பண்ண வேண்டும் என்று ப்ரார்த்தித்தார். ஆனல் நம் ஸ்வாமி தம் ஆசார்யநியமனப்படி நாவல்பாக்கத்திலேயே எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்து வருகிறர். சில ஸமயங்களில் S. வரதாசாரியர் ஸ்வாமி நம் ஸ்வாமிக்கு உபகாரம் செய்துள்ளார். மாஜி ஹை கோர்ட்டு நீதிபதி ஸ்ரீ உ. வே. V.V. ஸ்ரீநிவாஸ அய்யங்காரும் ஸ்வாமியின் அநிதர ஸாதாரணமான வைதுஷ்யத்தைச் சொல்லி ஸ்வாமிக்கு ''தேசிக தர்சன துரந்தர'' என்னும் பிருதத்தை அளித்தார்.

பிறகு நம் அய்யாஸ்வாமி எழுந்தருளியிருக்கும் இடத்திலேயே ஒரு வித்வத ஸதஸ் நடத்த வேண்டும் என நினைத்து V V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ப்ரம்ஹோத் ஸவத்திற்கு சில வித்வான்களுடன எழுந்தருளி ஸபைக்கு என்ன பெயர் வைப்பது என்று யோசித்துக் கொண்டே இரவில் தூங்கும் போது ''ஹயக்ரீவனை உபாஸித்து இந்த ஊரில் எழுந்தருளியிருந்த அண்ணயார்ய மஹாதேசிகளின் திருநாமத்தையே வைக்கக் கடவீர்'' என்று பெருமாள் ஸ்வப்னத்தில் ஸாதிக்கவே அந்த ஸபைக்கு ''அண்ணயார்ய மஹா தேசிக வித்வத் ஸ்பா'' என்று பெயர் சூட்டினர். V. V. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் பரம பதித்தபிறகு இந்த ஸபைக்கு சிறிது குறைவு ஏற்பட்டது. உடனே வேதாந்த வித்யா நிதி என்றும், மதத்ரயபண்டிதர் என்றும் போற்றப்படும் A. V. கோபாலாசார்யர் ஸ்வாமி நம் ஸ்வாமியினிடம் உள்ள ப்ரதிபத்தியாலும், ஸ்வாமி வெளியூர் ஸபைகளுக்கு எழுந்தருள முடியாமலிருப்பதாலும், ஸ்வாமி எழுந்தருளியுள்ள இடத்தில் அவசியம் வித்வத் ஸபை நடக்க வேண்டும் என்று எணணி, அந்த ஸபை தொடர்ந்து நடக்க மூலதனம் வைத்தார்.

ஸ்வாமியின் ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவத்திற்கு எழுநதருளியிருந்த ஸ்ரீ உ. வே. D. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, இந்த ஸமயம் ஸ்வாமிக்குப் பொருத்தமான ஒருபிருதம் ஸமர்ப்பிக்கவேண்டும் என்று விதவான்களிடம் ப்ரார்தித்தார். அப்பொழுது அங்கு எழுந்தருளியிருந்த வித்வான அக்னி ஹோத்ரம் நாராயண தாதாசார்யஸ்வாமி, பண்டிதராஜ D. T. தாதாசார்யஸ்வாமி, வித்வான் V. R. S. தாதாசார்யஸ்வாமி, வித்வான் சைலிபாட்ராசார்ய ஸ்வாமி வித்வான் மதுராந்தகம் வீரராகவாசாரியஸ்வாமி முதலியவர்கள் சேர்ந்து ஆலோசித்து ''ராமானுஜஸித்தாந்த பாஸ்கர'' எனனும் பிருதத்தை ஸமர்ப்பிததார்கள்.

ஸ்வாமிதம் ஆசார்யனை ந்ருஸிம்ஹ தாதயார்ய மஹாதேசிகளின் (நாவல்பாக்கம் ஸ்தாமியின்) சரம கைங்கரியத்தை முதலில் இருந்து கடைசிவரை அனேக வித்வான் களுடன் கூடவே எழுந்தருளியிருந்து வெகு விமரிசையாக நடத்தி வைத்தார்.

ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்த க்ரந்தங்கள்

(1.) ந்யாய குஸுமாஞ்ஜலீ வ்யாக்யா ந்யாய வாஸனா (2.) வேதாந்த வைஜயந்தீ (3.) ஸூத்ரானுதுண்யஸிததி விமர்சம் (4) ப்ராசீன பாட பரித்ராணம் (5.) பஞ்சல

க்ஷணீ வ்யாக்யானம் (6.) தத்வமுக்தா கலாபவ்யாக்யானம். (7.) ப்ராசீன ஆசார ஸங்க்ரஹம் முதலிய க்ரந்தங்கள்.

அடியேன் பெற்ற நன்மைகள்

"निष्पानीये निरालंबे निश्छाये निरपाश्रये" என்கிறபடி சீலமில்லாச் சிறியனாக இருந்த அடியேனுக்கு ந்யாய மீமாம்ஸா சாஸ்த்ரங்களையும், வேதாந்த க்ரந்தங்களையும் ப்ரதம ஸ்ரீ பாஷ்யகாலக்ஷேப கோஷ்டியில் அந்வயிக்கத்திருவுள்ளம் பற்றி ஆஹார ஸௌகரியத்துடன் உபதேசித்து அடியேனை ஸ்வாமி கடாக்ஷித்து அருளியது அடியேனுடைய பாக்யமாகும்.

அதோடில்லாமல் அடியேன் பையன்கள் இருவரைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பிய போது, அடியேனைக் கூப்பிட்டு "இந்த காரியம் உன்பிதாமஹன் ஸ்ரீ ஸ்வாமியின் திருவுள்ளத்திற்கு உகப்பாக இருக்குமா? அவருக்கு உகப்பானதும், நம்வம்சத்திற்கு ஏற்றதுமான வித்யையே கற்பிக்க வேணடும் அவ்விதயையைக் கற்பிககாதே" என்று ஸாதிதது அவர்களுக்கு அக்ஷராப்யாஸம் முதற் கொண்டு अधीतसाङ्गसशिरस्कवेदस्य என்கிற ஸ்ரீ பாஷ்யோக்தியை அனுஸரித்து தான் கற்றபடியே ஸதாசார சிக்ஷணத்துடன் வேதாத்யயனத்தையும் தர்க்க மீமாம்ஸா சாஸ்த்ரங்களையும் பூர்ணமாகக் கற்பித்து, வேதாந்த வித்யையையும், कृपयानिस्पृहोवदेत् என்கிறபடி உபதேசித்தருளி அடியோங்களை ஒரு பொருளாக்கி அனுக்ரஹம் பண்ணியது விசேஷமாகக் குறிப்பிடத்தக்கது.

இது அடியேன் முன்னோர் செய்த ஸுக்ருத விசேஷமாகும். இந்த மஹோபகாரத்திற்கு அடியேன் என்ன உபகாரம் செய்வதென்று புரியாமல் இருந்து வருகிறேன். இம்மாதிரியாக இன்னும் பல குணங்கள் வாசாமகோசரமாக இருந்து வருகின்றன.

"मतिक्षयान्निवर्तन्ते न गोविन्दगुणक्षयात्" என்கிற கணக்கில் சிறிதும் அதிசயோக்தியில்லாமல் உள்ளபடி அடியேன் அனுபவித்ததை எழுதியுள்ளேன்.

இத்தகைய விசேஷ குணங்களை உடைய நம் ஸ்ரீ ஸ்வாமி நம் போன்றவர்களை மிகவும் நன்றாகத் திருத்திப் பணி கொண்டு பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளி யிருக்க வேண்டுமென்று பகவானைப்ப்ரார்திக்கிறேன்.

इत्थं श्रीवाससूरीन्द्र पौत्रो रामानुजाभवः ।
देवनाथार्यं शिष्योऽहं व्यलिखं चरितं सुधीः ॥



நானறிந்த நற்கிரிசைகள்

ஸ்ரீ உ. வே. வித்வான் சுந்தரராஜநாதாசார்யர் ஸ்வாமி
(லக்ஷ்மீபுரம்) சென்னை-14.

"यत्रैकाग्र्यं भवति भगवत्पादसेवार्चनादेः
यत्रैकान्त्यव्यवसितधियो यस्य कस्यापि लाभः ।
वासस्थानं तदिदं कृतिनां भाति वैकुंठ कल्प
प्रायो देशा मुनिभिरुदिताः प्रायिकौचित्यवन्तः ॥"

என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தபடி வெகு காலமாக மஹான்கள் எல்லோரும் எழுந்தருளியிருக்கும்படியானதும் ஜன்மபூமியுமான நாவல்பாக்கம் என்கிற அகரஹாரத்திலேயே நிரந்தர வாஸமாய் எழுந்தருளியிருக்கும் மஹாவித்வான் சதுர்வேத சதக்ரது அய்யா தேவநாதார்ய மஹாதேசிகனுடைய ம்ருதுபாஷணம், ஆழ்ந்த சாஸ்திர ஜ்ஞானம், வைராக்யம், அநுஷ்டானம், க்யாதிலாப பூஜைகளில் வெறுப்பு முதலிய ஆத்மகுணங்கள் யாவரும் அறிந்தனவே.

"सन्तोषार्थं विमृशति मुहुः सद्भिरध्यात्मविद्याम"

என்கிறபடி ஸ்ரீபாஷ்யகாரருடைய ஆஜ்ஞையை அநுஸரித்து "வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் போக்கினேன போது" என்கிறபடி ஸ்வரூபாநுரூபமாய் தினந்தோறும் வேதாந்த காலக்ஷேபங்களை ஸாதித்துக்கொண்டும், அடிக்கடி வித்வத் ஸதஸ்ஸுகளை நடத்திப் பல வித்வான்களோடு வேதாந்த விசாரம் செய்து, ஸம்ப்ரதாயார்த்தங்களை நிர்த்தாரணம் செய்ததுமன்றி அவ்வப்பொழுது அவற்றை க்ரந்தமுகமாக ஸ்வாமி வெளியிட்டிருப்பதும் ஸுப்ரஸித்தம்.

மேலும் எம்பெருமானுர் நியமித்தவண்ணம், தினந்தோறும் ப்ருஹ்ம யஜ்ஞ ப்ரச்ன பாராயணம் பண்ணுவதுடன், அநேக வித்யார்த்திகளுக்கு வேதாத்யயனம் செய்து வைத்தும், ஸந்நிதியில் திவ்யப்ரபந்தாநுஸந்தானம் செய்து கொண்டும் எழுந்தருளியிருக்கிறபடி.

எல்லாவற்றுக்கும் மேலாக, பரமைகாந்திகளுக்கு அர்ச்சாவதாரானுபவம் பரமோத்தேச்யம் என்கிற தேசிகன் திருவுள்ளத்தையனுஸரித்து, ஸ்ரீ ந்ருஸிம்ஹதாதயார்ய மஹாதேசிகன் "वैकुण्ठवासेऽपि नमेऽभिलाषः" என்று பேரருளாளனிடம் பேரன்பு பூண்டிருந்தாற்போல் நம் ஸ்வாமியும் நாவல்பாக்கத்தில் பக்தானுக்ரஹார்த்தமாக நித்யானுபாவ்யனாய் அநாதிகாலமாய் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமுடையானை ஆபாத சூடமாய் அனுபவித்து அவ்வனுபவ பரீவாஹமாக 'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் நாம்' என்று திருவுள்ளம் பற்றி आपीठात् मौलि पर्यन्तं पश्यतः पुरुषोत्तमम् என்கிற ரீதியில் சுபாச்ரய சிந்தனத்திற்கு அநுகுணமாக ரஜதாதிகளாலே

எம்பெருமானுடைய திவ்ய மங்கள ப்ரதிஷ்டை செய்துவைத்து அமுது படிக்கு வேண்டிய ஸெகர்யங்களை ஏற்படுத்தி, பெரிய ஸ்வாமி ஸ்ரீமத் அணணயார்ய மஹாதேசிகன் சில திவ்ய தேசங்களில் ரதாதி நிர்மாணம் செய்தது போல இங்கும் விபவானுகுணமாக சில ஆஸ்திகர்களைக் கொண்டு திருததேர், கோபுர மண்டபாதிகள் நந்தவனம் முதலியவற்றை நூதனமாய் நிர்மாணித்து, பகவன் முகோல்லாஸத்தைப்பெற்று, பாமரர் வஸ்தர் பூஷணுதிகளிலும் மற்றவற்றிலும் செலுத்தும் அனபிலும் பனமடங்கு அன்பை, மற்றை நங்காமங்கள் மாற்று, என்கிறபடி பகவானிடம் செலுத்தி ஆழ்நது கிடப்பது நம் ஸ்வாமியின் தனிச்சிறப்பு.

"மண்மிசையோனிகள் தோறும்பிறந்து எங்கள்மாதவனே
கண்ணுறநிற்கிலும் காணகில்லா உலகோர்களெல்லாம்
அண்ணலிராமாநுசன் வந்துதோன்றிய வப்பொழுதே
நண்ணருஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே"

என்பது போல திருவாதிரை நன்னாளில் அபர பாஷ்யகாரராக அவதரித்து, தேசிக தர்சன ஸ்தாபகாராயிருந்து, பிரகிருதம் உலகில் உள்ள அநேக சேதனர்களை உஜ்ஜிவிப்பித்து, ஸம்ப்ரதாய ப்ரவசனம் செய்துகொண்டு இருக்கும் நம் ஆசார்ய ஸார்வ பௌமர் தம் த்ருட ஸங்கலபத்தால் எம்பெருமானுக்குப பல கைங்கர்யங்களைசசெய்து கொண்டும், நம் போன்றவரை அனுக்ரஹிததும் பலலாண்டு பல்லாண்டு எழுந்தருளியிருக்கவேண்டும் என்று எல்லாம் வல்ல ஈசனைப் ப்ரார்த்திக்கிறேன்.

இனிய நினைவலைகள்

ஸ்ரீ உ. வே. கொத்திமங்கலம் வித்வான் கோபாலசக்ரவர்த்தி

ஸ்ரீ ஸ்வாமியின் சதாபிஷேகம் பற்றிய மலரில் மஹான்களும் பண்டித சிஷ்யர்களும் தங்கள் தங்கள் அனுபவங்களைத் தெளிவாகவும் அனைவரும் அனுபவித்து மகிழும்படியும் எழுதக்கூடும். ஆயினும் கடையேனான அடியேன் பெற்ற நன்மையை விண்ணப்பிக்க விழையும்போது நினைவலைகள் 25 ஆண்டுகளுக்குப்பின்னோக்கி வீசின.

அன்று அடியேன் ஸம்ஸ்க்ருத வித்யாலயம் ஒன்றிலிருந்து கட்டாயமாக வெளியேற வேண்டிய சூழ்நிலையில் வெளியேறி, திக்குத்தெரியாமையால் நடுக்கடலில் கலஞ்செலுத்த வகையறியாது திண்டாடும் மீகாமனைப்போல் திண்டாடிக் கொண்டு கொத்திமங்கலத்திலேயே ஓராண்டுகாலம் வீணாகக்கழித்தேன்.

அன்றைய நாள்வரை ஸ்ரீ ஸ்வாமியை அடியேன் தண்டன் ஸமர்ப்பித்ததே இல்லை. அடியேனும் யார் மூலமாகவும் ஸ்வாமிக்கு அடியேனது நிலையை விண்ணப்பிக்கவுமில்லை.

ஆயினும் உம்மையில்யான் செய்த நல்வினையின் பயனாக ஸ்ரீ ஸ்வாமியே "நம்மைச் சேர்ந்த பையன வித்யாலயத்தைவிட்டு விட்டு ஊரில் வீணாகக்காலம் கழிக்கிறானே. எப்படியாவது அவனை வாசித்துப்பூர்த்தி பண்ணும்படி செய்யவேண்டும்" என்று அடியேனுடைய மாதுலரான ஸ்ரீ வரததாதாசாரியர் மூலம் நியமித்தார். அந்நிலையில் அடியேனது சிறிய மாதாமஹனான ஸ்ரீ அக்னி ஹோத்ரம் ஸ்வாமியின் ஷஷ்ட்யப்த பூர்த்திக்காக அடியேன் நாவல்பாக்கம் போந்து ஸ்வாமியைப் பணிந்து நின்றேன். ஸ்வாமியின க்ருபையால் வாசிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. ப்ரவேச பரிக்ஷைக்குப் போக ஸ்வாமியின் அனுக்ரஹத்தை நாடினேன்.

ஸ்வாமிக்கு அவகாசமில்லை நித்யகார்மானுஷ்டானத்திற்குப் பிறகு ஸ்ரீ உ. வே. வரததாதாசாரியருக்கு தத்வமுக்தா கலாபம் காலக்ஷேபம் ஸாதிக்கும்படி இருந்தது. பிறகு மாத்யாஹ்னிக ஸ்நானம் திருவாராதன, வைச்வதேவாதிகள் முடிந்ததும், வலயப்பேட்டை ராமானுஜதாதாசாரியர் ஸ்வாமி ஸன்னிதியில் ஸ்ரீ பாஷ்ய சிந்தனை செய்ய வருவார். நரஸிம்ஹதாதாசாரியர் தர்கத்தில் உத்க்ரந்தங்களை ஸ்வாமி ஸன்னிதியில் அதிகரித்துக் கொண்டிருந்தார்.

இத்தகைய நிலையிலும் க்ருபைகொண்டு அடியேனுடைய மந்தமதிக்குப் புரியுமாறு முக்தாவளியை ஸாதித்தாயிற்று. ஸ்வாமியின் அனுக்ரஹத்தால் ப்ரவேசபரீக்ஷையில் உத்தீர்ணனானேன். விராமங்களில் தினசரீயம் அவயவம் போன்ற க்ரந்தங்களையும் அதிகரித்தேன். ஸ்ரீ ந்யாயபரிசுத்தியை ஸ்வாமியிடம் ஸேவித்தேன்.

தம்ச்ரமத்தைப் பாராட்டாமல் பிறரது நன்மையைக் கருதும் ஸ்வாமிகளைக் கேட்டலே இக்காலத்தில் அரிது. ஸ்ரீ பாஷ்யகாரரது முதல் நியமனமான ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவித்து ப்ரவ்ருத்திப்பித்தலையே கடமையாகக் கொண்டு நம்ஸ்வாமி எழுந்தருளியிருக்கிறார்.

நம்ஸ்வாமியின் பரிச்ரமம் வீணாகவில்லை. ஸ்வாமியிடம் ஸாமான்ய சாஸ்த்ரங்களை யதிகரித்தவர்களும் வேதாந்த காலக்ஷேபம் செயதவர்களும் பலரிருக்கின்றனர். அவர்களில் ஸ்ரீ. உ வே N.S. ராமானுஜதாதாசாரியர் ஸ்வாமி போன்றவர்கள் நான்கு சாஸ்த்ரங்களிலும் த்ரிமதஸ்தர்களும் ஒப்புக்கொண்டு வியக்குமளவு பாண்டித்யம் பெற்று குரு: प्रकाशयेद्धीमान् என்ற கணக்கில் எழுந்தருளியுள்ளனர் தலை முறையாக வரும் ஜ்ஞானம் என்னும் நிதி இன்னும் ஒரு தலைமுறைக்கு நீடித்து நிற்குமாறு ஸ்வாமி அனுக்ரஹித்துள்ளார். ஸ்ரீ ஸ்வாமியை ஓரளவு அறிந்தவர்கள் கூட அவரது நித்யகர்மானுஷ்டானங்களையும் சாஸ்த்ரப்ரவசனங்களையும் கண்டு

“ निर्विष्टं यतिसार्वभौमवचसामावृत्तिभिर्यौवन
निर्धूतेतर पारतन्त्र्य निरताः नीताः सुखंवासराः ।
अङ्गीकृत्यसतां प्रसत्तिमसतां गर्वोऽपि निर्वापितः
शेषायुष्यपि शेषिदम्पति दयादीक्षामुदीक्षामहे ॥

என்ற ஸ்ரீ தேசிக ஸ்ரீ ஸூக்தியை நினைவு கூர்வர்.

